Vol No:02
Issue No: 04

# அவிர் 08

கலை இலக்கிய காலாண்டு இதழ்



ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான SRI LANKA PEN CLUB வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKA PEN CLUB இன் 3வது தேசிய மாநாட்டுப் புகைப்படங்கள் - 2023















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவரி 08

கலை இலக்கிய காலாண்டு இதழ் ஒக்டோபர் – டிசெம்பர் 2023


ஆசிரியர் குழு :


நிர்வாக ஆசிரியர் : சம்மாந்துறை மஷ்ஹூறா

அவரி –08 ற்கான இதழ் ஆசிரியர் : பர்ஸானா எம்.பி – நிந்தவூர்

செயற்குழு :

ஷாமென் நிஸாம்டீன் - கட்டுகஸ்தோட்டை
என்.எம். ஆரிபா – ஏறாவூர்
லைலா அக்ஷியா – மொரட்டுவ
Dr. ஜலீலா முஸம்மில் - ஏறாவூர்
வபீரா வஃபீ – கொழும்பு
அறபா மன்சூர் - கண்டி
முப்லிஹா பிர்தௌஸ் - காத்தான்குடி
சுசானா முனாஸ் - மூதூர்
அஸ்மா தீன் - கம்பளை
பாரா தாஹிர் - மாவனெல்ல
மர்ளியா ஸக்காப் - திருகோணமலை
ஹக்கீமா அமீனுத்தீன் - ஓட்டமாவடி



நிர்வாக அலுவலகம் : மஷ்ஹூறா மஹால், 4/C/5 லேக் வீதி. மருதமுனை -04.
0765363434 /0770636559 / 0672261044


ISSN : 2961 - 5194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர நோக்கு

**கலாசாரத்தினூடாக கலை இலக்கியங்களைக்**
**கட்டியெழுப்புவதும்,**
**ஆற்றலுள்ள பெண்களை ஆற்றலுலகில் சஞ்சரிக்கச் செய்வதும்.**

## நோக்கக் கூற்று

**முஸ்லிம் பெண் எழுத்தாளர்களுக்கும், கலைஞர்களுக்கும் களங்கள்**
**அமைத்து அவர்தம் ஆற்றல்களை மேம்படுத்தல்.**

## SRI LANKA PEN CLUB கீதம்

ஆற்றலும் அறிவும் ஆளுமைச் செறிவும்
அனைத்துயர் பெண்களே நாங்கள்
Sri Lanka Pen Club - III

பொறுமையில் பூமி கருணையில் மாரி
கருவினில் திருவை சுமந்திடும் மாதா...
வெறுமையில் கூட செழுமையாய் நேசம்
வளர்த்திடும் ஜீவன் சுமைதாங்கி...

கலைகளும் செய்வோம்
சமையலும் செய்வோம்
கரங்களில் எழுதுகோல் உண்டு...
சிலைகளாய் எம்மை எண்ணிடும் கூட்ட
சிந்தனைக் கிளர்வில் தளைப்போம்...

உலகம் எங்கும் துயருறும் நாங்கள்
உயிர்த்திடும் பீனிக்ஸ் பறவை...
கலாசார மீறல்களற்ற தோருயர்வில்
களித்திடும் இலக்கில் நிறைவோம்...

அகமெனும் கடலின் கரையே விழியாய்
ஆனதெம் வாழ்வு உலகில்...
சிதைத்திடும் போதும் ஒருதுளி மழையில்
தளைத்திடும் புல்லென நிமிர்வோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...

**கவிதைகள்.**


- ♦ நியாயம் கேட்கும் பொழுது வரை – நிந்தவூர் பர்ஸானா எம்.பி//08
- ♦ ஆசிரியை – றியாஸா எம் ஸவாஹிர்//11
- ♦ கண்ணாடி விம்பங்கள் –எஸ் யூ கமர்ஜான்//14
- ♦ ஆயிரம் கேள்விகளுடன் – வஸ்மியா கபூர்//18
- ♦ கருக்கலைந்த கனவுகள் – நிஸ்மியா நிஸாம் – பேருவளை//18
- ♦ வீழ்வேன் என்று நினைத்தாயோ ? ஜஸ்றா ஜலீல் –மலேசியா//21
- ♦ காதலித்துப் பாருங்கள் – சித்தி ஜெஸீனா நிஸ்ரின்//25
- ♦ யதார்த்தம் – சப்றா இல்முதீன் – அட்டாளைச்சேனை//27
- ♦ யார் இருக்கின்றார்கள் – பாத்திமா ஹுஸைனா அகமட் //38
- ♦ கண்ணீர் அஞ்சலி – சம்மாந்துறை மசூறா//40
- ♦ தந்தை எனும் பெரு விருட்சம் – முபீஹா பிர்தௌஸ்//43
- ♦ அங்கீகாரம் – ஹுமதா ஏ. கப்பார்//53
- ♦ நீயின்றியேது நான் – யாழ் றமீஸா யாஸீன் //56
- ♦ ஹைக்கூ கவிதை – வபிரா வபி//23
- ♦ கிராமிய நெஞ்சம் – பஸ்லா பர்ஸான் //57


**சிறுகதைகள்**


- ♦ பாலை வெயில் – மீராவோடை றஹீமா இன்சார்//09
- ♦ கனவு மெய்ப்படல் வேண்டும் – எஸ். ஃபாயிஸா அலி//22
- ♦ தூக்கம் கலைந்தது – சுஸானா முனாஸ்//41
- ♦ முள்வேலிப்பூக்கள் – சுஹைதா ஏ கரீம்//44


**நேர்காணல்**


- ♦ கலாபூஷணம் புன்ஸல்லாவை இஸ்மாலிகா ராஜா //12
(நேர்கண்டவர் – ஷாமென் நிஷாம்தீன்)


**கட்டுரைகள்**


- ♦ நான் அழகாக இல்லை – கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி//15
- ♦ தொழிலுலகிற்கும் குடும்பக் கட்டமைப்பிற்கும் இடையில் பெண் //17
– ஜனிறா ஜலீல்
- ♦ சமூக வலைத்தளங்கள் சாபமா? வரமா? //19
– ஹாஜரா கலீலுர் றஹ்மான்
- ♦ பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதல் //28
– Dr. ஜலீலா முஸம்மில்
- ♦ பிரதேச செயலகமும் கலாசார செயற்பாடுகளும் – எம்.ஐ. றமீஸ் நிஸா//37
- ♦ பொதிகளில் /சாடிகளில் பயிர்ச் செய்கை – மு.ஹு. முர்ஷிதா ஷிரீன் //39
- ♦ காப்பான்கள் – லைலா அக்ஷியா //46
- ♦ ஆசிரியத்துவம் என்பது– நளீபா அஸீஸ் அஸீம்//49
- ♦ நினைவுகளின் நிழலில் – கலாபூஷணம் அருபா மன்சூர்//50
- ♦ வாழ்நாள் முழுவதும் கல்வி – கலாநிதி எம்.எம். மன்சூறா//32


**சமையல்**


- ♦ கரட் பிட்டும் கருவாட்டுத் தொக்கும் – மிஸ்ரியா அமீன்//26


**நூல் அறிமுகம்**


- ♦ மனிதும் கண்டேன் – சித்தி மிஸ்ரியா அமீன்//48


**மொழி பெயர்ப்பு கவிதை**


- ♦ றியாஸா எம் ஸவாஹிர் (மரீனா இல்யாஸ்)//52


**ஏனையவை**


- ♦ 2023 ல் பென் கிளப் போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம்//16
- ♦ 03வது தேசிய மாநாட்டில் விருதுகளைப் பெற்றுக் கொண்டோர் விபரம்//54
- ♦ பொலிஸ் நிலையம் செல்லத் தேவை இல்லை//26
- ♦ ஏ.ஐ. அறிவியலும் பாதுகாப்பும் //24
- ♦ நேரத்தை வீணாக்காதீர்கள்//36
- ♦ மண்ணறைகளில் ஒலிக்கும் கைசேதமிக்க வசனங்கள்//35
- ♦ இயற்கை மருத்துவம்//36
- ♦ உடல் எடையை குறைக்க//34
- ♦ தேனீக்கள் பற்றிய சுவாரஸ்யம்//31
- ♦ சிந்தனைக்கு...//34
- ♦ மண்ணறை ஓசைகள் //35
- ♦ வீட்டிலிருக்கும் பெண்களுக்கு விற்றமின் D குறைபாடா? //51
- ♦ எல்லா அவரிகளினதும் அட்டைப் படங்கள் //58
- ♦ பொன் மொழிகள்(பக்கங்களின் இடையில்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**நிர்வாக ஆசிரியர் இலக்கிய வித்தகர்**
**சம்மாந்துறை மஷூறா (JP) அவர்களிடமிருந்து...**

அவரி எட்டாவது இதழில் உங்களை சந்திப்பதில் பேருவகை அடைகிறேன்.

SRI LANKA PEN CLUB தனது உறுப்பினர்களுக்கு களம் தரவேண்டுமென்ற நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட அவரி காலாண்டு சஞ்சிகை இரண்டுவருடங்களைப் பூர்த்தி செய்கிறதென்பது பிரமிப்பைத் தருகிறது.

"உலகம் ஆயிரம் சொல்லட்டுமே உனக்கு நீதான் நீதிபதி" என்பதற்கு ஒப்ப அத்தனை தடைகளையும் சட்டை செய்யாமல் கடந்து சென்றதில் எமது அமைப்பும் அவரி சஞ்சிகையும் இலக்கை எய்தி வருகிறன.

ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொருவரை சஞ்சிகையாசிரியராக உள்வாங்கும் பொருட்டு எட்டாவது அவரியை நிந்தவூர் எம்.பி.பர்ஸானா பொறுப்பேற்றார். பர்ஸானா குடும்பநல மருத்துவ மாதுவாக தொழில் புரிகிறார். இவரது தொழில் இலக்கியச் செயற்பாட்டிற்கு சாதகமானதா என்பது பற்றி நான் ஐயுற்றிருக்கிறேன். ஆயினும் அந்த ஐயம் நியாயமில்லை என்பதை பர்ஸானா நிரூபித்திருக்கிறார்.

நீண்டகாலங்களாக தனது ஆற்றல்களை குடத்துள்ளிட்ட தீபம்போலவே மறைத்து வைத்திருந்தார். எமது அமைப்பில் இணைந்து கொண்டபின் மடைதிறந்த வெள்ளம்போல இவரது ஆற்றல்கள் பீறிட்டன.

சிறந்த முறையில் மொழியினை கையாளக்கூடியவர். சொற்களை உயிரோட்டமாக பாய்ச்சக் கூடியவர். இது போதாதா இந்தப் பணியை ஒப்படைக்க? எமது அமைப்பின் பொருளாளராகவும் செயற்படுகிறார்.


பர்ஸானா இலக்கிய உலகிற்கு புதிய வருகை என்றாலும் இவரது வெளிப்பாடுகளில் காத்திரமும் தேர்ச்சியும் கண்டிருக்கிறேன். இந்த சஞ்சிகையை அவரிடம் கையளித்ததில் நம்பிக்கை கொண்டேன். இனி வாசகர்கள்தான் மதிப்பீடு செய்ய வேண்டும்.

சஞ்சிகை வெளியிடுதலென்பது சவாலான விடயம் என்பதை அது சார்ந்தவர்கள் புரிந்து கொள்வார்கள். சவாலை வெற்றி கொண்டதில் எமது அமைப்பு கர்வமடைகிறது.

வாசியுங்கள். விமர்சியுங்கள். எமது அமைப்பில் இணைந்து ஆற்றலுள்ள பெண்கள் யாவரும் அவரிக்கு எழுதலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அவரி 08 வது இதழுக்கான ஆசிரியர்**

**நிந்தவூர் பர்ஸானா எம் பி அவர்களிடமிருந்து...**

Sri Lanka Pen Club கொண்டு வரும் அவரியின் எட்டாவது இதழுக்கு ஆசிரியராக இருந்து திறண்பட அதனை கொண்டு வருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சிறு சஞ்சிகைகளைப் பொறுத்தவரை அவற்றின் வெற்றி இடைவிடாது இயங்குவதிலேயே இருக்கின்றதெனலாம். அந்த வகையில் 01வது இதழில் ஆரம்பித்த இச்சஞ்சிகை 03 மாதங்களுக்கு ஒரு முறை என இடையில் எந்த காலதாமதமும் இன்றி வெளிவருவதே அவரியின் பெரு வெற்றி எனலாம். அதிலும் குறிப்பாக ஒவ்வொரு இதழுக்கும் ஒரு ஆசிரியர் என்ற திட்டமும் உண்மையில் அதன் தொடர் இயக்கத்துக்கு மிக முக்கியமான காரணங்களில் ஒன்றெனலாம்.

ஒரு சிற்றிதழைக் கொண்டு வருவதின் சிரமம் பற்றி பல வகையிலும் கேள்வியுற்றிருந்தாலும் அதனை நாம் கையில் எடுத்து செய்யும் போதுதான் அந்த சிரமங்கள் என்ன என்பதை சரியாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இருந்தாலும் அந்த சிரமங்களையெல்லாம் தாண்டி இந்த இதழை வெற்றிகரமாக கொண்டு வந்திருக்கிறேன்.

இவ்விதழை வெளிக் கொணர்வதில் உரிய நேரத்திற்கு எனக்கு படைப்புகளை தந்துதவிய மற்றும் இதழ் வடிவமைப்பில் தனது உழைப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கிய அனைவருக்கும் இதழாசிரியர் என்ற வகையில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் முயற்சிகள் என்னைக் கைவிட்டதுண்டு

ஆனால் முயற்சிப்பதை நான்

என்றும் கைவிட்டதில்லை.

**- நியூட்டன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயம் கேட்கும் பொழுது வரை....

பர்ஸானா எம்.பி
நிந்தவூர்

**தூக்கிடப்பட்ட
அந்த உயிருக்காக...**



தத்ரூபமாய்
உயர்தரம் கொண்டதாய்
ஒரு ஓவியம் வரைந்தேன்

கடல் தன் அலையை அள்ளி வீசியது அதில்.
சல சலத்த நீரோடையும்
பாய்ந்தோடியது அதில்.
என் ஓவியம் அத்தனைஅழகானது.

கொய்யாமரக் கிழைககளில் கிளிகள்
பழங்களைங்களைக்
கொத்துகின்றது.
மாங்குயில்கள் கூவி அழைங்கின்றது.
பார்த்துப் பார்த்து அழகாய் வரைந்த ஓவியம்
அது.

ஆயினும் நிறங்களைப்பூச
என்னால் முடியவில்லை.
அதிசிறப்பான நிறங்கள் பற்றியும் அதனை
ஓவியத்துக்கு சரியாய் பூசுவது பற்றியும்
நானறியேன்.

என் கைகளுக்குள் விரிந்து நின்ற
அழகோவியத்தை
ஞானம் நிறைந்த பேரோவியனிடம்
ஒப்படைத்தேன்
அதை இன்னும் அற்புதமாக்க.

இப்போதவன் நிறங்களை
அள்ளி அள்ளிப் பூசுகின்றான்.
தேடலுள்ள கடல் அலையை அவன்
காண வில்லை
ஆங்காங்கே பூத்துக் குலுங்கிய ரோஜாவை
அவன் காண வில்லை
அங்கும் இங்குமாய்
குறுக்கும் நெடுக்குமாய் நிறங்களை அள்ளி
வீசுகிறான்.

மரத்திற்கு மஞ்சளும்
கடலுக்கு சிவப்பும் தெளிக்கின்றான்.
ஓவியம் அழுகின்றது.

பாடும் பறவைகளையும்
சிரிக்கும் மலர்களையும் ஓடும் நதிகளையும்
குருவிகளையும்
பச்சை நிறக் காடுகளையும்
அவன் கொன்றுவிட்டிருந்தான்.

என் தத்ரூபம் விம்மி
வன்நிறங்களால் அழுகிறது ஓவியம்.

ஓவியத்தின் இயல்பினில் கயிறு திரித்து
கைகளுக்குள் கசக்கி
கால்களுக்குள் நசுக்கி
அவன் தீட்டிய வர்ணங்கள்
காய்வதற்கு
கழிவறையில் தூக்குக் கயிறிட்டு தொங்க
விடுகிறான்...

ஓவியத்தோடு சேர்ந்து
நானும் உயிர் நீத்துப்போகிறேன்.

கொடூர முட்டாளை ஞானியென்று
அடையாளப்படுத்தியது
எனது தவறா...சமூகம் செய்த தவறா???

கயிற்றினில் தொங்கி
மண்றைக்குள் புதைந்த என் ஓவியம்
சுவர்க்கத்தின் மண்டபத்தில்
மாட்டி வைக்கப்படும் நாளில்
நான் நியாயம் கேட்டுக் கொள்கிறேன்.

என் ஓவியத்தின் அழகாலும்
வாசத்தாலும் சுவர்க்கம் அலங்கரிக்கப்படும்
அப்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலை வெயில்...

மீராவோடை - றஹீமா இன்சார்

(சிறுகதை)

குளிர் தென்றலில் பூத்துக் குலுங்கும் வண்ணமயமான மலர்களில் தேனை பருகித்திளைக்கும் வண்டுகளின் ரீங்கார இசையிடையே காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் மெல்ல பட்டுத் தெறிக்கையில் பூஞ்சோலைக் கிராமம் விழித்துக் கொள்கிறது.கிராமத்தைப் போலவே மக்களும் அதிகாலையிலேயே துயில் கலைந்து தம் பணிகளைத் தொடங்கினர்.

வீதியெல்லாம் வெள்ளைக்கொக்குகளின் சஞ்சரிப்பாய் மாணவர்களின் பவனி பாடசாலையின் ஆரம்பத்தை பறைசாற்றிக் கொண்டிருந்தது. இவை எவற்றிற்கும் சம்பந்தம் இல்லாதவன் போல் ஹரீஸ் போர்வைக்குள் சுருண்டு தூங்கிக் கொண்டிருந்தான். சீனத் ஹரீஸ் அருகே சென்று தனது வழமையான புராணத்தை தொடங்கினாள்...

"ஹரீஸ்...ஹரீஸ்...எழுந்திருப்பா

ஸ்கூலுக்கு டைமாச்சி... சேர் நேத்தும் கோல் எடுத்து இன்டைக்கி கட்டாயம் வரச் சொன்னார்" என மகனை எழுப்பினாள்.

"சும்மா போங்கம்மா..எனக்கு தூக்கம் வருது.ஸ்கூலுக்குப் போக ஏலாண்டு எத்தன முற சொல்லற...உங்களுக்கு ஒண்டும் விளங்குதில்ல..."

அவன் வார்த்தைகள் நீண்டன. பெற்றவளின் ஆதங்கத்தை மதியாது பேசிய ஹரீஸின் குரல் கேட்டு நவாஸ் வெளிய வந்தபடி "ஹரீஸ் இன்னும் கொஞ்ச காலம் தான்

இருக்கு படிச்சி முடிச்சா நாங்க உன்ன தொல்ல பண்ண மாட்டம் வெயில்ல என்னப் போல கஸ்ட்ப்படாம இருக்கலாம் மக" என்ற நவாஸின் சொற்கள் ஹரீஸிக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

"இஞ்சப்பாருங்க உங்க ரெண்டு பேருக்கும் அந்த சேர்மாருக்கும் சொல்றன் நான் வெளிநாடு போகப் போறண்டு எத்தன முறையோ சொல்லிட்டன் திரும்பத் திரும்ப படிக்க சொல்லாதிங்க. நான் வசதியா இருக்க என்ட பிரணட்ஸ் மாதிரி வெளிநாடு போகனும்.சும்மா தொண தொணக்காம போங்கப்பம்"

என்றபடி மீண்டும் போர்வையை இழுத்துப் போர்த்தினான். ஹரீஸ் நன்றாகப் படிக்கும் மாணவன். உயர் தரத்தில் வர்த்தகப் பிரிவில் கற்றுக் கொண்டிருந்தவனுக்கு நண்பர்களின் பகட்டு பேச்சும் ஆடம்பரம் ஆசையும் அவனை புரட்டி விட்டது. ஆசிரியர் பெற்றோர்களின் - முயற்சி செவிடன் காதில் ஊதிய சங்கு போல் ஆனது. வெளிநாட்டு மோகம் ஹரீஸ் முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணா மூச்சு ஆடியது. காலம் யாருக்காகவும் காத்திருக்காது உருண்டோடியது. கல்வி அவனை விட்டு தூரமாகியது.

"உம்மா...உம்மா..." - சீனத்தை அழைத்த படி ஓடி வந்தான் ஹரீஸ்.

"என்ன ஹரீஸ் இவ்வளவு உற்சாகமா ஓடி வாரிங்க" என சீனத் தன் சேலைத் தலைப்பால் முகத்தை துடைத்தபடி சமையலறையில் இருந்து வெளியே வந்தாள்.

"ரெம்ப சந்தோசமா இருக்குமா என்ட பிரண்ஸ் இருக்கிற சொக்லெட் கம்பனில மெனெஜர் வேல ஒன்டு இருக்காம் என்ன வரச்சொல்றான் நான் போகப் போறன் நீங்க அஞ்சி லட்சம் காசி தாங்க" என சர்வசாதாரணமாக கூறினான்.

"யா அல்லாஹ் அஞ்சி லட்சமா நான் எப்படிப்பா எடுக்கிற ?" என அதிர்ந்து போய் நின்றானள் சீனத். ஹரீஸின் காதில் அது விழவே இல்லை. ஒற்றைக்காலில் நின்றான். பெண் பிள்ளைகளின் திருமணத்திற்காக சேர்த்து வைத்த நகைநட்டு, பணம் வட்டிக்கு கடன் என ஓடி ஓடி திரட்டினாள். ஹரீஸின் நீண்ட கனவும் நிறைவேற கட்டார் நோக்கி கோட் ,சூட், டை,சூ என ஏகப்பட்ட பொருட்களை சுமந்துவனாக மெனேஜர் கனவையும் சுமந்து கொண்டு பறந்தான்.

விமான நிலையத்தில் ஒரு அறபி வந்து ஹரீஸை அடையாளம் கண்டு காரில் அழைத்து சென்றார். நீண்டதொரு பயணம் பாலைவனத்திடையே புழுதியை வாரி இறைத்துக்குக் கொண்டு சென்று மரக்கொட்டகை ஒன்றின் முன் நின்றது.

"என்ன இங்க வந்து நிற்கீங்க கம்பனிக்கு இன்னும் போகனுமா?" என வினவினான் ஹரீஸ்.

"இது தான் உங்க கம்பனி இங்க தான் உங்களுக்கு வேலை" என்ற அந்த அதிகாரி அங்கு நின்ற ஒருவரைப் பார்த்து "எங்கே மெனேஜர்?" என்றார். ஆபிரிக்க நிறத்தையும் தோற்கடிக்கும் நிறம் பாலை வெயில் அத்தனை பதம் பார்த்திருக்கிறது. ஒரு இளைஞன் ஓடி வந்து

"ஒட்டகை மேய்க்கப் போய் இருக்கார்" என்றான். ஹரீஸிக்கு இதயம் படபடக்க ஆரம்பித்தது. மெனேஜர் ஒட்டகம் மேய்க்கிறாரா மனதிற்குள் போராட்டம். மரக்கொட்டகையை தாண்டி நடந்தவரைத் தொடர்ந்தான் ஹரீஸ். ஒட்டகைகளின் நடுவே நண்பன். அவனிடம் சென்ற அந்த அதிகாரி "இவர் உங்களுக்கு துணையா பொஸ் அனுப்பி இருக்கார் நல்லா வேல செய்ய வைக்கிறது உங்க பொறுப்பு" என்றவர் காரில் ஏறினார். கார் பாலை வெயிலை கிழித்துக் கொண்டு புழுதியை அள்ளி வீசியபடி பறந்தது.

"என்னடா சொக்லேட் கம்பனி மெனேஜர் எனடு சொல்லித் தானே என்ன எடுத்தான்.... சிறாஜ் என்னடா இது" ஏன்?

ஏமாற்றம், தோல்வி என ஒவ்வொன்றும் அவனை துன்புறுத்தியது.

"நாங்களும் அப்படி நினச்சி தான் வந்தம் பெரிய வேலைக்கு படிச்சவங்கள வச்சிருங்காங்க நம்மல ஏமாத்தி பாலை வனத்தில் ஒட்டகம் மேய்க்க விடுராங்க" என கண்ணீர் மல்க நின்றான் அவன்.

"அப்ப சிறாஜ் இன்ஜினியர் தானே" என ஹரீஸ் இழுத்தான்." என்விரோன்மென்டல் இன்ஜினியர்ன்டா குப்ப அள்றவங்களாம் ஒட்டகச் சாணத்தையெல்லாம் சிறாஜ் மெசின்ல எடுக்க வருவான் இதான் வெளிநாட்டு வாழ்க்கை ஊர்ல யாரிட்டயும் சொல்லிடாத கைநிறைய காசி வருது அவங்க சந்தோமா இருக்கட்டும்" என முடித்தான்.

ஹரீஸ் அதிகாலை எழும்பினான் அவனுக்குரிய வேலைக்கு தயாரானான். ஒட்டக கொட்டகையில் சாணிகளை அள்ளி மெசினில் போட்டான்,எல்லா இடங்களையும் சுத்தம் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்நாற்றம் வயிற்றைக் குமட்டியது. ஓய்வெடுக்க அமர்ந்தான்.


"அங்க ஆடுகள் இருக்கு அதுகளுக்கு சாப்பாடு போடு" எசமான் குரல் ஒலிக்க அங்கு ஓடினான். பசியால் தலைசுற்றியது. ஆடுகளுடன் ஆடுகளாய் பாலை வெயிலில் அலைந்தான். காய்ந்த ரொட்டி அவன் வேளை உணவாய் மாறியது. மாலை நேரமானதும் பேரிச்ச மரங்களிற்கு நீர் ஊற்றினான். இவ்வாறு ஹரீஸ் கடும் துன்பங்ளுடன் வேலைகளை செய்தான். இரவு நேரம் மரக்கொட்டகை அறையில் தூங்க சென்றான். பெற்றோருடன் எப்படி பேசுவது. அவனுக்கு யாரோ சம்மட்டியால் அடிப்பது போல் இருந்தது. எத்தனை கர்வமாய் பெற்றோர்,ஆசிரியர்களை தூக்கி எறிந்தோம்.எல்லாம் போய்விட்டதே. ஹரீஸின் பெட்டியில் இருந்த கோட், சூட், டை எல்லாம் அவனைப் பார்த்து சிரித்தது."இதப்பற்றி யாரிட்டயும் சொல்லிடாதே" மனசாட்சியிடம் கட்டளையிட்டான்.

ஒட்டகை, ஆடு,பேரிச்சையுடன் தினமும் போராடினான். ஒட்டகையுடன் சென்ற ஹரீஸை பெரிய பாலை வனப் பாம்பு ஒன்று தீண்டி விட்டது. வலி தாங்க முடியாமல் "உம்மா...உம்மா...என்னக் காப்பாத்துங்க" உரத்துக் கத்தினான். சத்தம் கேட்டு தூங்கிக் கொண்டிருந்த சீனத் திடுக்கிட்டு எழுந்து

"ஹரீஸ்..ஹரீஸ்...என்னாச்சி" என அவனை தட்டி எழுப்பினாள்."நான் எங்க இருக்கன் உம்மா..."

"என்னாச்சி கனவு ஏதும் கண்டாயப்பா" சீனத் மகனை தடவினாள். "உம்மா அப்படின்னா நான் கண்டது கனவா? யா அல்லாஹ் என்னக் காப்பாற்று "

என மனதிற்குள் இறைவனிடம் பிராத்தித்தவனாக நாளைய விடியலிற்காய் காத்திருந்தான். பாடசாலை சென்று படித்து சொந்த சுமையை பாலை வெயிலின்றி தாய் நாட்டு சோலை நிழலில் இறக்கும் ஆனந்தம் தேடியே.




**பூப்பெய்யும் வயதுடைய**

**மகள்களைக் கொண்ட அம்மாக்களின்**

**அதே கவனம் எங்களுக்கும்.**

**பெண் குழந்தைகளின்**

**திரமும் நெஞ்சுத் திட்டுகளை**

**மறைப்பதிலும்**

**முகத்தின் முதல் பரு**

**கனியும் காலத்தை கவனிப்பதிலும்**

**எப்போதாவது அவளுக்கு இடுப்பு வலி**

**வருகிறதாவென**

**கரிசனையாயிருப்பதிலும்**

**கனத்த மார்போடுதான் கற்பிக்கிறோம்**

**பூப்பெய்யும் வயதுடைய**

**மகள்களைக் கொண்ட**

**அம்மாக்களின் அதே கவனம்**

**எங்களுக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூஷணம் இஸ்மாலிகா ராஜா அவர்களுடனான நேர்காணல்.



ஷாமென் நிஸாம்டீன்
(உ.பதலைவி SLPC)

**உங்களை எமது அவரி சஞ்சியகை ஆளுமை பகுதியில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நீங்கள் எப்பொழுது முதன்முதலாக எழுத ஆரம்பித்தீர்கள் என்பதை பகிர்ந்து கொள்ளுங்கள்...**

பாடசாலை காலத்தில் எமது வகுப்பு மாணவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கையெழுத்து பத்திரிகை ஒன்றை நடத்தினோம். அதில் தான் எனது எழுத்து பயணம் தொடங்கியது.

**பல்வேறு பட்ட இலக்கிய வடிவங்களில் உங்களுக்கு விருப்பமான துறை எது?**

சிறுகதை. கவிதை எழுதுவதில் பாடசாலை காலத்திலேயே மிகுந்த ஆர்வம் காணப்பட்டது. அதன் பிறகு தான் பாடல்கள் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. அதற்கு காரணம் வாசிப்பு .எனது பெற்றோர் இளம் வயதிலேயே எனது வாசிப்பை நன்கு ஊக்குவித்தார். அத்தோடு நான் இயற்கை மீது கொண்ட காதல், மானிடர்களின் அவலங்களை கண்டு கொதிக்கும் அன்பு என்பன என் எழுத்துக்கு காரணமாகின.

**நீங்கள் இலக்கியத் துறையில் முதன்முதலாக படைத்த படைப்பு எந்த ஊடகத்தில் வெளிவந்தது? அதை அறிந்ததும் உங்களின் மனநிலை எப்படி இருந்தது?**

ஆரம்ப காலத்தில் நான் எழுதியவைகளை வானொலிக்கே அனுப்பி வைத்தேன். பூவும் பொட்டும் மங்கையர் மஞ்சரி, வாலிப வட்டம் என்பவற்றில் ஒளிபரப்பாகின. அதற்குப் பிறகு காங்கிரஸ் என்ற பத்திரிகையில் பயணம் முடியவில்லை என்ற சிறுகதையே நான் முதலில் எழுதி வெளிவந்த சிறுகதை. அன்றைய தினம் எனது தந்தை கடைக்குப் போகும் வழியிலே கடைக்காரர் எனது தந்தையை அழைத்து உங்கள் மகளின் சிறுகதை பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது என கொடுத்துள்ளார். அவர் அதை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து தந்ததும் என் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. மீண்டும் மீண்டும் பலமுறை வாசித்தேன். அதை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை.

**உங்கள் படைப்புகள் வெளிவந்த ஊடகங்கள் என்னென்ன?**

எனது சிறுகதைகளும் கவிதைகளும் பல்வேறு பத்திரிகைகளில் வெளிவந்துள்ள. தினகரன். வீரகேசரி, சிந்தாமணி, நான் ,நெட், பிரான்ஸ் முரசு. காங்கிரஸ் போன்ற பத்திரிகைகளிலும் பல்வேறு தொகுதிகளிலும் வெளிவந்துள்ளன. அம்மா என்கின்ற பெண் எழுத்தாளர்களின் கூட்டுப் படைப்பில் எனது சிறுகதையும் இடம் பெற்றுள்ளது. உழைக்கப் பிறந்தவர்கள் துணிவுப் பதிப்பகத்திலும் எனது சிறுகதை இடம் பெற்றிருக்கிறது. அத்தோடு பல ஆக்கங்கள் வானொலியில் வெளிவந்துள்ளன.

**இலக்கிய உலகில் நீங்கள் பங்கு பற்றி வெற்றியீட்டிய தகவல்களை பகிர்ந்து கொள்ளுங்கள்..**

கண்டிப்பிரதேச செயலகம் நடத்திய கவிதை போட்டியில் முதலாவது பரிசையும் ரோட்டரி கிளப் நடத்திய கண்டி சுற்றாடல் மேம்பாடு தொடர்பான கட்டுரை போட்டியில் முதலாம் இடம் அடுத்து இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் நடத்திய சிறு கதை போட்டியில் 1997இல் தேசிய மட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசும் கண்டி சனச புத்தகசாலை நடத்திய சிறுகதை, கவிதை என இரண்டு போட்டிகளிலும் முதலாம் இடத்தை பெற்றேன். இன்னும் பாடசாலை காலத்தில் பல பரிசுகளை வென்றுள்ளேன்.

**மூத்த படைப்பாளரும் இலக்கிய உலகில் உங்களுக்கென்ன தனி பெயரையும் பெற்ற நீங்கள் பல விருதுகளுக்கு சொந்தக்காரர். அந்த விருதுகளைப் பற்றி அறிய ஆவலாய் உள்ளேன்.**

25 வருடங்கள் இலக்கிய சேவை செய்தமைக்கு தினகரன் பத்திரிகை 2012 இல் எனக்கு விருது வழங்கி கௌரவித்தது. 1996 இல் H C A L A எனக்கு விருதொன்று வழங்கியது. அதே ஆண்டில் ரத்ன தீப விருது கிடைத்தது. 2019ல் கலா கீர்த்தி விருதும் 2014ல் ஹிஸ்புல்லா பவுண்டேஷன் பொற்கிழியும் விருதும் 2021 இல் சுட்டு விரல் நூல் வெளியீட்டு விழாவில் ஸ்ரீலங்கா பென் கிளப்பின் விருதும் 2023 சித்திலெப்பை விருதும் 2022ல் பென் கிளப் எனக்கு கலாபூஷணம் விருது பெற்றதற்காக கௌரவித்து விருது வழங்கினார்கள். 2019 மகாத்மா காந்தி விருதும் சேவை நலன் பாராட்டு விழாவில் கம்பளை வளைய தமிழ் அதிபர்கள் ஒன்றியம் 2012ல் விருது வழங்கி கௌரவித்தனர். கலாபூஷணம் விருது 2020 இல் கிடைத்தது. மலையாக நட்சத்திர பேரவையும் விருது வழங்கும் முகமாக தற்போது என்னை சந்தித்து பேசி விட்டு சென்றுள்ளனர்.

**முன்னோடி இலக்கியவாதியான உங்களைப் பற்றிய விபரங்கள் எவற்றில் வெளிவந்துள்ளன. பத்திரிகை?**

பத்திரிகை சஞ்சிகைகளில் ஆளுமை பகுதிகளில் வெளிவந்துள்ளன. அந்த வகையில் மலையக தமிழ் இலக்கியம் என்ற நூலிலே கலாநிதி அருணாச்சலம் ஐயா அவர்கள் எழுதியுள்ளார்கள். கொந்தளிப்பு, தினமுரசு, தினகரன், வீரகேசரி, காங்கிரஸ், பாரிஸ் முரசு தினக்குரல் போன்ற பத்திரிகைகளிலும் என்னைப் பற்றிய விடயங்கள் வெளிவந்துள்ளன. மின்னும் தாரகைகள் திருமதி நூறுல் ஐன் நஜ்முல் ஹுசைன் வெளியிட்ட மின்னும் தாரகைகள் நூலில் என்னைப் பற்றிய விடயங்கள் அடங்கியுள்ளன. வளர்பிறை ஆஸ்திரேலியா வானொலியிலும் என்னை பேட்டி கண்டுள்ளார்கள். அது மட்டுமல்லாது அண்மையில் சாதியா எழுதிய மலையக கவிதைகளில் பெண்களும் சிறுவர்களும் என்ற நூலில் என்னைப்பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**இலங்கையின் இலக்கிய வரலாற்றில் முக்கியஸ்தரான நீங்கள் அங்கம் வகிக்கும் இலக்கிய அமைப்புகள் பற்றி கூறுங்கள்...**

துறை மனோகரனை தலைவராக கொண்டு கண்டியிலே முத்தமிழ் சங்கத்தில் உப தலைவராக உள்ளேன். அத்தோடு இலக்கிய வித்தகர் மஸுரா சுஹுர்தீன் அவர்களை ஸ்தாபகராகக் கொண்டு இயங்கும் ஸ்ரீலங்கா பென் கிளப் என்ற குழுமத்தில் உறுப்பினராகவும் இருக்கின்றேன்.

**உங்களுக்கு கிடைத்துள்ள ஊடக கௌரவங்கள், செவ்விகள் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள் ..**

2010ல் இலங்கை அரசாங்கத் தொலைக்காட்சியான நேத்ராவில் நானும் கணவரும் பேட்டி காணப்பட்டோம். 2021 கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாஃபி அவர்கள் வளர்பிறை எப் எம் வானொலியில் சிறப்பு பேட்டி கண்டார்.



**இளைய தலைமுறையினரிற்கு நீங்கள் இலக்கியத்துறையில் எவ்வகையான உதவிகள் செய்துள்ளீர்கள்?**

அரசாங்க பாடசாலையில் கடமை புரியும் போது பல போட்டி நிகழ்ச்சிகளுக்கு மாணவர்களை தயார்படுத்தி அவர்கள் அதில் வெற்றி பெற்றுள்ளனர். மற்றும் சர்வதேச பாடசாலை மாணவர்கள் தமிழ் மொழியில் பற்றிருந்தாலும் அவற்றை வெளிக்கொண்டு வருவதில் சிரமம் இருந்தது. அவர்களை பிரதேச சபையினால் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற செய்ததன் மூலம் பாடசாலைக்குப் பெருமையும் பெற்றோருக்கு மகிழ்ச்சியையும் அத்தோடு மாணவர்கள் வளர்ச்சியும் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்கள் இலக்கிய துறையில் பிரவேசித்த காலம் தொடக்கம் இற்றை வரைக்கும் உங்களுக்கு உதவி வழங்கியவர்களை நினைவு கூறலாமே..**

முதற்கண் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். பின்பு எனது பெற்றார் சேகுதாவூத் சித்தி ரஷீதா ஆகிய இருவருக்கும் மிக நன்றி கூற வேண்டும். அத்தோடு கற்றுத் தந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அதிலும் எனது தமிழாசிரியர் சா.வெ. அருணாச்சலம் அவர்களுக்கும் திருமணத்தின் பின்பு எனது கணவர் எனது எழுத்தார்வத்திற்கு மிகவும் ஒத்துழைப்பு நல்கியவர் .அவரும் ஒரு கலாபூஷணம், ஜனாதிபதி விருது, இன்னும் பல விருதுகள் பெற்றவர். இலங்கையில் மிகவும் புகழ்பெற்றவர். எப்போதும் எனது எழுத்தாக்கதிற்கு ஆக்கபூர்வமான பல நல்ல ஆலோசனைகளை நல்கியவர். மற்றும் பத்திரிக்கையாளர்கள், வெளியீட்டாளர்கள், பல்வேறு இலக்கிய துறை சம்பந்தப்பட்டவர்கள் என்னை ஊக்குவித்த அனைவருக்கும் இத்தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.



**நன்றி கவிதாயினிஅவர்களே, உங்கள் பொன்னான நேரத்தை எங்களுக்காக ஒதுக்கி இவ்வளவு நேரமும் எங்களுடைய கேள்விகளுக்கு அமைதியாகவும் பொறுமையாகவும் பதில் அளித்தீர்கள். சிகரங்கள் பல தொட்டுள்ள உங்கள் இலக்கியப் பாதை எமது இளைய சந்ததியினருக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கும் என நம்புகிறேன். எமது அவரி சஞ்சிகை சார்பாக உங்களை வாழ்த்தி விடை பெறுகிறேன்.**

> நீ என்ன செய்கிறாய் என்பதே நீயாகும். நீ என்ன செய்வாய் என்பதைப் பற்றி நீ கூறுவதல்ல
>
> – கார்ல் ஜங் –




காலங்களோடு ஒன்றிணைந்து
கடந்துப் போகும் வாழ்க்கை
ஒவ்வொரு நிமிடமும்
ஒற்றையாய் நீடிக்கும்

அவரவருக்கு விதித்தவை
ஆழமாய் ஒட்டிக் கொள்ளும்
மௌனத்தின் விசும்பல்
மடலாகிக் காயப்படுத்தும்

முத்தாகாமல் முதிர்ந்தன
மணமாகாத மனைகள்
செல்வங்களை சேகரித்து
செப்பனிடும் சொகுசுகள்.

திண்ணமும் திரவமும்
திகிலுக்குள் திட்டமிடும்
தெளிவில்லாத வரிகளுக்கும்
தென்படும் கருக்கள்

சுழலும் காற்றோடு சூட்சுமம்
சுழன்றே தன்வினைத் தாக்கும்
வாழும் வழிகளுக்குள் தேடலின்றி
வருந்திடும் மடந்தைகள்

வயோதிபம் வலுவிழந்து
வாழ்வில் ஓரமாய்த் தள்ளப்படும்.
தாக்கப்பட்ட உள்ளத்தோடும்
தீர்க்கப்பட வேண்டிய விடயங்களோடும்.

சிலாகிக்கப்படும் சில்லறைகள்
சிக்கப்படும் சிந்தனைக் கோணல்கள்
சாதிக்க விடாத சாதனை
சதிராட்டமாடும் முடிவுகளுக்குள்

இத்தனையும் இருளோடு
இணைந்து ஒளித்தேடும் கண்ணாடி விம்பமாகியே
காட்சிப்படுத்துகிறது எம்முன்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் அழகாக இல்லை ...!

- கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி -



"நான் அழகாக இல்லை" என்று கண்ணாடி முன் நின்று ஒரே ஒரு தடவை சொல்லிப் பாருங்கள். உங்கள் வாழ்க்கையில் பல மாற்றங்கள் இந்த எதிர்மறை எண்ணத்திலிருந்து தான் ஆரம்பமாகிறது .

முதலில் உளவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாவீர்கள். தாழ்வு மனப்பான்மை உங்கள் தன்னம்பிக்கையை சிதைத்து விடும் முகப்பூச்சுகளும் அலங்காரங்களும் இல்லாமல் வெளியில் போவதற்கு கூச்சப்படுவீர்கள். உங்களை விட நிறத்தில் வெள்ளையாகவும், உயரத்தில் அதிகமாகவும், செழிப்பான முகத்துடனும் இருக்கும் பெண்களைக் கண்டால் வயிற்றெரிச்சல் ஏற்படும். விரக்தியில் முகம் தொய்ந்து போகும். உங்களுக்கே உங்கள் மீது ஒரு வெறுப்புணர்வு தோன்றும் சுய பச்சாதாபம் அதிகரித்து மற்றவரின் அங்கீகாரத்துக்காக உங்களை அலைய வைக்கும் .

இதன் விளைவு ? அழகு சாதனப் பொருட்களின் பின்னால் ஓடுவீர்கள். சாப்பாட்டுக்கு வழியில்லாமல் பலர் துவண்டு போயிருப்பதைப் பார்க்கும் போது கூட, அழகு சாதனப் பொருளுக்கு அடிமையாகி விட்ட மனதை அடக்க முடியாமல், திண்டாடுவீர்கள். இதுவும் ஒரு போதைதான். இதிலிருந்து மீள்வதற்கு நீங்களாகவே முயற்சிக்காதவரை உங்களை யாருமே காப்பாற்ற முடியாது.

இப்போதெல்லாம் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுவதில்லை. அழகுசாதன நிலையங்களில்தான் நிச்சயிக்கப் படுகின்றன. திருமணத்துக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு முன்பே, ஒரு பெண்ணின் முக அலங்காரம் ஆரம்பிக்கும். புருவங்கள் சிரைக்கப்படும். முகத்தைப் பளபளப்பாக்கும் முயற்சியில் பல இரசாயனக்கலவைகள் முகத்தை நிறைக்கும். கூந்தல் அலங்காரம் வேறாக நடக்கும். இந்தச் செலவுகளை வைத்து இன்னொரு பெண்ணின் திருமணத்தைக்கூட நடத்தலாம். ஒரு நாள் நிகழ்வுக்காக பல இலட்சங்கள் வீணாக்கப் படுகின்றன. சில வீடுகளில் தந்தை கடனாளியாக்கப் படுகிறார்.

திருமணத்தில் கலந்துகொள்ள வருவோரின் நிலையும் இதுதான். சிலர் ஒரு திருமணத்துக்கு போய் வருவதற்கு ஆடை அணிகலன்கள் வாங்குவதற்காக இலட்சக் கணக்கில் பணம் செலவழிப்பது மட்டுமன்றி, தன்னை அலங்கரித்துக் கொள்வதற்காக அழகுசாதன நிலையத்துக்குச் சென்று அங்கும் பணத்தை வாரியிறைக்கிறார்கள். அழகுராணிப் போட்டிக்குப் போகிறோம் என்ற நினைப்பில்தான் பல பெண்கள் இன்று திருமண வீடுகளுக்குச் செல்கிறார்கள்.

அண்ட சராசரத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்விடம் நீங்கள் சொல்லும் செய்தியென்ன? நீ என்னை அழகாகப் படைக்கவில்லை என்று அவன் படைப்பில் குறை கூறுகிறீர்களா? என்னை நானே அழகுபடுத்திக் கொள்கிறேன் என்று அவனுக்கு சவால் விடுகிறீர்களா? ஒழுக்கத்தைப் பின்பற்றி வாழுமாறு அவனிட்ட கட்டளைகளை மீறும் நீங்கள், மறுமை வாழ்க்கையை மறந்து விட்டீர்களா?

ஒரேயொரு தடவை வைத்தியசாலைக்கு சென்று வாரக்கணக்கில், அல்லது மாதக் கணக்கில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளைப் பாருங்கள். இதயத்தில் ஓட்டை, சிறுநீரங்கள் செயலிழப்பு, கண்பார்வை பறிபோதல், தோல் நோய்கள், புற்றுநோய், உடல் ஊனம், மனநோய் என்று விபரிக்க முடியாத சிக்கலிலும் நோய் நொடியிலும் அவதிப்படும் மக்களைப் பார்த்த பின்பு, அவன் படைப்பில் குறைகாணும் தைரியம் உங்களுக்கு நிச்சயமாக வராது.

அழுகிப்போகும் இந்த உடம்புக்கு இத்தனை அலங்காரம் எதற்கு என்று நீங்களே யோசிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரீகத்தின் உச்சத்தில் இருப்பதாகச் சொல்லப்படும் மேலைத்தேய நாடுகளில் கூட, குறிப்பாக, வெள்ளைக்காரர்கள் மத்தியில் இத்தனை ஆடம்பரத் திருமணங்கள் நடைபெறுவதில்லை. உதாரணத்துக்குச் சொன்னால், நியூஸிலாந்தில் நடக்கும் பல வெள்ளைக்காரத் திருமணங்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன். திருமண மண்டபங்களுக்கு அவர்கள் இலட்சக் கணக்கில் பணம் செலவழிப்பது குறைவு.

ஒரு பொதுப் பூங்காவில் பத்துப் பேரைக் கூட்டி வைத்து மிகவும் சாதாரணமாக அவர்கள் திருமணத்தை முடித்துக் கொள்கிறார்கள். மணமக்கள், பெண்/மாப்பிள்ளை, தோழி/தோழர், ஒரு புகைப்படக் கலைஞர், பெற்றோர், உடன் பிறப்புக்கள், சில நண்பர்கள் என்று மிகவும் சிக்கனமாக அவர்கள் திருமணம் முடிந்து விடும் .

நபிகளாரின் வாழ்க்கை வழிமுறைகளை பின்பற்ற வேண்டிய நாங்கள்தான், ஊருக்கும் உலகுக்கும் காட்டுவதற்காக ஊதாரித்தனம் பண்ணுகிறோம்.

சீதனத்துக்கு எதிராகக் குரல் கொடுத்து, ஆண்களைக் காரசாரமாக விமர்சிக்கும் நாம், எங்களின் மறுபக்கத்தையும் ஒருமுறை திரும்பிப்பார்த்து, மாற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைத்தால் என்ன ?



"என் திருமணத்துக்கு, முடிந்தளவு வீட்டிலேயே அலங்காரம் செய்து கொள்வேன். என் மகள்களின் திருமணத்துக்கு அழகு சாதன நிலையத்துக்கு அலைய மாட்டேன். திருமண வீடுகளுக்குச் செல்லும் போது கண்ணியமான முறையில் ஆடையணிந்து செல்வேன்..." என்ற மன உறுதி உங்களுக்குள் ஏற்பட்டால் வாழ்க்கையில் பல மாற்றங்களைக் காண்பீர்கள் கணவரின் கையைக் கடிக்கும் செலவுகள் குறைவதால் குடும்பத்தில் நிம்மதி ஏற்படும். எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வில் இறையருள் நிறையும். மாற்றத்தை எங்களில் இருந்தே ஆரம்பிப்போமா ...?

**2023 ஆம் ஆண்டு சிறிலங்கா பென் கிளப்பின் 03வது தேசிய மாநாட்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் :**

## கவிதைப் போட்டி

01. முதலிடம் : பர்ஸானா எம் பி (கனவுகளைக் கொல்பவன்)

02. இரண்டாமிடம் : மும்தாஜ் பேகம் (எங்களைத் தெரியுமா?)

03. மூன்றாமிடம் : நிஸ்மியா நிசாம் (விரல் நுனியில் உலகமா? விபரீத நரகமா?)

## சிறுகதைப் போட்டி

01. முதலிடம்: சுஸானா முனாஸ் - மூதூர் (ஞானம் பிறந்தது)

02. இரண்டாமிடம் : ஜனூன் கதீஜா அன்சார் திருகோணமலை (அவள் பயணமாகிறாள்)

03. மூன்றாம் இடம் : அஸ்மா டீன் - கம்பளை (சுயம் தெளிகிறாள்)

## ரமழான் வினாவிடைப் போட்டி

01. முதலாம் இடம் : M.T. தஸ்லீமா
02. இரண்டாமிடம் : ஸதீகா ரஸ்லீ
03. மூன்றாம் இடம்: ஸறீபா பதூர்தீன்

**ரமழான் வினாவிடைப் போட்டியில் பாராட்டு சான்றிதழ் பெற்றோர்.**

01. காத்தான்குடி றுஸ்தா
02. வ.்.பீறா வ.்.பீ
03. றிஸ்லா றிபாஸ்
04. எம்.பி.பர்ஸானா
05. கமர்ஜான் பீபீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனிறா ஜலீல் - காத்தான்குடி

# தொழிலுலகிற்கும் குடும்பக் கட்டமைப்பிற்கும் இடையில் பெண்

மனித நாகரிக வளர்ச்சியில் மனிதன் பல்வேறு கட்டங்களை அடைந்துள்ளமையை நாம் வரலாற்று ரீதியாகக் காண்கின்றோம்.குறுகிய வட்டமொன்றில் தனது தேவையை வரையறுத்து வாழ்ந்து வந்த மனிதன் இன்று விண்ணுக்கு சென்று வருகின்ற நிலையை அடைந்துள்ளான் என்றால் மிகையாகாது. அந்தளவுக்கு மனிதனின் தேவைகளும் பரந்து விரிந்துள்ளது. தேவைகளுக்கேற்ப அவனது அறிவு, பொருளாதார நிலை , தொழில் வகைகள் எனப் பல்வேறு விடயங்களும் விரிவடைந்து கொண்டிருக்கின்றன.

தொழில் புரியும் இடத்திலும் குடும்பத்தினுள்ளேயும் கணிசமான பங்களிப்பை பெண்கள் வழங்க வேண்டியுள்ளது. ஆக திருமணமான பெண்களுக்கே இதன் நிலை பாரதூரமாக உள்ளது. குடும்பத்தில் கணவர், பிள்ளைகள், கணவர் குடும்பம் மற்றும் தன்னுடைய பிறந்த வீட்டு உறவுகள் என அனைவரையும் சரிவர பேண வேண்டி உள்ளது. தனது குடும்பத்தின் பொறுப்புக்களை சரிவர நிறைவேற்ற வேண்டி உள்ளது. கணவருக்குரிய பொறுப்புக்கள் குழந்தைகளை வளர்த்து சிறந்த கல்வி ஒழுக்கத்தினை ஊட்ட வேண்டிய கடமைப்பாடு உள்ளது. இந்த பாரிய வட்டத்தினுள் தொழில் என்ற கட்டமைப்பினுள் பல்வேறு கடமைகளும் பொறுப்புக்களும் அழுத்தங்களும் நிறைந்து காணப்படுகின்றன. உரிய நேரத்தில் தனக்குரிய பொறுப்புக்களை நிறைவேற்றல் என்ற நேரமுகாமைத்துவ விடயம் இன்றியமையாதது.

அத்துடன் சமூகத்தின் பார்வைக்குள்ளும் தன்னை நிலை நிறுத்த வேண்டி உள்ளது. ஏனெனில் சமூகத்தின் பார்வை தன் குழந்தைகளின் எதிர்காலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற விடயமாக உள்ளது. அடுத்து தொழிலுலகில் தான் எதிர்நோக்குகின்ற எதிர்மறையான விடயங்களை முறியடிக்கும் திறன் படைத்தவளாக இருக்க வேண்டும். இடர்பாடுகளை சரிவர கையாளத் தெரிந்திருக்க வேண்டும்.

தனது தொழிலுலகிலும் தனது குடும்பத்திலும் சரி பிரதான இலக்கை எய்துவதற்கு பெண்ணானவள் மும்முரமாக உழைக்க வேண்டியுள்ளது. தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறாக அவளது பாதை மாறிமாறி சுழல்கின்ற போதிலும் தனக்காக மட்டும் என்று எதனையும் செய்வதற்கு எண்ணம் இருப்பதுமில்லை அதற்கான அவகாசம் எடுப்பதுமில்லை.

ஆக மொத்தத்தில் தொழிலுலகிலும் குடும்பக் கட்டமைப்பிற்கும் இடையில் பெண்ணானவள் அனைத்து தடைகளையும் தகர்த்து வெற்றி நடைபோடுவதை நாம் வரலாறு நெடுகிலும் காண்கின்றோம்.

யாரோ ஒருவர் கஷ்டத்தில் இருக்கும் போது இவர்களிடம் பேசினால் ஆறுதலாக இருக்கம் என்று நினைக்கும் அந்த ஒருவராக நீங்கள் இருக்க முயற்சி செய்யுங்கள். வாழ்க்கை வரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் கேள்விகளுடன்...



**பௌசியா கபூர் – காத்தான்குடி.**

குழந்தையாய் அடியெடுத்தேன் இத்தரையில்
குமுறுகிறேன் நிலைக்கண்டு பாரினிலே
தந்தையை இழந்து நின்ற தனித்த குடும்பமது
தலை பிள்ளை நானானேன் சுமையுடனே

தந்தையாய் தனையனாய் தாயாக வேடமிட்டு
தவித்து தவழ்ந்து வந்த நாட்கள் கண் முன்னே
தனித்து நிற்கின்றேன் பட்ட மரமாகி
தனக்கெனவே எதுவுமின்றி பேதையாக

ஏற்றிவிட்ட ஏணியாக நான் இருந்தும்
ஏறிச்சென்ற என் உறவு எங்கே என்று
ஏங்கித் தவிக்கிறேன் ஏழ்மையுடன்
ஏன் இந்த வாழ்வெனக்கு என் இறைவா!

ஆசைகள் ஏதும் அற்ற வெறும் ஜடமா
ஆண் வாசம் உணராத அறுகம்புல்லா
அழகு தேடும் வயது தேடும் ஆணினமே
ஆறறிவு இல்லையோ நீ வாழ்வதற்கு

படித்துப்பல பட்டங்கள் பெற்ற போதும்
பல பேர்கள் பெண்பார்த்துப் போன போதும்
முன் வீடு, பின் வீடு, முழு சமூகம்
தந்துவிட்ட சிறப்பு பட்டம் "முதிர்கன்னி"

வாழ்க்கை இல்லை என்று நான் முடங்கவில்லை
வீறு நடை போடுகின்றேன் கல்வியோடு
என் இறைவன் எனக்களித்த விந்தை தேடி
என்றுமே காத்திருப்பேன் அதனை நாடி.



# கருக்கலைந்த கனவுகள்...

நிஸ்மியா நிஸாம் (பேருவளை)

இப்போது வலிகளுக்காகக்
கண்ணீர் வருவதில்லை!
கொதிக்கும் உணர்வலைகளில்
அது ஆவியாகிவிட எந்தன்
பெருமூச்சின் வெப்பக்காற்றாய்
கரைந்து போய்விடுகிறது!
அதையும் வார்த்தைகளால்
குளிர்விக்கவும் கற்றுக்கொண்டேன்!
இறுகிய முகத்தின்வரிகளை
புன்சிரிப்பினால் மறைத்த
முகவரிகளில் இதயம் கல்லானது
உலகத்துக்குத் தெரியாது!
அதற்குள் இருக்கும் ஈரம் ஒரு
அன்பின் பெருநதியை
பாசத்தின் பாதையில் நிச்சயம்
ஓடவிடும் வலிமைமிக்கது!
வேசத்தின் தடைகளையும்
துரோகத்தின் படுகுழிகளையும்
தாண்டும் வல்லமையும் மிக்கது!
இருந்தும் சூழ்நிலைகள் சிதைத்த
காலத்தின் கொடுமை பொல்லாதது!
தேடலின் உறவதில் உதித்த
கற்பனையின் வெளிச்சத்தை ஓர்
அகால இருள் மூழ்கடிக்குமென்று
நிச்சயம் நினைக்கவில்லை! அது
காதலின் கடலில் மகிழ்சியாக
நீந்திய போதுவந்தது விதியின் சுறா!
நம்பிக்கையின் கண்களை அதில்
ஆறுதலாக மூடியபோது அந்தப்
பரிதாபமான வேட்டையும் நடந்தது!
குதறப்பட்ட எண்ணங்கள் சிதைந்த
வண்ணங்களாக மாறிவிட
கருக்கலைந்த கனவுகளைத் தாண்டி
உருக்குலையாமல் வாழ்கிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

இந்த அறிவியல் யுகத்தில் தொழினுட்பத்தின் முன்னேற்றத்தால் உலகமே உள்ளங்கைக்குள் சுருங்கி இருக்கிறது. அத்தொழினுட்பம் ஈன்றெடுத்த குழந்தைகளாகவே இந்த சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன.

அறிவியல் தொட்டு அறவியல் வரைக்குமான அத்தனை விடயங்களையும் இலத்திரனியல் சாதனங்களுடாக பெற்றுக் கொள்ளும் வரமாகவே இந்த சமூக வலைத்தளங்கள் வாய்ந்திருக்கின்றன.

அக்காலத்தில் புறாக்களின் மூலமாக தொடர்புகளை மேற்கொண்ட மனிதன் நாகரிக வளர்ச்சியின் அடுத்த கட்ட வளர்ச்சிப்படியாக கடிதப் பரிமாற்றங்களை மேற்கொள்ள தொடங்கினான். அதன் பின்னர் அச்சூடகங்கள் செல்வாக்குப் பெற்றன. அறிவியல் முன்னேற்றத்தின் அதீத வளர்ச்சி அடிப்படையில்

தொலைபேசியை கண்டுபிடித்து அதன் மூலமாக தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டான். இன்னும் ஒரு படி வளர்ச்சி அடைந்து தற்காலத்தில் இணையதளங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று இருக்கின்றன. யூடியூப் பேஸ்புக், வாட்ஸ்அப், டுவிட்டர், இன்ஸ்டாகிராம், மெசஞ்சர் வைபர், என பல வகையான வலைத்தளங்கள் மனிதனோடு பின்னிப் பிணைந்து சமூக வலைத்தளங்கள் எனும் பெயரில் பிரசித்தி பெற்று இன்று மனித வாழ்வில் தவிர்க்க முடியாததாகி விட்டன.

சமூக வலைத்தளங்கள் இன்றைய நவீன உலகுக்கு வாய்த்த வரம் என்றே சொல்ல வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில்

அன்றாட வாழ்வில் சமையலறையிலும் பயன்பாடாக மாறிவிட்ட இந்த சமூக வலைத்தளங்கள் மூலம் நாம் பல்வேறு அனுகூலங்களை அதிஷ்டங்களாக

அனுபவிக்கின்றோம். கவிஞர் வைரமுத்து அவர்கள் கவிதை ஒன்றில் குறிப்பிடுவது போல் இந்த சமூக வலைத்தளங்கள் மூலம் இன்று "அமெரிக்கா அடுத்த வீடாகவே மாறிவிட்டது".

தூர தேசத்தில் உள்ளவர்களுடன் கணப்பொழுதில் முகம் பார்த்து கதைக்கவும், குடும்ப நிகழ்வுகளை நேரடியாகப் பரிமாறிப் பரவசப்படவும், சடங்குகளில், வைபவங்களில் கலந்து கொள்ள முடியவில்லை என்ற ஏக்கம் ஏதுமின்றி அனைத்தையும் சமூக வலைத்தளங்களில் நேரடியாகவும், காட்சிகளாகவும் ,வீடியோக்களாகவும் பரிமாறவும், பகிர்ந்து கொள்ளவும், கண்டு மகிழவும் முடிகின்றது.

முகநூல் வாயிலாக மிகச் சிறந்த நட்புக்கள் கிடைத்திருக்கின்றன. WhatsApp ஊடாக எத்தனையோ தொடர்பாடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பழைய உறவுகளும் நட்புகளும் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. பகைமைகள் மறந்து உறவுகள் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

இந்த வகையில் சமூக வலைத்தளங்கள் உறவுகளை இணைக்கும் பாலமாக அமைந்துள்ளன.

அடுத்து மிக்க வரமாக நோக்கத் தக்க விடயம் என்னவென்றால் வேலைகள் இலகுவாக்கப்பட்டு நேரவிரயம் தவிர்க்கப்படுகின்றது. முன்னைய காலத்தில் ஒரு மாதம் அல்லது ஒரு வருடம் காத்திருந்து முடிக்க வேண்டிய விடயங்களை ஒரு நிமிடத்திற்குள் இந்த வலைத்தளங்கள் ஊடாக முடித்துக் கொள்ள முடிகிறது.

செய்திகளாகவும் புகைப்படங்களாகவும் கண்டும் கேட்டும் அறிந்த பல விடயங்கள் இன்று உடனுக்குடன் பார்த்தும் கேட்டும் பரிமாறவும் முடிகின்றது உதாரணமாக பலஸ்தீனிய போராட்டம் ஒரு தேசத்திற்கெதிரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறைகள், அவர்களுக்கெதிரான படுகொலை, அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள், அவர்களின் ஈமானிய உறுதி, உலகில் உள்ள அத்தனை உள்ளங்களையும் தட்டி கண்ணீர் வடிக்க வைக்கின்றது.

இந்த விடயங்களை காட்சிப்படுத்துகின்ற, பரப்புகின்ற விடயங்களில் சமூக வலைத்தளங்கள் மிகவும் பங்களிப்பு பங்களிப்புச் செய்கின்றன.

அதுமட்டுமின்றி உலக நாடுகளின் அமைப்புக்களின் மாநாடுகள் தலைவர்கள் சந்திப்புகள் பேச்சுவார்த்தைகள் உடனடியாகவும் நேரடியாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பார்வையிடுவதற்கு வழி செய்கின்றன. வியாபார, வர்த்தக நடவடிக்கைகள்,கல்வி போன்ற அத்தனை துறைகளும் இந்த சமூக வலைத்தளங்கள் ஊடாக நிறைவேற்றப்படுகின்றன.

பிரசித்தி பெற்ற தொடர்பாடல் ஊடகமாகவும் இவை காணப்படுகின்றன. இந்த தொடர்பாடல் இணைப்புக்கும் பயந்து பல அரசாங்கங்கள் சமூக வலைத்தளங்களை முடக்கிய வரலாறுகளும் உண்டு.

அத்தியவசிய சேவைகள் தொடங்கி விளையாட்டு வரை ஏதேனும் தகவல்களை அறிய விரும்பினால் எங்கும் போக வேண்டிய தேவையில்லை. சமூக வலைத்தளங்களின் பக்கம் தனது பார்வையை செலுத்தினாலே போதும் அத்தனை தகவல்களையும் உடனுக்குடன் பெற முடியும் எந்த ஒரு விடயத்தையும் விமர்சனம் செய்யும் உரிமையும் இங்கு கிடைக்கும்.


ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போல இருப்பது போல ஒவ்வொரு வடிவத்திற்கும் நேர்மறையானதும். எதிர்மறைமானதுமான பல விடயங்கள் அமைந்து விடுவதுண்டு.

அவ்வாறே சமூக வலைத்தளங்கள் சில நேரம் சில நேரம் மிகப்பெரும் வரமாகவும் இன்னும் சில சமயங்களில் மிகப்பெரும் சாபமாகவும் மாறிவிடுகின்றன.

இதில் மிகப் பெரும் சாபமாக குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் நேரவிரயம் ஆகும். அநேகமான மக்கள் தங்களது வேலைகள் தேவைகள் செயல்கள்

இவற்றியெல்லாம் முடக்கி விட்டு இந்த சமூக வலைத்தளங்களில் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

அதிகமானவர்கள் இந்த சமூக வலைத்தளங்களும் தனது நேர காலங்களை விரயம் செய்வதால் குடும்ப உறுப்பினர்களுடன் அன்பு பாசங்களை பரிமாறிக் கொள்வதற்கும் ,அக்கறை செலுத்துவதற்கும் இது தடையாக அமைகின்றது. இதனால் குடும்ப சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. பிரிவினைகள் ஏற்படுகின்றன எனவே சமூகத்தில் குடும்பங்கள் சிதைவடைந்து நிர்க்கதியான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன..




அது மட்டுமின்றி பொய்யான தகவல்கள் பரிமாறப்படுகின்றன. போலிகளின் தளமாகவும் இந்த சமூக வலைத்தளங்கள் காணப்படுகின்றன. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பாலியல் வன்முறைகள் என்பன அரங்கேற்றப்படுகின்றன அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் ஏற்படுகின்ற தனிநபர் அவமானப்படுத்தப்படுவதால் உடனுக்குள்ளாக வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன.

அத்தோடு தகவல் திருட்டுக்கள், ஊடுருவல்கள், தனிப்பட்ட அவர்களது தகவல்களை ஊடுருவி, திருடி, அச்சுறுத்தி, கொள்ளைகளில் ஈடுபடுவதற்கும் காரணமாக இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் ஒரு நாட்டின் அரசியல் புரட்சிக்கும் இதை வித்திட்டு நாட்டிலே அமைதியின்மை ஏற்படுத்துவதற்கும் காலாக அமைந்து விடுகிறன.

இதனால் பல்வேறு உடல் உள நெருக்கடிகளுக்கு உள்ளாவதைக் காணமுடிகின்றது. அது மட்டுமின்றி சமூக சீர்கேடுகள் கலாசார சீர்குலைவுகள் சமூகங்களுக்கு இடையிலான வன்முறைகளையும் தூண்டி விடுகின்றன. மக்கள் மத்தியில் வெறுப்பினை ஊட்டக்கூடிய ஆக்ரோஷங்களை தூண்டக்கூடிய பதிவுகள் காட்சிகள் மிக தீவிரமாக பரிமாறப்படுகிறன.

இவ்வாறு துயரங்களையும் ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

அத்தோடு இளம் சந்ததியினர் நடத்தை பிறழ்வுகளுக்கு உள்ளாவதற்கும் தவறான உறவுகளில் ஈடுபட்டு தங்களை அழித்துக் கொள்வதற்கும் தங்களுக்கும் தங்களது குடும்பங்களுக்கும் அவமானங்களை ஏற்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கும் ஒரு களமாகவும் இந்த சமூக வலைத்தளங்கள் அமைந்து விடுகிறன.




இன்றைய காலகட்டத்தில் இளம் சமுதாயத்தினர் மாணவர்கள் கண்களுக்கு இனிமையான காட்சிகளை காண்பதிலேயே அதிக கவனம் செலுத்துவதால் புத்தகங்களை, பத்திரிகைகளை அறிவியல் சார்ந்த நூல்களை வாசிப்பதற்கும் இவை தடையாக அமைந்திருக்கின்றன. எனவே மாணவர் மத்தியில் வாசிப்பின் வீழ்சியையும் ஏற்படுத்தி இருப்பதையும் நாங்கள் கண்டுகொள்ள முடியும். அத்தோடு இளம் சந்ததியினர் செயற்பாடுகள் ஏதுமின்றி முடங்கிக் கிடக்கிறார்கள்.

கற்றல் நடவடிக்கைகளை விட்டும் தூரமாக்கப்பட்டிருக்கிறார்கள்

இந்த நவீன நாகரீக உலகத்தில் காலத்தின் தேவைக்கேற்ப இந்த சமூக வலைத்தளங்கள் மிக அத்தியாவசிய தேவையாக மாறி இருக்கின்றன என்ற வகையில் நாங்கள் பெரும்பாலும் அது மனித சமூகத்துக்கு வாய்த்த வரம் என்று கருத முடியும் என்றாலும் சில நெறிபிறழ்வான, உள்ளத்தில் நோயுள்ள, வன்மமும் வக்கிரமும் நிறைந்தவர்களின் நடத்தை மாற்றங்களால் அவை

துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்றன. இதனால் அவை சாபமாக நோக்கப்படுகின்றன. எனவே காக்கைகளும் அன்னங்களும் சூழ்ந்து இருக்கின்ற இந்த உலகில் அன்னங்களாக இருந்தால் மட்டுமே அதனை வரமாக அனுபவிக்க முடியும் .காக்கைகளை இருக்கும் வரை அவை மனித சமுதாயத்திற்கு சாபம் என்பது மட்டுமே நிதர்சனமான உண்மையாகும்.



## வீழ்வேன் என்று நினைத்தாயோ...?

**ஜஸ்ரா ஜலீல் — மலேஷியா.**

சுனாமியாக துரத்தியது தினம் துன்பம்
சுழற்றி அடித்தது துரோக எண்ணங்கள்
சுற்றி வஞ்சகத்தால் வலை வீசினர்
சுற்றுப்பட்டு விழ ஏங்கினர்...

பொறாமையின் உச்சத்தால் நச்சு வார்த்தைகள்
பொல்லாத எண்ணத்தால் பல சூழ்ச்சிகள்
பொறுமையை சோதித்து தூண்டுதல் செயல்கள்
பொறுக்காமல் ஆவேசப்படும் என்று எண்ணத்தாலே...

போட்ட திட்டத்தை சதி செய்தே
போட்டி இட்டு தடுத்து நிறுத்தியே
போகட்டும் எங்கோ என்று நினைத்தனரோ
போர்த்தி கிடக்கட்டும் என்று ஆசையோ...

வினை செய்ய வீம்புகள் செய்தே
விளையாடினர் வாழ்க்கை நேர் கோட்டிலே
விடை அறியா பாதை ஆக்கியே
விடை தேடி அலைய விட்டார்களே...

மனதை கிழித்து வலிமையாக ஆக்கி
மனதோடு தினம் தினம் போரிட்டு
மல்யுத்தம் செய்து ஏறிட செய்து
மதம் பிடித்த யானையாக வென்றேனோ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நுண்ணங்கிகளின் தொழிற்பாடு பற்றி அறிவதற்கு ஈஸ்ட் (மதுவம்),சீனி இரண்டையும் சுடுநீரில் கரைத்து அவதானிப்பு மேற்கொள்ள போத்தலும் பலூனும் கொண்டுவருமாறு எட்டாம் வகுப்புப் பிள்ளைகளிடம் சொல்லி இருந்தேன்.

தயாரித்த கலவையை போத்தலினுள் ஊற்றி,அதன் திறந்த முனையில் பலூனைப் பொருத்தி இருபது நிமிடத்தில் அவதானித்தால் பலூனிற்குள் காபனீரோற்சைற்று வாயு வெளியாகி பலூனை நிறைக்கும்.

அதை அவதானிப்பதுதான் குறித்த செயற்பாடு.

அடுத்தநாள் வகுப்பில் ஆளுக்கொரு போத்தலும் பலூனுமாய் உற்சாகத்தோடு என்னை வரவேற்ற பிள்ளைகளுக்கு குறித்த செயற்பாடு தொடர்பில் அறிமுகம் செய்துவிட்டு...

"செல்லங்களே... இவ்வாறு உற்பத்தியாகும் வாயுவின் காரணமாகவே ஈஸ்ட் போட்டு செய்ற பாண்,பணிஸ் போன்ற நாம பேக்கரியில் வாங்குற சாப்பாடுகள்எல்லாம் மென்மைத் தன்மையை அடையுது..சரியா.."

என்று விளக்கியவாறே அவர்களின் செய்முறைகளில் கவனம் செலுத்துகிறேன்.

ஒவ்வொருவரும் தாம் கொண்டு வந்திருந்த போத்தல்களை மேசையில் வைத்து விட்டு மதுவம் சீனிக் கரைசலைத் தயாரிக்கத் தொடங்கியிருந்தனர் .

அப்போதுதான் ஆதில் கொண்டு வந்திருந்த போத்தலை அவதானிக்கிறேன்.

மாறுபட்ட உயரமும் அழகான வடிவமும் கொண்ட வித்தியாசமான ஒரு போத்தல் அது.

அதைக் கண்டவுடன் என் மூத்த மகள் என்னிடம் சொன்ன விடயம் நினைவு வந்தது.

மகள் போத்தல்களை அலங்காரம் செய்து அழகு பார்ப்பதில் ஆர்வம் உள்ளவர்.

"எங்கேயாவது வித்தியாசமான வடிவில் போத்தல்கள் கண்டால் வாங்கி வாங்கம்மா.."

என்று அடிக்கடி சொல்வார்.

மெதுவாய் நான் அருகில் சென்று குறித்த போத்தல் தொடர்பில் ஆதிலிடம் விசாரித்தேன்.

அவரோ பதில் சொல்லத் தயங்குவது போலிருக்க நான் கையில் எடுத்து முகர்ந்து பார்த்ததும் அதன் வாசனையில் உடனே லேசான தலைசுற்றலும் குமட்டலுமாய்.. மெதுவாய் வகுப்பறைக்கு வெளியே போய் விட்டேன் .

அவனுக்குப் பக்கத்தில் இருந்த சிறுவன் என் பின்னாலேயே ஓடி வந்து

"ரீச்சர் அது சாராய போத்தல், அவண்ட மச்சான் குடிக்கிறயாம்"

அவர் ஊருக்கு வாற நேரம் எல்லாம் அங்கே விடிய விடிய பார்ட்டிதானாம். இவண்ட

வாப்பாவும் பெரிய குடிகாரன் தானாம். இவனும் குடிக்கிறானோ தெரியா ரீச்சர்...எண்டாலும்

நான் சொன்னண்டு சொல்லி விட வேணாம்...அடிப்பான்" என்று மூச்சு விடாமல் மெதுவாய் என் காதில் ஊதிவிட்டு ஓடி விட்டான்.

எனக்கோ இந்தக் கதையைக் கேட்டதில் ஆதிலின் வீட்டுச் சூழலை நினைத்து முன்னரிலும் அதிகமாய் தலைச்சுற்றத் தொடங்கிற்று.

காபணீரொட்சைற்றுத் தயாரிக்கும் பரிசோதனை செயற்பாடுகள்

எல்லாம் முடித்து நல்ல வடிவாய் ஊதிப் பருத்துக் கிடக்கும் பலூன்களைக் கைகளில் ஏந்திக் கொண்டு மாணவர்கள் குதூகலித்துக் கொண்டிருக்க.. கடைசியாய் ஆதிலை மட்டும் ஸ்டாப் ரூமுக்கு வரச் சொல்லி விட்டு வந்திருந்தேன்.

மெதுவாய் தயங்கித் தயங்கி

வந்தவனிடம் தலை தடவி... "காலையில் என்ன சாப்பிட்டீங்க ஆதில்.."

என்று தொடங்கி மெதுமெதுவாய் விசாரித்துப் பார்க்கிறேன்.

கொஞ்சம் தயக்கத்தோடுதான் பிள்ளை சொல்லத் தொடங்கினான்..

அவனின் உம்மா வெளிநாட்டுக்குச் போய் விட்டாராம். சகோதரி ஊரில் ஒரு தடவை கலை களியாட்ட நிகழ்ச்சி நடத்த வந்திருந்த சர்க்கஸ் குழுவில் மோட்டர்பைக் ஓட்டும் காலியைச் சேர்ந்த ஒரு சிங்களப் பையனை விரும்பி திருமணம் செய்து அவரோடு போய் விட்டாவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ இப்ப ஊருக்கு வாற நேரம் எல்லாம் அந்தப் பிள்ளையின் கணவர் தன் நண்பர்களையும் கூடவே அழைத்து வருவாராம்.

இங்கிருந்து போகும் வரைக்கும் தண்ணி,சிகரெட் என்று ஒரே கூத்துத்தானாம்.

சிலநேரம் அளவிற்கு மீறிய போதையில் தன்னிடமும் குடித்துப் பார்க்கக் குடுப்பாராம்..கால் கையை அமுக்கி விடச் சொல்லிக் கரைச்சல் குடுப்பாராம்.

வாப்பாவும், ராத்தாவும் இதையெல்லாம் கண்டு கொள்வது கூட இல்லையாம்.

தன் மச்சான் எவ்வளவு வற்புறுத்திக் கொடுத்தாலும் தான் ஒரு நாளும் மதுபானம் எதையுமே தொட்டுக் கூடப் பார்க்கவில்லை என்று அழுது கொண்டே சத்தியம் செய்தான்.

இந்தப் பிஞ்சின் பரிதாப நிலை கண்டு எனக்கும் கொஞ்சம் அழுகை எட்டிப் பார்க்கவே..

"சரி..உம்மா வெளிநாட்டில் இருந்து கோல் எடுத்தா இந்தக் கரைச்சல் எல்லாம் சொல்லி அவரை உடனே வரச் சொல்லு ஆதில.

அதோட

இனி ராத்தா..மச்சான் ஊட்டுக்கு வார நேரத்தில் உன்ர ரூமுக்குள்ள நேரத்தோடையே போய் கதவைப் பூட்டிக் கொண்டு தூங்கிடு.

விடிஞ்சு நேரத்துக்கு எழும்பிப் படி.."என்று சொல்லி.. இன்னும் கொஞ்சம் ஆறுதல் படுத்தி அனுப்பி விடுகிறேன்.

அவன் வீடு அமைந்திருக்கும் குறித்த பகுதியில் உள்ள நிறைய வீடுகளில் இவ்வாறான சிக்கல்களை இந்தப் பிள்ளைகள் எதிர்கொள்வதை இன்னும் சில மாணவர்கள் மூலமும் அறிந்து கொண்டபோது இதை எப்படித் தடுக்கலாம் என்று யோசித்து.. அதிர்ச்சியும் கவலையும் மட்டுமே கொள்ள முடிந்தது என்னால்.

என்றாலும் மறுநாளே அவனின் வாப்பாவை வரவழைத்து இந்தக் குடி கூத்து பற்றி டக்கென்று தொடங்காமல் அவன் வகுப்பில் அடிக்கடி நித்திரை கொள்கிறான்...ஒழுங்கா வீட்டு வேலைகள் செய்து வாறலை போன்ற விடயங்களை எடுத்து சொல்லி...


"நீங்க தொடர்ந்து கடலுக்கு போறீங்க...ஆதிலைக் கவனிக்க உங்களுக்கு நேரம் இல்லைதானே.. அவர்ட மம்மாவை வெளிநாட்டில் இருந்து எடுக்கிற நல்லம் இல்லயா."

என்று மெதுவாய் அவரிடம் போட்டு வைத்தேன்.

முதலில் கொஞ்சம் கோபமாக பதில் சொன்னாலும்...தொடர்ச்சியான எங்கள் உரையாடலில் கொஞ்சம் இறங்கி வந்து...பார்ப்போம் ரீச்சர் என்று கூறிப் போனார்.

என் பிரார்த்தனை எல்லாம் இப்படி நல்லா படிக்கக் கூடிய பிஞ்சு மாணவர்கள் மனசுக்குள் ஆயிரம் ஆயிரம் கனவுகள் பூத்துக் குலுங்கிக் கிடக்கும்...அவைகள் இப்படி பொறுப்பற்ற பெற்றோர் மட்டும் குடும்பச் சூழலால் கலைந்து போய் விடக் கூடாது... அக்கனவுகள் யாவும் மெய்ப்பட வேண்டும் என்பதுதான்.

இந்தச் சம்பவம் நடந்து வருடங்கள் பல கடந்தும்...நான் வேறொரு பாடசாலைக்கு மாற்றலாகி விட்டிருந்தும் கூட. நுண்ணங்கி தொடர்பான குறித்த பாட அலகைப் படிப்பிக்கத் தொடங்கும் போதெல்லாம் அந்தச் சிறுவனின் முகம் மறுபடியும்.. மறுபடியுமாய் நினைவுகளுக்குள் வந்து வந்து போகும்.



# ஹைக்கூ

**வ.:பீரா வ.:பி**

உயர்ந்த கட்டிடம்
பக்கவாட்டில் தலை நீட்டும்
ஓடும் மேகம்.

காலைப் பனி
பழத்தைப் போர்த்தி இருக்கும்
வௌவாலின் சிறகுகள்.

ஓடும் குதிரை.
மிதித்தும் அகலாமல் நிற்கும்
மனிதனின் நிழல்.

பறக்கும் விமானம்
மலையில் மோதிச் சிதறும்
மேகக் கூட்டம்

பறக்கும் ஊர்க்குருவி
மேகத்தை இழுத்துப் போகும்
வீசிய காற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Chat GPT ஐ விட Smart ஆன AI கள் பற்றி தெரிந்து கொள்வோமா...?




சட் ஜிபிரி என்பது செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி Open AI என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டுள்ள ஒரு தளமாகும். இதனை பயன் படுத்தி அறிவியல் சார்ந்து நீங்கள் என்ன கேள்வி கேட்டாலும் தொழிநுட்ப உதவிகள் கேட்டாலும் அதனை உடனுக்குடன் நமக்கு செய்து தரும் வலைத் தளம்தான் இந்த சட் ஜிபிரி (Chat GPT). தற்போது Google நிறுவனம் இந்த Chat GPT ஐ விஞ்சும் வண்ணம் மிக பிரமாண்டமாக உருவாக்கி இருக்கும் மற்றுமொரு AI தளம்தான் Bard என்பது. ஆனபோதும் இந்த Chat GPT ஐ விட திறமையான smart ஆன AI கள் பற்றி தெரிந்து கொள்வோமா...?

01. Perplexity AI -




Chat GPT ன் Extended Version தான் இந்த Perplexity AI. Chat GPT போலவே நமது கேள்விகளுக்கு பதில் அளிக்கும் இந்த AI பதில்களோடு சேர்த்து அதற்கான source link ஐயும் இந்த AI நமக்கு கொடுத்து விடும். இதன் மூலமா இந்த AI சொல்லும் பதில்கள் சரியானதா இல்லையா என்று நாம் உறுதிப் படுத்திக் கொள்ளவும் முடியும்.

02. Chat PDF

சில சமயங்களில் PDF படிக்க நமக்கு சோம்பேறித்தனமாக இருக்கும் அப்படியான வேளைகளில் இந்த chat PDF ல் உங்கள் PDF File ஐ upload பண்ணிட்டு நமக்கு தேவையான கேள்விகளை மட்டும் கேட்டால் போதும் இந்த AI PDF ல் இருக்கும் பதில்களை நமக்கு சொல்லி விடும்.

03. decktopus -

Presentation ஒன்றினை நீங்கள் செய்து முடிக்க வேண்டும் ஆனால் உங்களிடம் அதற்காக நேரமோ அவகாசமோ இல்லை எனில் உங்களுக்கு தேவையான தகவல்களை மட்டும் இந்த AI ல் நீங்கள் Input பண்ணினால் போது உங்களுக்கு தேவையான Presentation ஐ மிக அழகாகவும் நேர்த்தியாகவும் செய்து முடித்துவிடும்.

04. jenni AI -


நீங்கள் பெரிய பெரிய கட்டுரைகளை எழுதும் போது நீங்கள் அடுத்து என்ன எழுதப் போகிறீர்கள் என்பதை புரிந்து கொண்டு இந்த jenni AI அதனை எழுதி முடித்துவிடும்.

இதை எல்லாம் மிகைக்கும் வகையில் Google நிறுவனம் LaMDA Technology (ஒரு கேள்வி கேட்டால் அதற்கு பல வகையிலும் யோசித்து பதில் அளிக்கும் செயற்கை நுண்ணறிவு) இனை பயன் படுத்தி இந்த Bard என்னும் AI engine ஐ Google நிறுவனம் தற்போது launch பண்ணியிருக்கிறார்கள். இது மிகவிரைவில் பரவலாக பாவனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தனை உபயோகமான AI கள் மூலம் பல பாதகச் செயல்களும் இப்போது அரங்கேற ஆரம்பித்து இருக்கின்றன. அதில் புகைப்படங்களிலும் வீடியோக்களிலும் ஒருவரது முகத்துக்கு பதிலாக வேறொருவரின் முகத்தை பொருத்தி அவர்களை இழிவு செய்வதும் இப்போது நடைபெறுகிறது. அவ்வாறு நடைபெற்றால் என்ன செய்யலாம் என்பதை பார்ப்போம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெண்களுக்கான விழிப்புணர்வுத் தகவல்

AI #Safety


எவரேனும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் photoshop தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உங்களது புகைப்படங்களை நிர்வாண படங்களோடு பொருத்தியிருப்பதாக அறிந்தால், https://www.stopncii.org/ என்ற லின்க் இற்கு பிரவேசித்து அதன் முதல் பிரதியை பதிவிடுங்கள்.

அவ்வாறு செய்யும் பட்சத்தில் நிர்வாண படத்துடன் பொருத்தப்பட்டு, உங்களுடைய படங்கள் பதிவிடப்பட்ட அனைத்து தளங்களிலிருந்தும் நீக்கப்படும். இது தொடர்பில் எவரோடும் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்களுடைய தனிப்பட்ட தரவுகள் பாதுகாக்கப்படும்.

எவரேனும் மேற்கூறியவாறு படங்களை பதிவிடுவதாக அறிந்திருந்தால் cybercrime பிரிவுக்கு அறிவித்து அவர்கள் ஊடாக வழக்கு தொடரவும் முடியும்.

இது South West Grid for Learning என்ற பிரித்தானிய நிறுவனம் வழங்கும் சேவையாகும்.

#AI #Safety





## காதலித்துப் பாருங்கள்

சித்தி ஜெஸீனா நிஸ்றீன்


இளமைப் பருவத்தில்
இனித்திட்ட காதல்
இதயத்தை தொட்டுச்
சென்று
இன்பராகத்தையூட்டியது

பருவ வயதில்
பக்குவமாய் மலரும்
பரவசம் ததும்பிடும்
பருவத்துக் காதல்

நினைவுகள் தோன்றும்
நெஞ்சத்தில்
மகிழ்ச்சி யூட்டும்
மகுடம் சூட்டும்
காதல் செடிகள்
மலர் மாலையாய் மகிழ்விக்கும்


காதலித்துப் பாருங்கள்
காலமெல்லாம்
கனவாகும்
காத்திருக்கும் நேரமெல்லாம்
கதை கதையாய் பாடச் சொல்லும்

இளமையின் நினைவாய்
இறந்த கால நிகழ்வாய்
இனிதாய் வந்த உறவு
இறக்காமல் என்றும் வாழும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிஸ் நிலையம் செல்லத் தேவையில்லை

இருந்த இடத்தில் இருந்து கொண்டே இலங்கை பொலிஸ்மா அதிபருக்கு (IGP) முறைப்பாடுகளை வழங்க முடியும்.

தவறு செய்கின்ற பொலிஸார் தொடக்கம் பொதுமகன் வரை அனைத்து விதமான முறைப்பாடுகளையும் இணையம் மூலமாகவே வழங்க முடியும். அதற்காக இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள இணையதள முகவரி...

(http://www.telligp.police.lk)


இணையதளம் சென்று மூன்று மொழிகளிலும் உங்களுக்கு விரும்பிய மொழியில் இணைய விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய முடியும்.

பின்வரும் தகவல்களை மேற்குறித்த இணைத்தளம் உங்களிடம் கேட்கும்.

01. உங்களது மாவட்டம்
02. அருகிலுள்ள பொலீஸ் நிலையம்
03. புகாரின் வகை
04. உங்களது பெயர்
05. உங்களது முகவரி
06. தே.அ.அ.இலக்கம்
07. உங்களது தொடர்பு இலக்கம்
08. மின்னஞ்சல் முகவரி
09. புகார் - 03 மொழிகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் கொடுக்கலாம்
10. புகார் விடயம்
11. புகாரின் நிலை குறித்து எனக்கு பதில் அறிவிப்பு தேவை எனும் இடத்தில் Tik செய்ய வேண்டும்
12. புகார் தொடர்பான ஆவணப் படங்கள் இருந்தால் அதனை பதிவேற்றம் செய்யலாம் (அதிகபட்ச இணைப்பு அளவு 5 MB)

இதனை நீங்கள் பதிவிடும் போது 24 மணிநேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

# கரட் பிட்டும் கருவாட்டு தொக்கும்



மிஸ்ரியா அமீன்

**பிட்டு செய்ய தேவையான பொருட்கள்....**

வறுத்த அரிசிமா 2 கப்

கரட் துருவல் 1கப்

துருவிய தேங்காய் 1கப்

உப்பு நீர் அளவாக

**செய்முறை...**

மாவை உப்பு கலந்த நீர் விட்டு ஊற வைத்து குழைத்துக் கொள்ளவும்.

கரட்துருவலையும் கலந்து கொள்ளவும்.

பின்னர் பிட்டுவம்பில் அடியில் தேங்காய் போட்டு. பின்னர் மாக்கலவை இட்டு மேலால் தேங்காய்பூப்போட்டு ஆவியில் அவித்து எடுக்கவும்.

**கருவாட்டுதொக்கு செய்ய தேவையான பொருட்கள்...**

கருவாடு 250 கிராம்(கீரிக்கருவாடு சுவை அதிகம்)
வெங்காயம் 250 கிராம்
புளிக்கரைசல் அளவாக
தனிமிளகாய்தூள் 2கரண்டி
உப்பு மஞ்சல் சிறிது
எண்ணை சீரகம்
கறிவேப்பிலை
கட்டித்தேங்காய்ப்பால் 1கப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**செய்முறை...**

கருவாட்டை கழுவி சுத்தம்செய்து பொரித்து எடுத்துக்கொள்ளவும். ஒரு வானலியில் எண்ணை விட்டு சீரகம் கறிவேப்பிலை வெங்காயம்போட்டு வதக்கவும் நன்றாக வதங்கியதும் மிளகாய்த்தூள், மஞ்சள் தூள் இட்டு புளிக்கரைசல் உப்பு விட்டுகொதிக்க விடவும். பின்னர் பொரித்த கருவாடு கட்டிப்பால்விட்டு நன்றாக பிரட்டி தொக்கு பருவத்தில் இறக்கி விடவும். இரவு உணவிற்கு சுடச்சுட இந்த மழைகாலத்திற்கு மிகவும் சுவையாக இருக்கும்.



# யதார்த்தம்

ஷீப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

இறுகப் பற்றிய ஒன்று
சட்டென விடுபடின்
இதயத்தில்
இடம்பிடித்த ஒன்று
இமை மூடும் முன்
மறைந்து செல்கையில்
இனித் தொடருமென்ற ஒன்று
இறகு விழுவது போல்
உதிர்ந்து கிடக்கையில்
அழவே இல்லை நான்
கண்கலங்கவும் இல்லை
கதறவும் இல்லை
விம்மவும் இல்லை
காரணம் கேட்ட போது
என் மனம் சொன்னது
தொடராத உறவுகளும்
நீளாத சொந்தங்களும்
தனிமை நிறைந்த வாழ்க்கையும்
தனித்து விடப்படும் ரணங்களும்
இவ்வாழ்வின் யதார்த்தமென

பயணிக்கும் பாதையில்
வழித் துணையாக சிலர்
பேச்சுத் துணைக்கு சிலர்
முகமலர புன்னகைக்க சிலர்
முறிந்து போன கிளையை
தூக்கி நிறுத்தும் முயற்சியில் சிலர்
உடைந்த கிளையை
இன்னும் இன்னும் உடைக்க சிலர்
உற்சாகம் தர சிலர்
உதறித் தள்ள சிலர்
கரம் பற்றும் சிலர்
கைதாக்கும் சிலர்
புரிந்து கொள்ளும் சிலர்
பிரிந்து செல்லும் சிலர்
பிரித்து விடும் சிலர்
பிரிவையே மறந்து போகும் சிலர்
பிடிவாதமாய் சிலர்
அதை ஊன்றுகோலென
பிடித்துக் கொள்ளும் சிலர்
நேரத்துக்கு சிலர்
கூட நடக்கும் போது
கண்டு கொள்ளாத சிலர்
இழந்த பின்
கண்ணீர் விட்டுக் கதறும் சிலரென
இத்தனை சிலரையும்
அறிந்து வைத்த என் விழிகளுக்கு

இறுகப் பற்றிய ஒன்று
சட்டென விடுபட்ட போதும்
இதயத்தில் இடம்பிடித்த ஒன்று
இமை மூடும் முன்
மறைந்த போதும்
இனித் தொடருமென்ற ஒன்று
இறகு விழுவது போல்
உதிர்ந்து கிடக்கும் போதும்
அழுகை வரவே இல்லை
இனியும் வரப்போவதில்லை

ரணங்களுக்கு
போதையாகி விட்டது
மனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைப்படுதலும் அதற்கான தீர்வும்

Dr. ஜலீலா முஸம்மில்
(MBBS/SL)
ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்



**வெள்ளைப்படுதலுக்குக் காரணமான, பிறப்புறுப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் மிகமுக்கியமான சில தொற்றுகள் குறித்தும், அது ஏற்படுத்தும் அறிகுறிகள் குறித்தும் பெண்கள் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.**


பெண்களுக்கு வெள்ளைப்படுதல் என்பது இயல்பான ஒரு விடயம். ஆனால் சில நேரங்களில் அது பிரச்சினையின் அறிகுறியான சந்தர்ப்பங்களாகவும் இருக்கலாம். எது இயல்பாக ஏற்படும் வெள்ளைப்படுதல், எது நோய்க்கான அறிகுறி என்று கண்டறிவது சற்று சிரமமான விடயமாக இருந்தாலும் அதைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்தல் மூலம் வேறுபிரித்தறிய முடியும்.

வெள்ளைப்படுதல் என்பது, தொற்றும் அபாயம் மிக்கது. இது பெண்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது. குறிப்பாக, வெயில் காலத்தில் இதன் தீவிரம் அதிகமாக இருக்கலாம். அசௌகரியத்தை ஏற்படுத்தும் இந்த விடயம் குறித்து பெரும்பாலான பெண்களிடம் போதிய விழிப்புணர்வு இருப்பதில்லை. பெண்கள் வெள்ளைப்படுதல் பற்றிக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

எல்லாப் பெண்களுக்குமே வெள்ளைப்படுதல் நிகழ்கிறது. பிறப்புறுப்பு, கருப்பையின் வாய் என்பவற்றின் வெளிச்சுவர்களில் உள்ள சுரப்பிகளில் இருந்து வரக்கூடிய கசிவே வெள்ளைப்படுதல். இது சாதாரணமாக இருக்கும்வரை எந்தப் பிரச்சினையும் இல்லை. சொல்லப்போனால் வெள்ளைப் படுதல் என்பது ஆரோக்கியமான வாழ்வின் அடையாளம். இது நிறமற்ற, லேசான பிசுபிசுப்புத்தன்மை கொண்ட திரவமாகும். இயற்கையாகச் சுரக்கும் அமிலத்தன்மை நிறைந்த அந்தத் திரவம் கிருமிகள் மற்றும் தொற்றுகள் ஏற்படாமல் பிறப்புறுப்பைப் பாதுகாக்கும்.

இந்தக் கசிவு இல்லையென்றால் என்னவாகும்? பிறப்புறுப்பு உலர்ந்துவிடும். ஏன் பிறப்பிறுப்பில் ஈரப்பசைத் தன்மை இருக்க வேண்டும்? வெள்ளைப்படுதலில் சிறிதளவு அமிலத்தன்மை இருக்கும். இது கிருமிகளைக் கொல்லக் கூடியது. இதேபோல் பின்னாளில் ஆண்-பெண் உறவு நிகழும்போது பிறப்புறுப்பு உலர்வாக இருந்தால் வரக்கூடிய எரிச்சலையும் வலியையும் இது கட்டுக்குள் வைக்கும்.

சாதாரண வெள்ளைப்படுதல் என்பது இறந்துபோன செல்களும் பிறப்புறுப்பில் உள்ள நுண்ணுயிரிகளும் இணைந்தது. அது மெல்லிதாக ஒட்டக்கூடிய தன்மையுடனும் நீளக் கூடியதாகவும் இருக்கும். வெள்ளை நிறத்திலோ லேசான மஞ்சள் கலந்த வெள்ளையாகவோ இருக்கும். எவ்விதத் துர்நாற்றமும் இருக்காது. இத்தகைய வெள்ளைப்படுதல் பற்றிப் பதற்றம் தேவையில்லை.



பாக்டீரியா, மதுவம் போன்ற தொற்றுக்கிருமிகள் பிறப்புறுப்பைப் பாதித்தால், அந்தப் பகுதியில் சுரக்கும் திரவத்தின் அமிலத்தன்மை காரத்தன்மையாக மாற்றமடையும். நிறமற்ற நிலையில் வெளிப்படும் திரவம் அதன்பிறகு வெள்ளை, சிவப்பு, மஞ்சள் மற்றும் பச்சை நிறங்களில் வெளிப்படும்.

மாதவிடாய்ச் சுழற்சியின்போது வெள்ளைப்படுதலின் தன்மை மாறும். சுழற்சிக்குமுன், சுழற்சிக்குப்பின், சுழற்சியின் நடுப்பகுதி போன்ற நாட்களில் வெள்ளைப்படுதல் அதிகமாக இருக்கும். நடுப்பகுதியில் வரக்கூடிய வெள்ளைப்படுதல் சளி போன்று இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் எடுத்துப் பார்த்தால் இரண்டு விரல்களுக்கு இடையில் நீண்டு நிற்கும். இந்த நாட்களில் பெண்ணின் கருமுட்டை முதிர்ச்சியடைந்து, விந்தணுவைச் சந்திக்கத் தயாராக இருக்கும். இந்த நாட்களில் உறவுகொண்டால் கருவுற வாய்ப்புள்ளது.

தொற்று,பாதிப்பு எதுவும் இல்லாமலும்கூட பெண்களுக்கு வெள்ளைப்படுதல் ஏற்படலாம். இது அடுத்த சில தினங்களில் சரியாகிவிடும். பயப்படத் தேவையில்லை. பாதிப்பில்லாத இந்த வெள்ளைப்படுதல், பெரும்பாலும் பருவமடையும் காலத்துக்கு சில நாள்களுக்கு முன்னரும், மாதவிடாய்க்கு முந்தைய அல்லது பிந்தைய இரு நாள்களும் மற்றும் கர்ப்பமான நேரங்களிலும் மட்டுமே ஏற்படும்.

## வெள்ளைப்படுதலை எப்போது பிரச்சினைக்குரியதாக பார்க்க வேண்டும்?


#வெள்ளைப்படுதல் துர்நாற்றம் வீசும்போது.

#வெள்ளைப்படுதலின் நிறம் மாறும்போது. பச்சை, சாம்பல் நிறம் அல்லது சீழ் போன்று இருக்கும்.

#வழக்கத்தைவிட அதிகமான அளவில் வெள்ளைப்படும்போது.

#பிறப்புறுப்புப் பகுதிகளில் அரிப்பு ஏற்படும்போது.

#தயிர் போன்று கெட்டியாகக் காணப்படும்போதோ சீழ் கலந்து இருக்கும்போதோ.



#வெள்ளைப்படுதலில் ரத்தம் கலந்து வந்தால்

#அடிவயிற்றில் வலி, காய்ச்சல், பசியின்மை, எப்போதும் சோர்வு, எடைக் குறைவு போன்ற அறிகுறிகள் தென்பட்டால்.

#இளம் பெண்களுக்கு வெள்ளைப்படுதல் அதிகமாக இருக்கும்போது.

#சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல்

#பிறப்புறுப்பில் ஒவ்வாமை ஏற்பட்டு, அந்தப் பகுதி முழுவதும் சிவந்து காணப்படுவது

#பிறப்புறுப்பில் புண் அல்லது கொப்புளங்கள்

#உடலுறவின்போது பிறப்புறுப்பில் தீவிர வலி

இந்த அறிகுறிகள் தென்பட்டால் உடனே மருத்துவரை அணுகுவது நல்லது. நாமாகவே கைவைத்தியம் செய்கிறோம் என்று எதையாவது செய்யக் கூடாது. சிலர் பிறப்புறுப்பைக் கழுவி, ஆயின்மென்ட்டைத் தடவி சமாளிக்கப் பார்ப்பார்கள். இது தவறு. வெள்ளைப்படுதல் குறித்து இளம் பெண்கள் மட்டுமல்ல இல்லத்தரசிகளும் வெளியே சொல்லக் கூச்சப்படுகின்றனர். ஆரோக்கியம் குறித்தவற்றில் கூச்சம் தேவையில்லை.

## அசாதாரணமான வெள்ளைப்படுதல் வருவதற்கு என்னென்ன காரணங்கள் இருக்கக்கூடும்?

1. சிறுநீர்ப்பாதையில் நோய்த்தொற்று.
2. பிறப்புறுப்பில் வரக்கூடிய தொற்று.
3. பால்வினை நோய் தொடர்பான தொற்று.

சிறுநீர்ப்பாதைத் தொற்றுக்கான காரணங்கள்

#நீண்ட நேரம் சிறுநீர் கழிக்காமல் அடக்கிக்கொள்வது.

#அதிகப்படியான வியர்வை வரும்போது, பருத்தி உள்ளாடைகள் இல்லாமல் நைலான் உள்ளாடைகள் அணிவது.

#சிறுநீர்த் தடப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாதது.

பிறப்புறுப்பில் ஏற்படக்கூடிய தொற்றுக்கும் சிறுநீர்ப்பாதைத் தொற்றுக்கும் தொடர்பு உண்டு. பிறப்புறுப்புத் தொற்று, சிறுநீர்ப்பாதைத்தொற்றாக மாறலாம். சிறுநீர்ப்பாதைத் தொற்று பிறப்புறுப்புத் தொற்றாக ஆகலாம். எதுவாக இருந்தாலும் சிகிச்சை பெறுவது அவசியம்.

வெள்ளைப்படுதலுக்குக் காரணமான, பிறப்புறுப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் மிகமுக்கியமான சில தொற்றுகள் குறித்தும், அது ஏற்படுத்தும் அறிகுறிகள் குறித்தும் பெண்கள் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்வினைத் தொற்று

பாதுகாப்பற்ற உறவு மற்றும் பிறப்புறுப்பு சுகாதாரத்தைப் பின்பற்றாமல் உறவு கொள்வதால் இத்தகைய தொற்றுடன் கூடிய பாதிப்புகள் ஏற்படும். பிறப்புறுப்பில் வீக்கம் அல்லது புண், கொப்புளங்கள் போன்ற அறிகுறிகளைக் கொண்டு பால்வினைத் தொற்று ஏற்பட்டிருக்கிறது என்பதை அறியலாம்.இந்த பாதிப்பு உள்ளவர்களுக்கு, பச்சை மற்றும் மஞ்சள் நிறத்தில் வெள்ளைப்படுதல் ஏற்படலாம். தொற்றுத் தீவிரமானால் சாம்பல் கலந்த வெள்ளை நிறத்தில் காணப்படும். இதைச் சரிசெய்யாவிட்டால், சிறுநீர்ப் பாதை மற்றும் கர்ப்பப்பைக்குத் தொற்று பரவும்.

பால்வினை நோய்த்தொற்று ஏற்படும் வேளைகளில் பெண் மட்டும் சிகிச்சை எடுத்தால் போதாது. அவருடைய துணைவரையும் சிகிச்சைக்கு அழைத்துச்செல்ல வேண்டும். ஏனென்றால், பால்வினைத் தொற்று ஆணிடமிருந்து பெண்ணுக்கும் பெண்ணிடமிருந்து ஆணுக்கும் பரவும். இருவரும் சேர்ந்து சிகிச்சை பெறாவிட்டால் பாதிப்பு தொடரும்.


## காளான் தொற்று

பிறப்புறுப்பில் இயற்கையாகக் காணப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளான மதுவம் மூலம் காளான் தொற்று ஏற்படும். சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், பிறப்புறுப்பில் புண் உண்டாகி எரிச்சல் ஏற்படலாம்.இந்தத் தொற்றின்போது வெண்மை நிறத்தில் வெள்ளைப்படுதல் இருக்கும். இதைச் சரிசெய்யாவிட்டால் மாதவிடாய்க் கோளாறுகள், கர்ப்பப்பை வாய்ப் பகுதியில் வீக்கம் ஏற்படலாம்.

இவைதவிர, உடலில் ஏற்படும் நோய் பாதிப்புகள், அஜீரணக் கோளாறு போன்றவையும் பாக்டீரியா தொற்றை ஏற்படுத்தி, பிறப்புறுப்பு தொற்றுக்கு வழிவகுக்கலாம். சிறுநீர் கழிக்கும்போது பிறப்புறுப்பில் அதிக வலி ஏற்படுவதன் மூலம் இதனை அறிந்துகொள்ள முடியும்.

இந்த பாதிப்புகளின்போது வெள்ளை அல்லது மஞ்சள் நிறத்தில் வெள்ளைப்படுதல் வெளிப்படலாம். முதல் நிலையிலேயே பிரச்னையைக் கண்டறிந்து மருத்துவ ஆலோசனை பெற்றால் எளிதாகச் சரிசெய்துவிடலாம்.

சின்னப் பெண்தானே பிறப்புறுப்புத் தொற்று பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று நினைக்கக்




கூடாது. இதனால் பல பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிறப்புறுப்புத் தொற்று, கருப்பைக்குப் போய் அங்கிருந்து கருக்குழாய்க்குப் போகலாம். இதனால், கருக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு, பின்னாளில் குழந்தைப்பேறு தொடர்பான பிரச்சினைகள் வரலாம். இடுப்புப் பகுதிகளிலும் பிரச்சினைகள் வரலாம். பின்விளைவுகளைத் தவிர்க்க வேண்டும் என்றால் அசாதாரணமான வெள்ளைப்போக்குக்கு ஆரம்பத்திலேயே சிகிச்சை எடுத்துக்கொள்வது அத்தியவசியமாகும்.

## பிறப்புறுப்புத் தொற்றுகளைத் தவிர்க்க என்ன செய்வது?

பிறப்புறுப்புப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். நீண்ட நேரம் சிறுநீரை அடக்க முயலக் கூடாது. வீடு தவிர வெளியிடங்களில் கழிவறையைப் பயன்படுத்தப் பிடிக்காது என்று நீண்ட நேரம் சிறுநீரை அடக்கிக்கொள்வது தவறு. மாதவிடாயின்போது பயன்படுத்தக்கூடிய துணியோ நாப்கினோ சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளாடைகளும் சுத்தமாக இருக்க வேண்டும். பருத்தி உள்ளாடையே நல்லது.

வெள்ளைப்படுதலை ஆரோக்கியக் கேடாகப் பார்க்காமல் நம் உடலின் ஆரோக்கியத்தையும் ஆரோக்கியக் கேட்டையும் உணர்த்தும் அறிகுறியாகப் பார்க்க வேண்டும்.

இப்படி, தொற்று காரணமாக ஏற்படும் வெள்ளைப்படுதலுக்கு, முறையாகச் சிகிச்சை எடுக்காவிட்டால், கர்ப்பப்பையிலும் இனப்பெருக்க உறுப்பிலும் நோய்கள் ஏற்படலாம். பெண்களின் இனப்பெருக்கத் தொகுதியில் சிறுநீர்ப்பாதையும் பிறப்புறுப்பும் மிக நெருக்கமாக அருகாமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கும். ஒரு பகுதியில் ஏற்படும் தொற்று மற்ற இடத்துக்கு வேகமாகப் பரவக்கூடிய வாய்ப்புகள் அதிகம். எனவே, வழமைக்கு மாற்றமான வெள்ளைப்படுதலால் பாதிக்கப்பட்டவர்கள் தாமதிக்காமல் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

### பரிசோதனைகள்

வெள்ளைப்படுதலின்போது வெளிப்படும் திரவத்தை ஆய்வகப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். பால்வினைத் தொற்று உள்ளதா என்பதைக் கண்டறிய ரத்த மாதிரியை வி.டி.ஆர்.எல் (ஏனுசுடு) பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டியிருக்கும். தொடர்ச்சியாக வெள்ளைப்படுதல் இருந்தாலோ, அப்போது துர்நாற்றம் வீசினாலோ உடனடியாக மருத்துவரை அணுகவேண்டும்.

### தடுக்க, தவிர்க்க...

- பிறப்புறுப்பைச் சுத்தமாக வைத்துக் கொள்வதன்மூலம், வெள்ளைப்படுதலைத் தடுக்கலாம். பெண்கள் மாதவிடாய்க் காலத்திலும், உடலுறவுக்குப் பிறகும் பிறப்புறுப்பு சுகாதாரத்தில் கூடுதல் கவனமாக இருக்கவேண்டும்.
- உள்ளாடைகளைத் தேர்வு செய்வதில் கவனமாக இருக்கவேண்டும். பருத்தித் துணிகளால் ஆன உள்ளாடைகளைத் தேர்வு செய்வது நல்லது. நைலான் வகை உள்ளாடைகளை முற்றிலும் தவிர்க்கவேண்டும்.
- காசநோய், மலேரியா, மஞ்சள் காமாலை இருந்தாலும், பிறப்புறுப்பில் தொற்று ஏற்பட்டு வெள்ளைப்படுதல் ஏற்படலாம்.
- நீண்ட நாள் கருத்தடை சிகிச்சை பெறுபவர்களுக்கு வெள்ளைப்படுதல் பிரச்னை ஏற்படலாம். எனவே, கருத்தடை சாதனங்கள் உபயோகிப்பவர்கள் முறையான மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.
- மருத்துவர் பரிந்துரையின்றி ஆன்டிபயாடிக் மாத்திரைகள் உட்கொள்வதாலும்கூட வெள்ளைப்படுதல் பிரச்னை ஏற்படலாம்.

### சிகிச்சை:

வெள்ளைப்படுதல் எதனால் ஏற்பட்டுள்ளது என்பதை மருத்துவப் பரிசோதனைமூலம் கண்டறிந்து தகுந்த சிகிச்சை பெறுவதன்மூலம் குணமடையலாம்.

### பாட்டி வைத்தியம்

வெள்ளைப்படுதல் பிரச்னை உள்ளவர்கள், கீழாநெல்லியை அரைத்து பசும்பாலில் கலந்து ஏழு நாள்கள் காலையில் வெறும் வயிற்றில் சாப்பிடுவது பிரச்னையைச் சரிசெய்யும்.

## தேனீக்கள் பற்றி சில சுவாரஷ்யமான தகவல்கள்.



உலகத்தில் அஞ்சு வகை தேனீக்கள் இருக்கு. மலைத் தேனீ, இந்தியத் தேனீ, கொம் புத்தேனீ, இத்தாலியன் தேனீ, கொடுக்கில்லாத் தேனீ.
இதில் இந்திய, இத்தாலிய மற்றும் கொடுக்கில்லாத் தேனீக்களைத் தான் மனிதர்கள் வளர்கிறார்கள். ஏனைய தேனீக்கள் தானாகவே காட்டில் வளரும்.

ஒரு குடும்பத்தில் ஒரு ராணித் தேனீ, சிலநூறு ஆண் தேனீக்கள், பல்லாயிரம் பணித் தேனீக்கள்(பெண்கள்)இருக்கும்.

இதில் ஆண்தேனீக்களுக்கு 90நாள்களும்,பணித்தேனீக்களுக்கு 70 நாள்களும், ராணித் தேனீக்கு இரண்டுவருடங்களும் ஆயுள் காலம்.

ராணித் தேனீக்களுக்கு முட்டையிடுவது மட்டும்தான் வேலை.

ஆண் தேனீக்கு,ராணியோடு புணர்வதும் தேன் கூட்டைப் பாதுகாப்பதும் கடமை.

மற்ற எல்லாவேலைகளும் பணித் தேனீக்கள் பொறுப்பு.

உணவுச் சேகரிப்பு, தேன்கூடு கட்டுவது,தேனைப்பக்குவப்படுத்துவது, கூட்டைச்சுத்தமாகப் பராமரிப்பது போன்ற எல்லாவேலைகளையும் பணித் தேனீக்கள்தான் கவனிக்கும்.

தேனீக்களின் பொறியியல் அறிவுஅபாரமானது. தேன் கூட்டை அறுங்கோண வடிவத்துல கட்டும். ஏன்னா, அப்பத்தான் ஒருசெண்ட்டிமீட்டர் இடத்தைக்கூட வீணாக்காம முழுசாப் பயன்படுத்த முடியும்.

ஆண்தேனீகளுக்குப் பெரிய அறுங்கோண செல், பணித் தேனீக்களுக்குச்சிறியஅறுங்கோண செல் வடிவத்தில் கூடுகட்டிட்டு, ராணித் தேனீக்கு சிலிண்டர்வடிவில் செல் கட்டும்.

கூட்டின் கட்டுமானம்திருப்தியாக இருந்தால் மட்டுமே, ராணித்தேனீ அதில் முட்டையிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்நாள் முழுவதும் கல்வி

(Lifelong Learning)

கலாநிதி முஹம்மது மஜீத் மஸ்றூபா
சிரேஷ்ட உதவி நூலகர்,
விஞ்ஞான நூலகம்,
தென்கிழக்கு பல்கலைக்கழகம்
இலங்கை.

**அறிமுகம்:**

வாழ்நாள் முழுவதும் கற்றல் எனும் கருவி கோட்பாடு ஒரு புதிய கோட்பாடாக என்று பல கல்வியியலாளர்களையும் பல்துறை சார் நிபுணர்களையும் என் சாதாரண மனிதர்களையும் கூட கவர்ந்துள்ள ஒவ்வொரு தனி மனிதனாலும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு விடயமாக உள்ளது. இது முறை சார்ந்த மற்றும் முறை சாரா கல்விக்கு அப்பால் ஒவ்வொரு தனி மனிதனுடைய வளர்ச்சியையும் மேம்படுத்துகின்ற சுயமாகத் தொடங்கப்படுகின்ற ஒரு கல்வியின் வடிவமாகும். பல்வேறு அறிஞர்களும் இதற்கு பல்வேறு வகையான விளக்கங்களை கொடுத்திருந்தாலும் ஐரோப்பிய சமூகங்களின் ஆணை குழு (2001) மிகச் சுருக்கமாக கீழ் வருமாறு வரைவிலக்கணப்படுத்தி உள்ளது.

தனிப்பட்ட, தனிமனித, சமூக, மற்றும் வேலை வாய்ப்பு தொடர்பான விடயங்களில் அறிவு, திறன்கள், மனப்பாங்கு போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ளப்படும் கற்றல் செயல்பாடு வாழ்நாள் முழுவதும் கற்றல் எனப்படும்.

எனவே தனி மனித வாழ்வில் வாழ்நாள் முழுவதும் கற்றல் எனும் கோட்பாடு இன்றி அமையாத ஒரு விடயமாகும்.

**முக்கியத்துவம்:**

வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்கள், விஞ்ஞான வளர்ச்சி, சமூகத்தில் ஏற்படுகின்ற பல்வேறு வகையான புரட்சிகள், மாற்றங்கள், மற்றும் பெருந்தொற்று போன்றவை நாங்கள் செய்கின்ற அன்றாட பணிகளிலும் எமது வாழ்விலும் மிகப் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

மிக விரைவான சமூக, பொருளாதார, அரசியல், மற்றும் தொழில்நுட்ப மாற்றங்களுக்கு முகம் கொடுத்து சவால்களை வெற்றி கொண்டு மிளிர்வதாக இருந்தால் நாம் தொடர்ச்சியாக எமது அறிவு, திறன்களை வளர்த்துக் கொள்வது அவசியமாகும்.

உதாரணமாக கடந்த வருடங்களில் ஏற்பட்ட பெருந்தொற்று மற்றும் பொருளாதார பின்னடைவு போன்றவற்றால் வீட்டிலிருந்து வேலை செய்தல், மின்னியல் முறையில் கற்றல், கற்பித்தல் போன்ற சவால்களை நாம் எதிர்கொள்ள நேர்ந்தது.

கற்றல்-கற்பித்தல் செயல்முறைகள் புதிய பரிணாமம் எடுத்தது போல வர்த்தகம், சிறு கைத்தொழில் போன்றவையும் புதிய பரிணாமம் எடுத்தன.

நாங்கள் ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய மிக முக்கியமான கொள்கையாக வாழ்நாள் முழுவதும் கல்வி எனும் கோட்பாடு இருப்பது அவசியமாகும். இதனடிப்படையில் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.


**1. கல்வி நடவடிக்கைகள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியுடன் எல்லை படுத்தப்பட்டது அல்ல.**
**2. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயும் கல்வி நடவடிக்கைகள் தொடரப்படுதல் வேண்டும்.**
**3. மிகவும் வளையத்தக்க அல்லது நெகிழ்வான கட்டமைப்புக்குட்பட்ட கல்வி முறைகளை பயன்படுத்துதல் அவசியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. கல்வி நடவடிக்கைகள் வாழ்நாள் செயல் முறையாக வடிவமைக்கப்படுதல் வேண்டும்.**

ஒரு பிள்ளை பிறந்ததிலிருந்து இறக்கும் வரை தான் வாழும் சமூகத்தில் ஒரு பயன்மிக்க பங்குதாரராக இருக்க வேண்டுமானால் வாழ்நாள் முழுவதும் கற்றல் கோட்பாடு இன்றியமையாதது. இக்கொள்கை கீழ்வரும் விடயங்களில் கீழ்வரும் இடங்களில்.'. சந்தர்ப்பங்களில் பின்பற்றப்படுகின்றன.




**2. தொழில் சார்ந்த தேவைகள்: வேலை செய்யும் இடங்களில் அன்றாடம் ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளை கண்டறியவும் புதிய அல்லது தற்காலத்துக்கு ஏற்ப தொழில்சார் இலக்குகளை அடைவதை நோக்கமாக கொண்ட திட்டங்களை விளங்கிக் கொள்ளவும், நிருவகிப்பதற்கும், நடைமுறைப்படுத்தவும், மற்றும் புதிய விடயத்தை தொடர்ந்து அமுல்படுத்துவதற்கும் இது இன்றி அமையாததாகும்.**

**3. தொடர்ச்சியான தொழில் முறை வளர்ச்சி** (continuous professional development): **தொழில்முறை வளர்ச்சி என்பது ஒருவர் தான் வேலை செய்யும் இடத்தில் மற்றும் தனது தொழிலில் சிறந்த தொழில் வான்மையை பெறுவதும் உயர்ந்த இடத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்காகவும் தொடர்ச்சியான கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுலதாகும்.**

**தேவையான திறன்கள்:**


1. சுய மேலாண்மை திறன்கள்: தனது தொழில்சார் வளர்ச்சிக்கு தேவையான தீர்மானங்களை எடுப்பதற்குரிய ஆற்றல் மற்றும் திறன்களை வளர்த்துக் கொள்ளுதல். இதன் போது ஒருவர் தனது அறிவு மட்டத்தை மதிப்பீடு செய்யவும் அதனை மேம்படுத்துவதற்கும் தேவையான விடயங்களை பட்டியல் படுத்தி அதற்கேற்றாற்போல் தீர்மானங்களை மேற்கொண்டு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.2. கற்றலுக்கு வேண்டிய கற்றல் திறன் (learning to learn competencies):

கற்றலுக்கு வேண்டிய கற்றல் திறன்கள் எனும் போது மிக முக்கியமாக தனது மொழி வளம், நேர முகாமைத்துவம் மற்றும் தகவல் தேடும் திறன் போன்றவை முக்கியமானவை.

3. தொழில் முனைவோர் ஆரம்ப திறன்: தனது கற்றல் நடவடிக்கைகளை குறிக்கோள்களை ஒழுங்கமைத்து கொள்வதற்கும் அதற்கு தேவையான நிதி மற்றும் திட்டமிடலை மேற்கொள்வதற்கும் சரியான முறையில் அதனை முகாமைத்துவம் செய்வதற்கும் வேண்டிய திறன்களை ஒவ்வொரு தனி மனிதனும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

4. தகவல் எழுத்தறிவு திறன் (Information Literacy Skills): தகவல் எழுத்தறிவு திறன் என்பது இறுதியாக இங்கே குறிப்பிடப்பட்டிருந்தாலும் மிக முக்கியமாக ஒரு தனி நபர் வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கோட்பாட்டை பின்பற்றுவதற்கு மிக மிக அவசியமாகும்.

நாம் எல்லோரும் எழுத்தறிவுடையவர்களாக இருந்தாலும் தகவல் எழுத்தறிவு என்பது அதிலிருந்து சற்று வித்தியாசமானது. அமெரிக்க நூலக சங்கத்தின் வரைவிலக்கணத்தின்படி ஒரு தனி நபர் தனக்கு தேவையான தகவல்களை தானே தேடி பெற்றுக் கொள்வதற்கும் அத்தகவல்களை மதிப்பீடு செய்வதற்கும் அவற்றை சரியான முறையில் பயன்படுத்துவதற்கும் தேவையான ஒரு தொகுதி திறன்கள் தகவல் எழுத்தறிவு என்று கூறப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவலறிவு என்பது தற்காலத்தில் வாழும் ஒவ்வொருவருக்கும் மிகவும் அவசியமாகும். தகவல்கள் பல்வேறு வகைகளிலும், வடிவங்களிலும், பல்வேறு ஊடகங்களிலும் நாளுக்கு நாள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. மிகப் பொருத்தமான தகவல்களை தேடி, வடிகட்டி, பெற்று அவற்றை மதிப்பீடு செய்து தமது கற்றல் கற்பித்தல் தேவைகளுக்கு அவற்றை பயன்படுத்துவது மிகவும் முக்கியமான ஒரு செயல்முறையாகும்.

இலத்திரனியல் முறை கற்றல், கற்பித்தல் மற்றும் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கு தகவலறிவு மிகவும் உந்து சக்தியாக இருக்கிறது.

**முடிவுரை:**

வாழ்நாள் முழுவதும் கல்வி எனும் கோட்பாட்டை கடைபிடித்து நாம் ஒவ்வொருவரும் எமது தனிப்பட்ட வாழ்க்கையிலும் தொழிலிலும் உயர்ந்து நாம் தொழில் செய்கின்ற நிறுவனத்தின் மேம்பாட்டுக்காகவும், எமது சமூக, மற்றும் தேசிய மேம்பாட்டுக்காகவும்உழைப்போம்.

Images From :
https://images.app.goo.gl/TaNYDBiRrVKt1k5T6
https://hospitalityinsights.ehl.edu/lifelong-learning-and-leadership-development-success

## சிந்தனைக்கு...

ஒரு சமூகத்தை வீழ்த்துவதற்கு மூன்று விடயங்களைச் செய்ய வேண்டும்.

1- குடும்பக்கட்டமைப்பைச் சீர்குலைத்தல்
2- கல்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தல்
3 - முன்மாதிரிகளை வீழ்த்தல்

குடும்பக் கட்டமைப்பைச் சீர்குலைக்க வேண்டுமானால் அடிக்கடி வீட்டை விட்டு வெளியேறும், வீட்டு எஜமானி என்ற பட்டத்தை வெறுக்கும் தாய்மார்களை உருவாக்க வேண்டும்.

கல்வியில் வீழ்ச்சி ஏற்பட வேண்டுமானால் சமூகத்தில் ஆசிரியர்களுக்குரிய அங்கீகாரம் வழங்கப்படாமல் மாணவர்களால் மதிக்கப்படாத ஒரு நிலையை உருவாக்க வேண்டும்.

முன்மாதிரிகளை வீழ்த்த வேண்டுமானால் மார்க்க அறிஞர்களைக் குறைகூறி அவர்களை அவமானப்படுத்தி உள்நோக்கம் கொண்டவர்களாக அவர்களைச் சித்தரிக்க வேண்டும். இதனால் மக்கள் அவர்களை விட்டும் தூரமாகிவிடுவார்கள்.




# உடல் எடையை குறைக்க சில ஆலோசனைகள்

**நடைப் பயிற்சி**

நடைப்பயிற்சி செய்து வந்தால் உடல் எடை குறையும் அதோடு உயர் ரத்த அழுத்தம் சர்க்கரை மற்றும் இருதய நோய்கள்வராமல்தடுக்கும். உடல் பருமன் குறைய தினமும் 30 நிமிடங்கள் நடை பயிற்சி செய்யுங்கள். தினமும் முப்பது நிமிடம் சைக்கிள் ஓட்டுதல் (ஜிம் அல்லது வெளியே) பயிற்சி செய்தால் அரை மணி நேரத்தில் 500 கலோரிகள் குறையும்.

**எலுமிச்சை**

மிதமான சுடுநீரில் எலுமிச்சை சாறு மற்றும் தேனை கலந்து காலை நேரத்தில் வெறும் வயிற்றில் அருந்த வேண்டும். இதைத் தொடர்ந்து செய்து வர உடலில் சேர்ந்த கொழுப்புகள் அனைத்தும் கரையத் தொடங்கும். மேலும் உடலில் சேர்ந்துள்ள நச்சுக்கள் கழிவுகள் நீங்கிவிடும்.

**கறிவேப்பிலை**

உடல் எடையை குறைக்க கறிவேப்பிலை அற்புதமான வகையில் உதவுகின்றது. இதை பொடியாக செய்து சாப்பாட்டில் கலந்து சாப்பிடலாம். அல்லது இலைகளை ஒதுக்காமல் மென்று சாப்பிடுவது உகந்தது.

**தண்ணீர்**

உடல் எடையை குறைக்க வேண்டும் என்று நீங்கள் தீர்மானித்துவிட்டால் அதிக அளவு தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டும். உடலில் உள்ள தேவையில்லாத கொழுப்பு மற்றும் நச்சுகளை அகற்ற அற்புதமான வகையிள் துணைபுரியும். சாதாரண தண்ணீர் தானே என்று மட்டும் அலட்சியமாக இருந்துவிடக் கூடாது.

**கிரீன் டீ**

தினமும் கிரீன் டீ தயாரித்து பருகலாம். இந்த கிரீன் டீ அதிக அளவு உடல் எடையை குறைக்க பெரிதும் உதவும். அதுமட்டுமல்லாமல் கிரீன் டீ அருந்துவதால் பல்வேறு கூடுதலாக ஆரோக்கிய நன்மைகளும் கிடைக்கும்.

**மரக்கறி சூப்**

காய்கறி மற்றும் கீரை சூப்-களை சமைத்து சாப்பிடுவது உகந்தது. இந்த சூப் வகைகளில் தேவையான அளவு மிளகு சேர்க்க வேண்டும். கொழுப்பை கரைக்கும் ஆற்றல் மிளகில் அதிக அளவு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணறைகளில் ஒலிக்கும் கைசேதம் மிக்க வசனங்கள்...

இன்று தொழுகையில் ஈடுபடலாம் என நான் உத்தேசித்திருந்தேன், எனினும் நான் நேற்றிரவு திடீரென்று மரணித்துவிட்டேன்!

நாளை முதல் நல்வழியில் மாத்திரமே உழைத்து உண்ணலாம் என்று எண்ணியிருந்தேன், ஆனால் நேற்று நடந்த திடீர் வீதி விபத்தில் நான் மரணித்துவிட்டேன்.

இனியாவது உறவினர்களோடு உறவைப் பேணி நடக்கலாம், பக்கத்து வீட்டோடு பரஸ்பர உறவைப் பேணலாம் என நாடியிருந்தேன், திடீரென நான் மாரடைப்பால் மரணித்துவிட்டேன்.

இனியாவது ஸகாத்தை கொடுத்து தானதருமங்கள் செய்து நன்மைகளை சம்பாதிக்காலம் என திட்டம் தீட்டியிருந்தேன், நேற்று நடந்த மண்சரிவால் மண்ணோடு மண்ணானேன்.

வெகு சீக்கிரம் குடிப்பழக்கத்தையும், குடுப்பழக்கத்தையும் விடுபட்டு மனிதனாக வாழலாம் என தீர்மானித்தேன், நேற்றிரவு நடந்த துப்பாக்கிச் சூட்டில் சுடுபட்டு இறந்து போனேன்.

அறுபது வயதான பிறகு பள்ளிவாசலில் அமர்ந்து அதிகமதிகம் உபரி வழிபாடுகள் ஈடுபடலாம் என முடிவுசெய்தேன், ஆனால் நாற்பதாவது வயதிலேயே நான் மரணித்துவிட்டேன்.

ஐம்பதாவது வயதில் ஹஜ் செய்யலாம் என திட்டமிட்டிருந்தேன். 49 ஆவது வயதில் புற்றுநோய் வந்து மரணித்தேன்.

அடுத்த மாதம் முதல் வட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்காலம் என உறுதிபூண்டேன், இந்த மாதம் நடந்த தீ விபத்தில் சிக்கி இறந்து போனேன்.


நாளை முதல் யாருடனும் வீண் வம்பை வளர்க மாட்டேன் என்று முடிவு செய்தேன். இன்றிரவு உறங்கிய நான் கலையில் விழித்து எழும்பவில்லை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஒரு முறை ஒரு ஆசிரியர் தனது மாணவர்களிடம் பின்வருமாறு ஒரு கேள்வி கேட்டார்:**

உங்களிடம் 86,400 ரூபாய்கள் இருந்தால், யாராவது ஒரு திருடன் அதில் 10 ரூபாய்களை பறித்துக்கொண்டு ஓடினால், உங்கள் கையில் இருக்கும் அந்த 86,390 ரூபாய்களை விட்டுவிட்டு அந்த 10 ரூபாய்களை பிடிக்க ஓடுவீர்களா? அல்லது பரவாயில்லை என்று உங்கள் பாட்டில் செல்வீர்களா?

அனைத்து மாணவர்களும் ஒரு மித்த குரலில் "நிச்சயமாக நாங்கள் 10 ரூபாய்களை விட்டுவிடுவோம் அந்த 86,390 ரூபாய்களையும்தான் பாதுகாப்போம்" என்று பதிலளித்தனர்.


ஆசிரியர் சொன்னார்: உண்மையில், பெரும்பாலான மக்கள் இதற்கு நேர்மாறாகவே நடக்கின்றனர். அந்த 10 ரூபாய்களுக்காக அவர்கள் அந்த 86,390 ரூபாய்களையும் இழக்கின்றனர்.

அதற்கு மாணவர்கள் "யாராவது அப்படி செய்வார்களா?! எப்படி அது?" என்று கேட்டனர்.

அதற்கு ஆசிரியர்: உண்மையில் 86,400 என்பது ஒரு நாளில் உள்ள வினாடிகளின் எண்ணிக்கை. யாராவது ஒருவர் 10 வினாடிகள் உங்களை எரிச்சலூட்டினால் அல்லது மனதை துன்புறுத்தும் வார்த்தைகளை சொன்னால் அல்லது விரும்பத்தகாத ஒரு சம்பவம் நடந்தால் அதற்காக நாள் முழுதும் யோசித்து எஞ்சிய 86,390 வினாடிகளையும் நீங்கள் வீணாக்கி விடுவீர்கள்.

ஆதலால் எரிச்சலூட்டும் ஒரு வார்த்தைக்காக, அல்லது எதிர்மறையான ஒரு நிகழ்வுக்காக உங்கள் ஆற்றல்களையும், சிந்தனைகளையும் எஞ்சிய நேரங்களையும் வீணாக்கி விடாதீர்கள்.

## இயற்கை தரும் மருத்துவம்.



மறதி தொல்லையா? ஒரு தேக்கரண்டி தேனில் 5 மிளகு பொடியை குழைந்து சாப்பிட்டு வந்தால் மறதி மறைந்துவிடும்.

இருமலால் அவதியா? உலர்ந்த திராட்சையை பாலில் இட்டு காய்ச்சி குடித்து வந்தால் நீங்கும். ஒரு சிட்டிகை மஞ்சள், மிளகுப்பொடியை தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தாலும் குணமாகும்.

சளித் தொல்லையா? வெற்றிலை, 3 மிளகு, துளசி இலையை சேர்த்து மென்று விழுங்கவும் அல்லது உறங்கும் முன் சிறிது வெந்தயத்தை சாப்பிட்டு 1 டம்ளர் வென்னீர் அருந்தினால் குணமாகும்.

சீதபேதி கடுமையாக உள்ளதா? ஊறவைத்த வெந்தயத்தை அரைத்து தயிரில் கலந்து 3 வேளை கொடுக்க குணமாகும்.

அடிக்கடி ஏப்பம் வருகிறதா? வேப்பம்பூவை தூள் செய்து 4 சிட்டிகை எடுத்து இஞ்சி சாறுடன் கலந்து உட்கொண்டால் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச செயலகம்
Divisional Secretariat

# பிரதேச செயலகமும் கலாசார செயற்பாடுகளும்.

- எம்.ஐ. றமீஸ் நிஷா -

ஒரு நாட்டினுடைய நிர்வாகத்தின் ஆரம்ப கட்ட அலகாக காணப்படுவது பிரதேச செயலகமாகும்.இங்கு மக்களின் நலனை விருத்தி செய்வதை அடிப்படையாக கொண்டு சேவை வழங்கும் பல்வேறு பிரிவுகள் காணப்படுகின்றன.அவை நிர்வாகப் பிரிவு நிதிப் பிரிவு ஆகிய அடிப்படையான பிரிவுகளுடன் சமூக,பொருளாதார,கலாசாரப் பிரிவுகள் முதலான பல்வேறு பிரிவுகளையும் உள்ளடக்கி காணப்படுகின்றன.

இந்தவகையில் மக்களின் பண்பாடுகளையும் கலை இரசனைகளையும் விருத்தி செய்யும் நோக்கில் காணப்படும் கலாசாரப் பிரிவும் மிகுந்த முக்கியத்துவமுடைய ஓர் சேவைப் பிரிவாகும்.

ஒரு நாட்டின் பௌதீக ரீதியான விருத்தி எவ்வளவு முக்கியமானதோ அதனை விடவும் முக்கியமானது அதனை சாத்தியப்படுத்தவேண்டிய மனிதர்களின் உள ரீதியான விருத்தியாகும்.இதனை வலுப்படுத்தும் கலாசாரத் துறை ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குஎவ்வளவு முக்கியத்துவமுடையது என்பதைப் புரியலாம். அத்துறையானது பிரதேச செயலகத்தினூடாக எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்கிறது என்பதை பின்வருமாறு அடையாளம் காணலாம்.

**01.பதிவு நடவடிக்கைகளும் தரவுகளைப் பேணலும்:**

ஒரு அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் அதன் தலையாய பணியாக காணப்படுவது ஆவண ரீதியான செயற்பாடுகளாகும்.இவை பதிவு நடவடிக்கை,தரவுகளை இற்றைப்படுத்தி பேணல்,தரவுகளை ஆய்வு செய்து வேலைத் திட்டங்களை மேற்கொள்ளல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்..

அந்தவகையில் கலாசாரப் பிரிவானது,சமய கலாசார நிறுவனங்களை பதிவு செய்தல்,கலை இலக்கிய அமைப்புகளை பதிவு செய்தல் என்பவற்றோடு மேற்படி நிறுவனங்களினதும், அமைப்புகளினதும் தகவல்களை இற்றைப்படுத்தி பாதுகாத்து அத்தகவல்களின் அடிப்படையில் அவற்றிற்கு தேவையான வேலைத் திட்டங்களை தயாரித்து செயற்படுகிறது.

**02.கலை இலக்கிய விழாக்களை நடாத்தி கலைஞர்களை ஊக்குவித்தல்:**

கலாசாரப் பிரிவானது வருடந்தோறும் பிரதேச மட்ட சாகித்திய விழாக்களை நடாத்தி கலைஞர்களை கௌரவிப்பதோடு அவர்களின் நிகழ்ச்சிகளை பொதுமக்கள் முன் அரங்கேற்றல்,கவியரங்கம் நடாத்துத்தல் மற்றும் படைப்பாக்க பயிற்சி பட்டறைகளை நடாத்தி கவிஞர்கள் மற்றும் எழுத்தாளர்களை ஊக்குவித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது

**03.கலை இலக்கிய போட்டிகளை நடாத்துதல்:**

பல்வேறு மட்டத்திலும் காணப்படும் கலைஞர்கள், கவிஞர்கள்,எழுத்தாளர்கள் ஆகியோரின் திறமைகளை வெளிக்கொணரவும் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கவும் பாடசாலை மட்டத்திலும் திறந்த மட்டத்திலும் அரச சேவையாளர்கள் மட்டத்திலும் கவிதை,கட்டுரை,சிறுகதை,பாட்டு,பேச்சு முதலான போட்டிகள் இடம்பெறுகின்றன.

**04.எழுத்தாளர்களினதும் கவிஞர்களினதும் நூல்களை கொள்வனவு செய்தல்:**

எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும் அவர்களது நூலாக்க செயற்பாட்டிற்கான பொருளாதார சிரமங்களை இலகுவாக்குவதற்கான பணிகளையும் கலாசாரப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்கிறது.வருடா வருடம் வெளியிடப்படும் நூல்களை அடிப்படையாகக் கொண்டு எழுத்தாளர்கள் விண்ணப்பம் செய்வதனூடாகவும் நூல்கள் கொள்வனவு செய்யும் பணியானது மாகாண மற்றும் மத்திய அரசின் கலாசாரத் திணைக்களங்களுடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படுகிறது.

**05.கலைஞர்களை கௌரவித்தல்:**

கலாபூஷண விருது போன்ற கலை இலக்கிய உயர் அரச விருதுகள் உட்பட மாகாணமட்ட வித்தகர் விருது,இளம் கலைஞர் விருது என்பனவற்றை வழங்குவதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகளை மேற்கொள்கின்ற இடமாகவும் பிரதேச செயலக கலாசார பிரிவே காணப்படுகிறது.அத்தோடு பிரதேச மட்ட சாகித்திய விழாக்களிலும் கலை இலக்கியவாதிகளை கௌரவிக்கின்ற பணிகளும் கலாசாரப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**06. கலாசார விழிப்பணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல்:**

மாணவர்கள்,இளைஞர்கள் நெறி பிறழாது வாழவேண்டும் எனும் நோக்கில் பாடசாலை மட்டத்திலும் அதற்கு வெளியிலும் கலாசார விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் பிரதேச செயலக கலாசாரப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

மேற்கண்ட விடயங்களோடு . சர்வதேச தினங்கள்,பருவ காலங்களுக்கு ஏற்ற நிகழ்வுகள் என்பனவற்றையும் நடாத்தி கலாசாரவயப்பட்ட பண்பாடான பிரஜைகளை உருவாக்குவதற்கான வேலைத்திட்டங்களோடு பிரதேச செயலக கலாசாரப் பிரிவு செயற்பட்டு வருகிறது எனலாம்.

யானைக்கு கரும்புத் தோட்டமே தேவைப்படுகிறது. எறும்புக்கு சக்கையே போதுமானதாக இருக்கிறது. தோட்டம் கிடைக்கும் போது யானையாய் இரு. சக்கை கிடைக்ககும் போது எறும்பாய் இரு. வாழ்கையில் திருப்தியில்லை என்ற பேச்சுக்கே இடமிருக்கரகது.

## யார் இருக்கிறார்....?

பாத்திமா
றுஷைனா
அகமட்
ஆரையம்பதி



காத்திருக்கும் நொடிகளை
இலவம்பஞ்சாய்க் கடந்து போக தயக்கம்!!
கண்டவுடன் பொங்கி எழும்
கேள்விக் கணைகளும் ஏராளம்!!

காற்றோடே கலந்து போகும்
என் வெப்ப மூச்சும்!!
கனாக்கண்டு கதறி அழும்
பித்துக்குளிகள் போன்றே நானும்!!

பிதற்றியபடி
திரிந்து கொண்டிருக்கிறேன் உன்னாலேயே ...
பிரிவினை ஏற்படுத்த
அடித்தளமிடப்பட்டதும் என்னாலேயே ...

ஒருவரையொருவர் குறை சொல்லி
உடைத்து செல்ல இதுவொன்றும்
மணல் வீடு அல்ல ...
ஒருவர்மீதொருவர் வைத்த அன்பினால்
விளைந்த மாளிகையல்லவோ .....
நீ உடைத்த கண்ணாடியில்
பட்டுத் தெரிக்கும் என் விம்பங்களுக்கு
உயிர் கொடுக்க யார் வருவாரிங்கு ....?
உன்னால் உடைந்து போன
என் இதயத்தை ஒட்ட வைக்கத்தான்
யார் இருக்கிறார்களிங்கு ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதிகளில்/சாடிகளில் பயிர்ச் செய்கை

மு.ஹ.முர்ஷிதா ஷிரீன்
விவசாய போதனாசிரியர் – ஏறாவூர்
சம்மாந்துறை

சாடிகளில்/ பொதிகளில் நாற்றுகளை நடுகை செய்தல் பொதிப் பயிர்ச் செய்கை/சாடிப் பயிர்ச் செய்கை/தொட்டிகளில் பயிர்ச் செய்கை என அழைக்கப்படும்.

இது பொதுவாக நிலப் பற்றாக் குறையான பகுதிகள், நீரில் மூழ்கின்ற/வெள்ளத்தினால் பாதிக்கப்படுகின்ற பகுதிகள்,தண்ணீர் இல்லாத பிரதேசங்கள்,மணல் பாங்கான தரைகளை உடைய பகுதிகள், நகர் புறங்கள், மொட்டை மாடிகள் மற்றும் நில அலங்கார தேவைகளுக்காக இயற்கையான/செயற்கையான பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கு பொருத்தமான முறையாகும்.

இதற்காக ஓரளவு கணமான பொலித்தீன் பைகளான கறுப்பு வெள்ளை நிற/கறுப்பு நிற வளர்ப்புப் பைகள்(Grow bags), பொலிசெக் பைகள், அரிசி பைகள், பால் மா பக்கட்டுகள்(01 kg - பைகள் மரக்கறி பயிர்களுக்கு போதுமானதாகும்), பழைய டெனிம் கால்சட்டைகள், PVC குழாய்கள், தெம்பிலி மட்டைகள், தயிர் சட்டிகள்(மண், பிளாஸ்டிக்), யோகட் கப்கள், சிரட்டைகள், மரப் பலகைகள் பழைய ஓடுகள், தென்னம் அடி மட்டைகள் சாடிகள்(சீமெந்து/மண்/பிளாஸ்டிக்) என பலதையும் அந்தந்த தாவர இனத்திற்கு ஏற்ப ஆக்க பூர்வமாக அமைத்து பயன்படுத்தலாம்.

பொதிகளை தயார் செய்யும் போது நீர் வடிந்தோடக் கூடியவாறு பொதிகளில்/சாடிகளில் தேவைக்கு ஏற்ப துளைகளை இடுதல் அவசியமாகும்.இதனால் நீர் தேங்கி நிற்பதனால் ஏற்படும் பங்கசு நோய்கள் தவிர்க்கப்படுவதோடு

தாவர வேர்களின் சுவாசத்திற்கும் உதவுவதோடு நாற்றின்/தாவரத்தின் வளர்ச்சிக்கும் உதவும்.

**நடுகை ஊடகத்தை தயார் செய்தல்:**

மேல் மண் : கூட்டெரு /மாட்டெரு என்பனவற்றை 1:1 எனும் அளவில் எடுத்து நன்கு கலந்து நடுகை ஊடகம் தயார் செய்யப்பட்டு சாடிகள்/பொதிகளில் 2/3 பகுதிக்கு நிரப்பப்படும். இதன் போது மாட்டெரு நன்கு காய்ந்ததாக(1/2 இன்ச் அளவு பரத்தி காயவைத்து எடுக்கப்படல் வேண்டும்)/நன்கு உக்கியதாக இருத்தல் வேண்டும். மாட்டெரு நன்கு காயாமல் பயன்படுத்தும் போது மாட்டெரு பிரிகை அடைவதனால் வெளிவிடப்படும் வெப்பம் காரணமாக தாவர வேர்கள் பாதிக்கப்படும்.இதனை தவிர்ப்பதற்காகவே நன்கு காய்ந்த சாணம்/மாட்டெரு பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படுகிறது.

**பொதிகளை தயார் செய்தல்:**

*பொலித்தீன் பைகளை பயன்படுத்தும் போது கறுப்பு - வெள்ளை பொலித்தீன் பயன்படுத்துவது சிறந்ததாகும்.

*பைகளை பயன்படுத்தும் போது அடிப்பகுதி மூலை உள்பக்கமாக மடிக்கப்படல் வேண்டும்.

*பையில் துளையிடப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நடுகை ஊடகத்தினால் மூன்றில் இரண்டு பகுதியை நிரப்புதல்.

*பையின் மேற்பகுதியை மடித்தல்.

*பொதியை நிரப்பி ஒரு வாரத்தின் பின்னர் நாற்றை/தாவரத்தை நடுவது சிறந்தது.

**சாடிகளை தயார் செய்தல்:**

தயாரிக்கப்பட்ட ஊடகத்தினால் 2/3 பகுதிகளை நிரப்புதல் வேண்டும்.

**நடுகை :**

*நாற்று விதைகளை முளைக்க வைத்து /நேரடியாக பொதிகளின்/சாடிகளின் மத்தியில் ஒரு விதையை/தாவரத்தை நடுகை செய்ய வேண்டும்.

*பின்னர் தாவரத்திற்கு போதியளவு சூரிய ஒளி கிடைக்கக் கூடியவாறான இடத்தில் வைத்து அளவான நீர், சிபாரிசு செய்யப்பட்ட பசளைகளை இட்டு பராமரித்தல் வேண்டும்.

இதற்கான நோய்,பீடைகளை கட்டுப்படுத்த இயற்கை நோய்,பீடைநாசினிகளை அந்தந்த பிரதேசத்திற்கான விவசாய போதனாசிரியர்களை அணுகி அவர்களின் ஆலோசனைகளை பெற்று எமது வீடுகளில் நாமே தயாரித்து பயன்படுத்தலாம்.

**பொதிப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவம்.**

*நீர் தேங்கி நிற்கும் இடங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

*அதிக வரட்சியான காலங்களிலும் குறைந்தளவு நீரைப் பயன்படுத்தி செய்கை பண்ணலாம்.

*இடவசதி குறைந்த இடங்களிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.

*பராமரிப்பு இலகுவாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சிறந்த விளைச்சலை எமது பொதிப் பயிர்ச் செய்கை மூலம் பெறலாம்.




எத்தனை முறைகள்
திரும்பித் திரும்பிப் பார்த்திருப்பாய்.
ஒரு போதும் உன்னை
கண்டுகொண்டதில்லை நான்.

எத்தனை முறைகள்
சிரித்திருப்பாய்.
பதிலுக்குச் சிரித்ததில்லை நான்.

எத்தனை முறைகள்
வலிந்துதவியிருப்பாய்.
ஏற்றுக் கொணடதில்லை நான்.

உன் ஓட்டை பைக்
எத்தனை முறைகள்
என் தெருவில் பழுதடைந்திருக்கும்.
உதவியதில்லை நான்.

உன் பார்வை கூட
எனக்குப் பிடிக்காது.
உன் தலையலங்காரம்
உன் நடையுடை பாவனை
எதுவுமே எனக்குப் பிடித்ததில்லை.

என் பிரியம் கிடைக்காமலே
இவ்வுலகைப் பிரிந்தின்று
சென்றிருக்கிறாய்.
அதுவும் எனக்குப் பிடிக்காமலே.

ஒருசொட்டுக் கண்ணீர் துளிகளுடன்
உன்னிடம் விடைபெறுகிறேன்.
பிரியமானவைகளெல்லாம்
உனக்கங்கே கிடைப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நான் நடந்துகொண்டிருக்கிறேன் .....எங்கும் நிசப்தத்தின் ஆட்சி..... இருள் பிரிந்தும் பிரியாத காலைப்பொழுது போல் ஒரு மங்கலான வெளிச்சம் ....அது ஓர் நேரிய பாதை.... குன்றோ குழிகளோ இல்லாத செப்பனிடப்பட்ட அழகிய பாதை.... கல்லின் கடினமற்ற மென்மையாய்... இரு மருங்கிலும் ஓங்கி வளர்ந்திருந்த அந்த மரங்களுக்கு நடுவிலே ஓடிய அந்தப் பாதையின் இரு புறமும் சிவப்பும், வெண்மையும் கலந்த பெயர் தெரியாப் பூக்களைத் தாங்கி நின்ற குத்துச் செடிகள் ... சின்னஞ் சிறு ஐந்து இதழ்களைக் கொண்டு பூத்திருந்தன அந்தப் பூக்கள்... இரண்டு இதழ்கள் சிவப்பென்றால் அடுத்த மூன்று இதழ்களும் வெண்ணிறத்தில் இருந்தன. இன்னுமொரு பூ இரண்டு இதழ்கள் வெள்ளையென்றால் அடுத்த மூன்றும் செந்நிறத்தில்........விசித்திரமாய் தோன்றிற்று எனக்கு .... இத்தனை வருடத்தில் இப்படி ஒரு பூவினை நான் பார்த்தது இல்லையென மனசு வியந்து போகிறது. நான் நடந்துகொண்டிருக்கிறேன்... கண்ணுக்கெட்டிய தூரம் வரை அந்தப் பாதை ஒரே மாதிரி நீள்கிறது ... பூக்களும் அப்படியே....செடியை நிறைத்துப் பூத்திருந்த அந்த மலர்களின் அழகு சொல்லுந்தரமன்று...கண்ணுக்கினிய காட்சி மட்டுமல்ல... மெலிதான குளிரோடு கலந்து, இதமாய் உடலைத் தழுவிய தென்றல் காற்றில், மனம் மயங்கச் செய்யும் இனிய சுகந்தம். அந்தப் பூக்களில் இருந்து வந்த மணமாய் அது தெரியவில்லை.. அந்த இடம் முழுமையும் வாசனைத் திரவியத்தை தெளித்துவிட்டாற்போல் அப்படி ஓர் மணம்... ஏதோ ஓர் போதையில் மூளை மயங்குகிறது...கால்களில் எந்தத் தடுமாற்றமும் இல்லை... நிதானமாய் அடியெடுத்து வைக்கச் சொல்கிறது மனது. மனதும் மூளையும் ஒருங்கே செயற்படுவதுபோல் தோன்றாவிட்டாலும் அடிகள் நிதானமாய் நகர்த்தப்படுகிறது..

எங்கும் அமைதி .... சுற்றிலும் மனித நடமாட்டமே அற்ற ஏகாந்தம்... தனித்து நடக்கிறேன்... பள்ளங்கள் அற்ற பாதையில் தடுமாற்றம் அற்ற பயணம்....சாத்தியமா....?
சாத்தியப்படுகிறது...ஏனென்றால் நான் நடக்கிறேன்... என் பயணம் தடைப்படவில்லை. ஏகாந்தப் பெருவெளியாய் முன்னே நீளும் பாதையும் , சிறு சலனமே தோன்றாத அமைதியும் பயத்துக்குப் பதிலாய் சாந்தியைத் தருகிறது ஏதோ ஓர் அமைதியில் உள்ளம் நிறைகிறது.

முடிவிலியாய் தோன்றுகிற பாதை.... அதே நேர்கோட்டில்... அதே வடிவத்தில்.... மலைப்பாக தோன்றவில்லை என்பது தான் வியப்பு... சாதாரணமாய் எண்பது வயதில் காலை நகர்த்தும்போது மூட்டுப் பிடிப்பால் தோன்றும் சிரமம் எதுவுமில்லை... சிறுவலியும் தோன்றாமல் நடக்கிறேன்...எங்கே போயிற்று என் வலிகள்....உடலில் மட்டுமல்ல மனதிலும் கூடத்தான்...வயது போய் மற்றவரின் தயவில் வாழ்ந்திருக்கும்போது ஏற்படும் மனவலிகளின் தாக்கத்தை புரியவைக்க முடியாது.

தளர்ந்துபோன நேரத்தில், சிறு சலிப்பான பார்வையும் கூட நம்மை தாக்கத்தான் செய்கின்றது. சிறு புறக்கணிப்பும் இமாலய விடயமாய் தெரிகிறது ... பேரக்குழந்தைகளின் கிண்கிணி பேச்சுக்கள் சில நேரம் இனித்தாலும், பல நேரங்கள் அவர்களின் இரைச்சல்கள் எரிச்சலைக் கூட்டுகின்றன... உடல் உபாதைகள் பாசத்தை ஓரங்கட்டுகின்றன. வாழ்வின் முக்கால் பாகத்தை கடந்தாகிவிட்டது ...இன்னும் கடக்கப்போகும் காலம் கொஞ்சமே...அது நாளையாகவும் இருக்கலாம்.... இல்லை இன்னும் நாட்கள் அதிகமாயும் இருக்கலாம்... அது அதிர்ஷ்டமா... சாபமா .... அல்லது விதியா.....அந்த விவாதத்துக்குள் போக வேண்டாம்.... அது எதுவாக வேண்டுமானாலும் இருந்து விட்டுப்போகட்டும் .... நான் இப்போது இந்தப் பாதையில் நடக்கிறேன். அது மட்டுமே நிஜம்..புரியாதவற்றுக்குள் மூளையைத் திணித்து அவஸ்தைப்படுவதில் யாருக்கு என்ன இலாபம் ... நிதர்சனத்தை தரிசிப்பதற்கு மனதை தயார்படுத்துவதே முக்கியம்...

பாதை நீள்கிறது .... பயணமும் கூடத்தான்...என் அருகில் சிறு சலனம்... திரும்பிப்பார்க்கிறேன்... சுற்றிலும் பார்க்கிறேன்.... எதுவும், யாரும் இல்லாத தனிமை .... ஆனால் பாதுகாப்பாய் கூடவே யாரோ வருவதாய் ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வு....மனதுக்கு நெருக்கமாய் தோன்றும் அந்த உணர்வு புதிதாய் இருக்கிறது ... கூடவே பரிச்சயமானதாயும் தோன்றுகிறது., தாம்பத்தியத்தில் இணைந்தபோது மனைவி மேல் உணர்ந்த உணர்வின் தொடர்ச்சியாய் அதனை உணர்கிறேன்.. . ஐம்பது வருட தாம்பத்ய வாழ்வு இரண்டு வருடங்களுக்கு முன் முடிந்துபோயிற்று. வாழ்வின் அர்த்தத்தை உணரப் பண்ணிய அந்த ஜீவன்...என் கோபங்களையும், அசட்டைகளையும் முகச்சுளிப்பே இல்லாமல் தாங்கிக்கொண்ட ஜீவன் ...அது என்னை விட்டும் போன பின்னால் என் வாழ்வின் அர்த்தம் தொலைந்துபோயிற்று ... . அவளுக்காய் நான் எதுவும் செய்ததில்லை .... எனக்கு தேவையானவற்றை நான் செய்யும் போது அதில் அவளும் வாழ்ந்தாள் என்பதே நிஜம் ...நெல்லுக்கிறைத்த நீர் புல்லுக்கும் பாய்ந்தது போல ....என் விருப்பங்களும், எனது தேவைகளும் மட்டுமே அப்போது எனக்கு முக்கியமாய் பட்டது ... ஒரு தடவையாவது அவளது விருப்பத்தை நான் கேட்டிருக்கிறேனா என்று இப்போது யோசிக்கும்போது பதிலே தெரியவில்லை. காதலானாலும், காமமானாலும் என் விருப்பம் மட்டுமே ....அவளது உடல் தேவைகளையோ .... மனத்தேவைகளையோ அவள் ஒரு தடவையேனும் என்னிடம் வெளிப்படையாய் சொல்லியிருக்கவில்லை என்பது இப்போது புரிகிறது ... சொல்லவில்லை என்பதை விட சொல்வதற்கு நான் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை என்பதே சரியாய் இருக்கும் ... அவளது விருப்பங்களை நானாகவே அறிந்து கொள்ளும் முயற்சி கூட செய்யவில்லை என்பது இப்போது நெஞ்சை கனக்கச் செய்கிறது.

ஒரு யோகியாய் அவள் வாழ்ந்து விட்டுப் போயிருக்கிறாள். அவளுக்கான விருப்பங்களை சொல்லாததுபோலவே, அவளது வலிகளையும் கூட அவள் பகிர்ந்து கொள்ளவில்லை.... ஒரு விடிகாலைப் பொழுதில் அவள் உடல் இறுதி நிமிடத்தில் , உதறிப்போடும் போது, நான் அருகில் இருந்தேன் ...அந்த விழிகள் என்னை சலனமே இல்லாமல் நோக்கிற்று. அப்போதும் கூட அதில் எந்த யாசிப்பும் இருக்கவில்லை. வலியின் சலனமும் இல்லை. அமைதி மட்டுமே.... இரண்டே நிமிடங்கள். அவள் உயிர் பிரிந்து விட்டது. எதற்காக வாழ்ந்தாள் என்பதே தெரியாமல் அவள் வாழ்வு மறைந்து போனது. அவளுக்கான வாழ்வை அவள் வாழவே இல்லை ...அவளுடையதையும் அபகரித்து நானே வாழ்ந்திருக்கிறேன். என் சுகத்துக்காய் அவள் வாழ்வை , அவள் உணர்வுகளை, அவளது தேவைகளை , அவளது சந்தோஷங்களை பறித்து விட்டதுபோல் இப்போது குற்றவுணர்வில் தவிக்கிறது மனது. பலன் என்ன..... அழித்து எழுதுவதற்கு வாழ்க்கை என்ன ஒரு நோட்டுப் புத்தகமா....

ஆண் என்றால் அடக்கியாள்பவன் என்கிற கோட்பாட்டுக்குள் வளர்க்கப்பட்டிருக்கிறேன் நான்....பெண் அடக்கப்பட வேண்டியவள் என்கிற கருத்தியல் எனக்குள் ஆழமாய் புதைக்கப்பட்டிருக்கிறது. அதனால் வந்த விளைவு தான் என்று சுலபமாய் சொல்லித் தப்பித்து விட இப்போது முடியவில்லை. குற்றவுணர்வு மனதைத் தைக்கிறது.

என் பயணம் தொடர்கிறது ... கூடவே அதே மணமும் ...என் வலது கையை யாரோ இறுகப்பற்றுவது போன்ற உணர்வு .. அழுத்தமில்லாத மென்மையுடன் ...இதமான ஸ்பரிசமாய் அந்தத் தொடுதல் மனதை அமைதிப்படுத்துகிறது. அவளின் உடலில் இருந்து வரும் பிரத்தியேக மணமாய் அந்த மணம் இப்போது மனதைத் தொடுகிறது.. அவளது அருகாமையில். உணர்ந்த அந்த இதம்.... .அவள் அருகிருக்கும்போது அவளது இருப்பின் அவசியம் புரிந்திருக்கவில்லை. இழப்புகளில் வரும் ஞானோதயங்கள் விழலுக்கிறைத்த நீர் இல்லாமல் வேறென்ன.

நான் குனிந்து என் கையைப் பார்க்கிறேன். அவளின் மெலிந்த கை என் கையைப் பற்றியிருப்பது போல் தெரிகிறது. கைகளின் வழியே என் பார்வை மேலே உயர்கிறது ... அவளின் சாந்தமான முகம் சிறு புன்னகையுடன் என் பார்வைக்குள் விழுகிறது. என்னருகே அவள் .... என் விரல் தொடும் தூரத்தில் அவள் . என் தனிமைக்கு நிவாரணமாய் அவள் .... என் தவறுகளில் கற்ற பாடங்களை மீண்டும் சரியாகப் படிக்க நினைக்கும் ஜீவனாய் நான்.... என் கண்களின் ஓரத்தே துளிர்த்த நீரின் ஈரத்தில், என் மன்னிப்பின் யாசிப்பு..

எங்கோ பாத்திரம் கீழே விழுந்து உருண்டோடும் சப்தம்... என் நடை திடுமென தடைப்பட்டுப் போகிறது .......உடல் எங்கும் வியர்வை முத்துக்கள் அரும்பி நிற்கின்றன.. மரங்களும், பூக்களும , பாதையும் ....அவளும் .....நொடியில் மறைந்து போய் தனித்துப் போகிறேன்.. வீட்டுக்குள் புகுந்து சமையலறைப் பாத்திரத்தை தட்டிவிட்ட பூனையை அர்ச்சித்தபடியே வந்த மருமகளின் சப்தத்தில் நன்றாக விழித்து விட்ட கருமணிகள் சோம்பலாய் சுழல்கின்றன. ... எங்கும் இரவின் நிசப்தம்.... கனவின் கனம் என் விழிகளின் ஓரத்தில் நிஜ நீராக துளிர்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை என்னும் பெருவிருட்சம்

முப்லிஹா பிர்தவ்ஸ் – காத்தான்குடி



வெயிலை மொத்தமாய் தாங்கிக்கொண்டு
நிழலை மட்டுமே
எமக்குத் தருபவர்

நிலத்தில் ஊன்றிய
ஆணிவேராய் இருந்து
கிளைகளான எங்களைப்
பெரிதாய்ப் பாதுகாப்பவர்

நிழலுக்காய் கிளைகளையும்
உணவுக்காய் பழங்களையும்
மட்டுமே தருகின்ற
உன்னத ஆன்மா

எச்சமிட்டுச் செல்லும்
பறவைகளையும்
மன்னிக்கத்தெரிந்த
புனிதர்

கசப்பு நிறைந்த
காபனீரொட்சைட்டை உள்வாங்கி
இனிப்பான ஒட்சிசனை
என்றுமேவழங்கும்
கொடையாளி

அனைத்தையும் தாங்கி
எம் சரிவைத் தடுத்திடும்
உன்னத வேர்

மறைந்தபின்பும்
தந்த கல்வி மூலம்
எமக்குப் பயன் தரும்
தர்மம்

மழை போன்று
முழுஉழைப்பையும்
எமக்கே தந்திடும்
மகா உத்தமர்

புயல் என்ற போரையும்
எமக்காய் எதிர்கொள்ளும்
வீரன்

தம்மைத் தறித்தபின்
இடம்கொடுக்கவும்
தளபாடமாக்கவும்
தங்களை துணிவாக்கிவிட்ட
பெரும் தியாகி


மொத்தத்தில்
ஆக்கங்களை
மட்டுமே தந்து
அழிவை மட்டுமே
தேடிக்கொள்ளும்
பெருவிருட்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்வேலிப் பூக்கள்

(சிறுகதை)

திருமதி. சுஹைறதா ஏ கரீம்



நோயும் பாயும் ஆக இருக்கும் உம்மாவின் இருமல் இன்னும் விட்ட பாடு இல்லை. இதில் மழையும் வேறு துவைத்த ஆடைகள் காய்ந்தும் காயாதுமாக கிடந்தது அதை பார்த்து பார்த்து கொடியில் காய போட்டுக் கொண்டிருந்தாள் சிஹானா.

வாசல் கதவில் யாரோ தட்ட திறந்துதான் இருக்கு உள்ளே வாங்க என்று குரல் கொடுத்த சியானா ....

அட சாச்சியா இந்த மழையில் ஏன் சாட்சி வந்து இருக்கீங்க...,... உம்மாவை பாத்துட்டு போகலாம் என்று தான்.. இப்ப எப்படிமா இருக்கு .....பரவாயில்ல சாச்சி அதிகம் என்று சொன்னால் கவலைப்படுவாங்க என்று தெரிந்து சாட்சிக்கு பொய் சொல்ல வேண்டியது ஆகிவிட்டது .உம்மாவோட பேசிட்டு இருங்க டீ எடுத்துக் கொண்டு வாரன் என்று உள்ளே சென்று விட்டாள் சிஹானா .

எனக்காக ....இருமலுக்கு மத்தியிலும் தனது மகளின் நிலையை சொல்லி வேதனை அடைந்தாள் சிஹானாவின் தாய் . என்ன செல்ல அந்த பிள்ளைக்கென்று வாழ்க்கையை தேடிக்காம மத்தவங்க வாழனும்னு அது வாழ்க்கையே தொலைச்சிட்டு நிக்குது.. இதுல நான் வேற கஷ்டத்தை கொடுத்துட்டு இருக்கேன்.

தேனீருடன் வந்தவள் ம். ஆரம்பிச்சிட்டீங்களா....... உங்களுக்கு இதாலதான் இருமல் மூச்சுப்பிடிப்பு நிக்கிது இல்ல.

பாருங்க சாச்சி. நானே என்னை பத்தி கவலைப்படல்ல .... உம்மா என்னாலதா நோயாளியாப் போறாங்களோ என நினைக்க மனவேதனையா இருக்கு சாச்சி.

கண்களில் வழிந்த நீரை முந்தானையால் துடைத்தபடி எனக்கு இருப்பது அவங்க மட்டும் தான் சாச்சி அவங்களும் போயிட்டா எனக்கு யாரு சாச்சி துணை இருக்கிறாங்க என்று விம்மலுடன் கூறினாள் சிஹானா.

இரவு முழுவதும் தூக்கம் வர மறுத்த து தூக்கம் தொண்டையை அடைக்க வாப்பா இருந்திருக்கலாம் .பாவம் இந்த பிள்ளைகளை வளர்க்கப்பட்ட கஷ்டங்களும் துன்பங்களும் அவளது நினைவுக்கு வர தூக்கம் வர மறுத்தது.

நினைவுகள் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்தது...வாப்பா எங்களை விட்டு பிரியும் பொழுது சியானாவுக்கு 12 வயது சின்னவளுக்கு இரண்டு வயது மூன்று பெண் பிள்ளைகள் இரண்டு ஆண்டு பிள்ளைகளும் ஓரளவு வசதி வாய்ப்புகள் வாய்ந்த குடும்பம் திடீரென வந்த நெஞ்சு வலியால் மார்பை பொத்திக் கொண்டார் வாப்பா .அவ்வளவு தான் உம்மாவின் வாழ்க்கையே இருண்டு விட்டது போல் துடித்துப் போனாள் உம்மா. ஊர் உலகம் தெரியாமல் வாழ்ந்தவள் ஆறுதல் சொல்ல அயல் அவர்களும் உறவினர்களும் வந்து போனார்கள். முடிந்ததை செய்தார்கள் இருந்தும் தந்தைக்கு ஈடாகுமா காலம் கடந்தது வயதுக்கு வந்து விட்ட பெண்பிள்ளைகள் படிப்படியாக கல்வியில் முன்னேற்றம் நிறுத்திக் கொள்ள முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்நிலை தங்கைகளையும் தம்பிமார்களையும் படிக்க வைக்கும் நோக்கில் தனது படிப்பை பாதியிலேயே நிறுத்திக் கொண்டாள் சியானா. தன் உம்மாவுடன்

சேர்ந்து சிறிது வருமானம் வரக்கூடிய கைத்தொழில் செய்து குடும்பத்தை நடத்திக் கொண்டு போனார்கள்..... இருந்தாலும் வாழ்க்கைச் செலவு அதிகரிக்க அதிகரிக்க செலவுகள் கூடிக்கொண்டே போனது.

திருமண வயதை அடைந்த சிகானாவை ஒரவரின் கையில் பிடித்துக் கொடுக்க வேண்டும் என்ற கவலை நாளுக்கு நாள் உம்மாவிற்கு அதிகரித்துக் கொண்டிருந்த்து . தெரிந்தவர்களிடம் மாப்பிள்ளை கேட்டும் பயண் அளிக்கவில்லை .

அழகும் அறிவும் குணமும் இருந்தும் கூட அவளிடம் பணம் இல்லாததால் எல்லோரும் சற்று தூரம் ஆக்கிப் பார்த்தார்கள்

இப்படித்தான் தங்கைகளின் திருமணம் எல்லாம் தள்ளிப் போகும் என்று எண்ணி அம்மாவிடம் சொல்லி எப்படியோ வெளிநாடு சென்றாள் .

கண்விழித்து கஷ்டப்பட்டு திட்டுகளுக்கும் பேச்சுகளுக்கும் பாசை புரியாமல் அடிமைப்பட்டு தனது தனது உடன் பிறப்புகள் நன்றாக வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டாள் .

மாதா மாதம் கிடைக்கும் பணத்தில் தனக்காக எதையும் மிச்சப்படுத்தாமல் வீட்டுக்கே அனுப்பி வைத்தாள் .

கண்மூடி விழிக்குமுன்னே காலங்கள் கரைந்தோடியது .

ஒருவாறாக ஒவ்வொரு பிரச்சனைகளைத் தீர்த்த திருப்தியில் - நிம்மதிப் பெருமூச்சைவிட்டாள் சிஹானா . .

காலங்கள் உருண்டோடியது .கஷ்டங்கள் பல தீர்ந்தது உம்மாவும் நோயாளியாகப் போன நிலையில் ........அடிக்கடி வரும் தொலைபேசி அழைப்பு உம்மாவிடம் இருந்து.......இனியும் ஏன்மா கஸ்டத்த அனுபவிக்கிறா ஊரோட வந்து சேர்ந்திடு ... உனக்கு ஒரு வாழ்க்கை துணைய தேடித் தந்தா தான் எனக்கு நிம்மதிமா உம்மா என்னால் தான நோயாளி......உம்மாட உடல் நிலமையும் கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கு ....நீ வந்தால் தான் சரி நாங்களும் குடும்பம் பிள்ளை-குட்டி என்று வந்ததால உம்மாவைப் பார்ப்பது சிரமம்தான் ..அடிக்கடி வரும் உடன் பிறப்புகளின் அழைப்பு .

வாய்விட்டு அழவேண்டும் போலிருக்கும் .உறவுகளின் சுயநலத்தைப்பார்க்க ....என்ன செய்வது தாயின் நிலமையை நினைத்து நொந்து போனாள் சிஹானா .

தனது திருமணம் வரன் இன்றிப் போனதால் தடை பட்டுப் போனதை நினைத்துப் பார்த்தாள். அல்ஹம்துலில்லாஹ் ...இப்போது தேவைக்கு மேலாக எல்லாமே அவளிடம் இருந்தது. ....அனால் ஊர் போனால் உம்மாவின் ஆசையை நிறைவேற்றலாம் என்ற சின்ன நட்பாசை அவள் உள்ளத்தில் ஓடியது .

ஒருவாறு நாடுவந்து சேர்ந்தாள் சிஹானா . படுக்கையில் இருந்த உம்மா உறவினர்கள் மூலமாக சிஹானாவிற்கு திருமணம் செய்து கொடுக்க வரன்களைத் தேடினாள் ...... ஆனால் எல்லோரும் வயதைக் காரணம் காட்டியது மட்டுமல்லாமல் அவள் வெளிநாடு சென்றவள் அங்கு எப்படி எல்லாம் நடந்தாளோ . இப்படி உழைத்து வந்திருக்கிறாள் .என்று வாய்க்கு வந்ததைச் சொல்லி அவளைத் தூற்றினார்கள் .

இளமையும் அழகும்இருந்த போது பணத்தை காரணம் காட்டி தடைபட்டது திருமணம் .ஆனால் இன்று பணம் இருக்கிறது மணமுடிக்க யாருக்கும் மனமில்லாமல் போனது . சிஹானா உம்மாவுடன் முதிர்க்கன்னியாக முடங்கிக்கிடக்கிறாள் .

இதுதான் உலகம் இது தான் வாழ்க்கை என்பது யிருக்கும் தெரியாது .

மீனாக பிறந்து சாவது என்று முடிவெடுத்து விட்டால் பொழுது போக்கிற்கு மீன் பிடிப்பவனின் தூண்டிலில் சிக்காதே...
பிழைப்பிற்காக மீன் பிடிப்பவனின் வலையில் சிக்கிடு.
உன் மரணமும் ஒருவனை வாழவைக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பான்கள்


பொழுது ஒன்றில் பேருந்தில் என்னோடிருந்த என் தோழி ஒருத்தி கூறுகிறாள் "பாவம்… உழைக்கும் இந்த ஆண்கள். இனி எப்பொழுதுமே இதுதான் என்ற ஓட்டம், பாடசாலை படிப்புக்காக ஓட்டம், முடிந்தால் வேலை, குடும்பத்தை காக்க வேண்டிய ஓட்டம், திருமணம்? அங்கேயும் ஓட்டம், பெண்களாகிய நம்மால் முடியாவிட்டால் மூன்று நாளைக்கு நேரத்தை ஆறப்போடலாம். இதுவே அவர்கள் செய்தால்…? எத்தனை கேள்வி பதில்கள். ம்ஹ் இப்படியே போகிறது அவர்கள் வாழ்க்கை…" என்று பரிதாபப் படுகிறேன்.

பதறி அடித்துக் கொண்டு காலையில் சென்று பிற்பகலில் வரும்போது அல்லது மாலையில் வரும் பொழுதும் அதே தொழிலாளர் சங்கமம் ஒவ்வொரு நாளும் பேருந்துக்குள் நிகழ்கிறது. ஆறிப்போன ஒரு இரவிலும் கூட எங்காவது ஒரு ஓரத்தில் உறங்கிக் கொண்டு ஒரு ஆண் மகன் களைத்து சென்று கொண்டிருக்கிறான். கையில் பையை கவனித்தால், ஒன்றோ
குழந்தைக்காக வாங்கிக் கொண்டு போகும் ஏதோ ஒரு இனிப்பிருக்கும். அல்லது துணைவியின் சொல்லை மறக்காமல் இருக்க ஏதோவொரு பொருள் இருக்கும். அல்லது பிள்ளை எப்பொழுதோ வாங்கி கேட்ட ஏதோவொரு பண்டம் இருக்கும். தாய்க்காக தந்தைக்காக சகோதரர்களுக்காக இப்படி யாரோ ஒருவருக்காக கனவையும், உள்ளத்தையும், பையையும் நிரப்பியவனாக உழைக்கச் செல்லும் ஆண் மகான்களை "காப்பான்கள்" என்று சொல்வதுதான் பொருத்தமென நினைக்கிறேன்.

வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து, தூசியில் கறுத்து, சேற்றில் குலைந்து, புகையில் குளித்து தினமும் சென்று வரும்இவர்கள் திரும்பி வீடு செல்லும் போது யார் காத்துக்கொண்டிருப்பார்கள்? சமையல் செய்து வைத்திருப்பார்களா? அம்மா ,அப்பா, அல்லது மனைவி ,மகள் இல்லையென்றால் ஒரு சகோதரி

அந்த நேரத்தில் விழித்தமர்ந்து அன்னத்தை அள்ளிப்போட்டு அவன் ஆறாக் களைப்பை ஆற்றி விடுவார்களா? என்று பெண்ணியத்தையும், பெண்ணுரிமையையும் தாண்டி எதிர்பதம் நோக்கி செல்கிறது ஒரு கண்ணிய அனுதாபம்.

அவர்களுக்குள் எத்தனை கனவுகள்? எத்தனை கடமைகள்? எத்தனை கஷ்டங்கள்? எத்தனை பொறுப்புகள்? கண்டமேனிக்கு வாழ்ந்தால் சின்னா பின்னமாகிப் போகும் வாழ்க்கை என்றறிந்து



லைலா அக்ஷியா
(Mental Health
Education
Dip in psychology)

காலத்தோடு காலமாக கடிகார முட்களோடு ஓடுகிறது வாழ்க்கை. கோபத்தை வெளிப்படுத்துவதில் அவசரம், அன்பை வெளிப்படுத்துவதிலும் அவசரம். யாரோ எவனெவனோ செய்கின்ற பிழைக்காக
முத்திரை குத்தப்படும் பெயர்களை தாங்கி ஓடும் இந்த உழைப்பாளிகளை பார்க்கும் போது அந்த உருவங்களுக்கு விலையில்லா மதிப்பு வந்து விடுகிறது.தினமும் தட்டிக் கொடுத்து வாழ்த்த நினைக்கிறது.

வெளியே சுற்றினால் உதவாக்கரை வீட்டில் இருந்தால் தண்டச் சோறு நோயில் படுத்தால் சோம்பேறி மனைவியை வேலைக்கு அனுப்பினால் மனைவி சம்பாத்தியத்தில் வாழ்பவன் மனைவியை அனுப்பாவிட்டால் சந்தேகப்பிராணி அம்மாவின் பேச்சைக் கேட்டால் அம்மா பிள்ளை மனைவி பேச்சை கேட்டால் மனைவியின் முடிச்சில் வாழ்பவன் குழந்தையை கண்டித்தால் கொடுமைக்காரன் கண்டிக்கா விட்டால் பொறுப்பில்லாதவன்.. என்று ஊர் சொல்லும் பட்டங்கள் வேறு.

குடும்ப நிலைமைக்காக பாசத்தை பிரிகிறான். பிள்ளைகளை பிரிகிறான். பெற்றோரைப் பிரிகிறான். பிறந்த ஊரை பிரிகிறான். கட்டியவளை பிரிகிறான். காதலை பிரிகிறான்.
பிரிவில் பிழைத்து, தன்னோடு உள்ளவர்களை தோளில் சுமந்து வாழ வைக்கும் போது அவனருமை பெண்மையை விட எந்த விதத்திலும் குறைவதாதாகக் கருத முடிவதில்லை .


ஆணும் பெண்ணும் சமம் என்று சமத்துவத்திற்காக உரிமை போராட்டம் நிகழ்கிறது . கோஷங்கள் ஒலிக்கிறது. ஆனால் எந்த விதத்திலும் ஆணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணும் சமமாக முடியாது என்று இயற்கை ஒரு ஆணின் உடலமைப்பு, மூளையின் அமைப்பு, மற்றும் உள்ளுணர்வுகள் போன்றவற்றின் மூலம் வித்தியாசத்தை காட்டியிருக்கிறது.

விகிதாசாரத்தில் அதிக தசை நிறை, அதிக எலும்பு நிறை மற்றும் பெண்களை விட உடல் கொழுப்பின் குறைந்த சதவீதம், நெற்றி தோள்கள் என்பன ஆண்மை முகத்தை வெளிப்படுத்தும்.



ஒரு பெண்ணின் மூளையை விட ஆண் மூளை 10 சதவீதம் பெரியதாக இருக்கும். இருவர்களில் பெண்களின் மூளை மூன்று மையப் பகுதிகளைக் கொண்டதாயினும் அதிலிருக்கும் திறன்கள் இருவருக்கும் வித்தியாசமானது.
ஒரே நேரத்தில் பல விடயங்களை பெண்கள் புரிகின்ற அதேவேளை ஆண்கள் ஒரு நேரத்தில் ஒரு விடயத்திற்கு மாத்திரமே முக்கியத்துவத்தை கொடுப்பதனால் பெரும்பாலும் அவன் மேற்கொள்ளும் காரியங்கள் திறமையாக நிறைவேற்றப்படுகின்றன.

ஆண்களுக்கு தூரப் பார்வை அதிகம். இது கண் பார்வை என்றில்லை. பொதுவாகவே காரியங்களில் தூர நோக்கோடு சிந்தித்து முடிவெடுக்க அவர்களால் முடிகிறது. ஒரு பிரச்சினையை பகுத்தறிந்து, தீர்மானம் எடுப்பதற்கு அவனது அறிவுக்கு முடிகிறது. இதனாலேயே கணித பாடங்களில் பெண்களை விட ஆண்கள் பலவான்களாக இருக்கிறார்கள்.

பெண்களைப் போன்று ஆண்கள் அதிகமாக பேசும் உணர்வு இல்லை. பட்டென்று ஒரு விடயத்தை வெளிப்படுத்துவதோடு சுற்றி வளைக்காமல் அதற்குரிய தீர்வுகளை எடுப்பது அவர்களுக்குரியதானது.

தந்தை, சகோதரர், கணவன், ஆண் பிள்ளைகள், ஆண்உறவுகளென்றுஎமது குடும்பத்துக்குள்ளேயே இந்த வித்தியாசங்கள் உணராமல் இருந்திருக்க மாட்டோமே.

ஒரு பெண்ணின் சிறப்பை பெண்ணும் அறிகிறாள்.ஆணும் அறிய வேண்டும். அதுபோல் ஒரு ஆணின் சிறப்பை ஆணும் அறிய வேண்டும். ஒரு பெண்ணும் அறிய வேண்டும்.
உளவியல் வேறுபாடுகளை புரிய வேண்டும். அவர்களது உடலியல், நடத்தை வித்தியாசங்களை அறிந்திருக்க வேண்டும் . ஆதாமுக்கு ஹவ்வாவும் ஹவ்வாவுக்கு ஆதாமும் படைக்கப்பட்டது நோக்கம், "ஆண்களே பெண்களே இருவரும் ஒருவருக்கொருவர் போர்வையாக இருந்து கொள்ளுங்கள்" என்ற ஏவலின் குறிப்பறிந்தால் இனி இல்லை எதிர்பார்ப்புச்சல்கள் .

குடும்பத்திற்காக தன்னை வருத்தி உழைக்கும் ஆண்களுக்கு குடும்பத்திலிருந்து மதிப்புகள் உயரட்டும். அவர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவம், அவர்களை ஒரு "ஹீரோ" வாகவே பார்த்தல், அவர்களை ஒரு பொறுப்புதாரியாக முன் வைத்தல், அவர்கள் உதவியை எப்பொழுதும் எதிர்பார்ப்பதாக அவர்களுக்கு உணர்த்துதல், அவர்களை மகிழ்ச்சிகரமாக வைத்திருத்தல், அவர்களைப் புரிந்து கொள்ளுதல் போன்றன ஆண் வர்க்கத்தை தனிமையிலிருந்தும், விரக்தியிலிருந்தும், போதையிலிருந்தும், அனாச்சாரங்களிலிருந்தும் பாதுகாக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.


சரிங்க...Sorry ங்க...
சரிம்மா..Sorry ம்மா...
இந்த ரெண்டு வார்த்தை
இருந்தாலே போதும்,
குடும்பத்துல ஒரு
பிரச்சினையும்
இருக்காது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விமர்சனம்

- சித்தி மிஸ்ரியா அமீன் -



## மனிதம் கண்டேன்

இன்று நாம் பகிர்ந்து கொள்வது கலா பூஷணம், இஸ்லாமியச் செல்வி ஏ.யூ.எல். எஸ். அரபா மன்சூர் அவர்கள் எழுதிய "மனிதம் கண்டேன்" எனும் உணர்வுபூர்வமான அருமையான கவிதைத் தொகுப்பு நூலினைப்பற்றியதாகும்.

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் உப அதிபரான இவர்கள் பன்முக ஆளுமை கொண்டவர் . இவர் "பாடு பாப்பா கதைகேளு பாப்பா" "மிக்கி" "பெற்றோர் சொல் அமுதம்" "வண்ணத்து ராணி" "நாரைமாமாவின் விருந்து" என்றபுத்தகங்களுடன் "கிட்டிபோய்" என்ற மும்மொழி கதைப்புத்தகமும்வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய எண்ணற்ற கவிதைகளுள் சிலவற்றின் தொகுப்பே " மனிதம் கண்டேன்" எனும் மலராகும். 50 பக்கங்கள் கொண்ட இந்நூலில் 46 தலைப்புகளில் தம் அன்றாட வாழ்வில் தான் கண்ட அனுபவித்த விடயங்களை மிக தத்ரூபமாக தனக்கேயுரிய பாணியில் மிக ஆழமாகச் சொல்லி யிருக்கிறார். அழகு, ஆழம் அற்புதம். தன் அனுபவங்களை உணர்வுகளால் நிரப்பி வண்ணம் கொடுத்திருக்கிறார் உணர்வுகளிலிருந்து எழுதப்பட்டிருப்பது இக்கவி நூலின் சிறப்பெனவே கூறலாம்.

மனித நேயத்தோடு வாழ்வதற்கு. பிறரது வலிகளைப்புரிந்து கொண்டாலே போதுமே! மனிதம் அங்கே துளிர் விட்டு வாழும். மனிதம் மலர்ந்து மாண்புகள் உயர்ந்திடல் வேண்டும்.இப்போதெல்லாம் மனிதர்களிடத்தில் மனிதம் சிறிது சிறிதாக உதிர்வதையே தம்கவி வரிகளில் அழகாக பதிவு செய்திருக்கிறார் கவிஞர்.

"அம்மா" என்பதால் நமக்கு இருக்கும் உணர்விற்கு பெயர் மனிதம் என்றானது(தோ). "அன்புத்தாய்" என ஆரம்பித்த இவரின் வரிகள் "அன்பு தந்தாய்" என்ற கவியில் தந்தையின் பாசத்தையும்விட்டு வைக்க வில்லை. தன் பெற்றோரை தனியே தவிக்க விட்டு ஆளுக்கொரு தேசமாய் வாழும் பிள்ளைகளின் நிலையை சொல்லும் கவியில் "கண்ணீர் தானத்திற்கு பஞ்சம் வந்திருச்சு" என்று குமுறும் வரிகள் மனிதனே!மனிதத்தை மறந்து விட்டாயா? என்பது போல் உள்ளது.

மதங்களை மறந்து மனங்களை மறந்து எங்கெல்லாம் மனிதம் இறந்து விடுகிறது என்பதனை "வீதி அது விதி" எனும் கவிதையில் அழகாக சுட்டியிருக்கிறார் நம் கவிஞர். "மனிதம் கண்டேன்" "சிரிப்பு" "முதுமை" தேடுகிறாள் மருமகள்" என்பன இவரது உள்ளத்து வலிகள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

சுனாமி தந்த வலியையும் இவர்கள் மறக்க வில்லை.ஆம் அன்று சுனாமி எனும் கடலலையில் இயற்கையன்னையின் சீற்றத்தில் பொங்கியது மனித நேயமும் தானே!ஒருவரின் துயர் கண்டு துடித்தெழுவதுதான் மனிதம். அனிச்ச மலராய் துன்பத்தில் பூப்பதுவும் மனிதம். இதைத்தான் இவர் கவிவரிகளில் நறுக்கெனச் சொல்லியிருக்கிறார்.

ஒரு புத்தகம் என்பது படைப்பாளியின் அனுபவத்தின் குவியல். விழிகளில் வழியும் வலி களைப் புரிந்து கொள்ள உணர்வுகள் ததும்பும் கலசமாய் இக்கவி மலர் அமைந்திருப்பது சிறப்பெனவே கூறலாம். அனைவரும் வாசிக்க வேண்டிய அற்புத கவிமலர். நமது புத்தக அலுமாரிகளை நிச்சயம் அலங்கரிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவம் என்பது...

- நளீபா அஸீஸ் அஸீம் -



ஆசிரியத்துவம் என்பது ஒரு அற்புதமான வரம். அது போன்று மிகவும் பொறுப்பான பணியும் கடமையும் ஆகும்.அதனை யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அப்படிப்பட்ட உயர் பதவியில் ஆயிரமாயிரம் அனுபவங்கள் ஒவ்வொரு ஆசிரியர் மனதிலும் குடி கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. காலத்தால் அவை அழிந்து விடுவதுவுமில்லை.அவைகளின் நினைவுகளிலே உயிர் வாழும் ஆசிரியர்கள் எத்தனையோ பேர் என்று சொன்னாலும் தகும்.

தான் கற்ற கல்வியையும் பயிற்சியையும் கொண்டு வந்து வகுப்பறையில் அதனை ஒப்புவிக்கும் போது ஆசிரியர் பெறுகின்ற அனுபவம் இருக்கே வார்த்தைகளால் வர்ணித்திட முடியாது. விவரிக்கவும் முடியாது. ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு கோலத்திலும் ஒவ்வொரு கோணத்திலும் அதனை அணுகியிருப்பான். அவனுடைய முகமும் அவனது பார்வையும் அவனது கேள்விகளும் அதனை பறைசாற்றிக் கொண்டிருக்கும்.

என்றாலும் அந்த ஆசிரியர் அவற்றை உரிய முறையில் ஊட்ட போராடிக் கொண்டிருப்பார். அதற்கான போராட்டம் நாளும் தொடரும். பொறுமையே கை கொடைக்கும் ஆயுதமாக மாறிவிடும். சில சந்தர்ப்பங்களில் அழுவதா?

சிரிப்பதா? எனத் தோன்றும் அளவுக்கு மாணவர்களது அட்டகாசங்கள் ஆட்டிப்படைக்கும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் நிதானமாக ஒருசிலரும் நிதானம் இழந்த இன்னுமொரு சிலரும் இருக்க வேண்டிய கட்டாயம்.

எப்படி இருந்த போதும் அங்கே அமைதியை ஏற்படுத்துவது சில கட்டங்களில் பெரும் யுத்தமாக தோன்றும்.

அடுத்து விளையாட்டுப் போட்டிகள் வந்துவிட்டால் போதும் ஆசிரியர்களும் மாணவராகி தம் இல்லத்துக்கான போட்டியுணர்வைப் பெற்றிடுவர். தத்தம் மாணவர்களை ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து பாடாதுபட்டு ஏனைய ஆசிரியர்களோடு மோதி வெற்றிக்காக உழைக்கின்றமை போற்றத்தக்கது.

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற கோட்பாட்டை பின்பற்றி தம் குடும்பத்தையே மறந்து பாடசாலையே தஞ்சம் என வாழுகின்ற உத்தம ஆசிரியர்கள் பங்கு அளப்பரியது. ஊண் உறக்கமின்றி ஆற்றுகின்ற சேவையை இங்கே பதிவு செய்து கோடிட்டுக் காட்டப்படுவது சாலப் பொருந்தும்.

ஏனைய தொழில்களோடு ஒப்பிடுகையில் இது ஒரு வித்தியாசமான பணி என்பதை யாராலும் இலகுவில் புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் இது உயிர்களுடனான கடமை. உறவுகளுடனான சேவை. அதனால் தான் ஒவ்வொரு தினமும் வித்தியாசமான அனுபவங்கள் . வித்தியாசமான நினைவுகள்.

மாணவர் நோய்வாய்ப்படும் போது தாயாக தந்தையாக மாறி பக்குவமாய் கவனித்து பெற்றோரிடம் ஒப்படைப்பதைப் போற்றாமல் இருக்க முடியாது.

ஒவ்வொரு மாணவனும் உயர உயரப் போவதை அண்ணாந்து பார்த்து ஆனந்தப்படும் மனங்கள் தான் இந்த ஆசிரிய சமுதாயம்.

தான் வீழ்ந்தாலும் தன் மாணவ சமூகம் தலைநிமிர்ந்து வாழனும் துடிக்கின்ற ஆத்மாக்கள் தான் ஆசிரியர்கள்.


> தங்களுக்கு இடையே உள்ள தூரம் மனிதரைப் பிரிப்பதில்லை. மௌனம் பிரித்து விடுகிறது.
>
> -ஜெப் ஹெட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் நிழலில்...



சிறிலங்கா
பெண்கிளப்பின்
03வது தேசிய
மாநாடு- 2023



## கலாபூஷணம் அரபா மன்சூர் -கண்டி

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான சிறிலங்கா பென் கிளப்பின் அகவை மூன்றாவது மாநாடு, அமைப்பின் தலைவி திருமதி. மஷூறா ஸுஹூர்தீன் தலைமையில், காத்தான்குடி CIG மண்டபத்தில், 2023.10.21 ஆம் திகதி சனிக்கிழமை சிறப்புற நடைபெற்றது.

"குடும்பம் எங்கள் விழி ஆற்றல் எங்கள் வழி" என்ற மகுடவாசகம் தாங்கி வாசமீந்தது மாநாடு. அன்பினாலே அரவணைக்கும் பண்பு கொண்ட பென்கிளப் உறவுகள், தூரத்து உறவுகளை வரவேற்று உபசரித்து உதவி அளித்தமை மறக்கமுடியாத நினைவுகளே. தங்குமிடம் வந்து. குறைநிறை பார்த்து நிறைவுபடுத்தி நெஞ்சங்களில் நீங்கா இடம்பிடித்த தோழியர் மறக்கத்தான் முடியுமா..?

காத்தநகர் தோழியர் கூடி காத்திரமாக மிக நேர்த்தியாக இரவிரவாய் விழித்து மண்டபத்தை அழகூட்டினார்கள்.

இலங்கைத்திருநாட்டின் நாற்திசையிலிருந்தும் பேனாவின் நாவாலே ஆற்றல்களினாலே அகம் கோர்த்த நட்புக்கினிய நங்கையர்கள் முகம் கண்டு முகமன் கூறி ஆரத்தழுவி அன்பினைப் பகிர்ந்தமை மறக்கத்தான் முடியுமா...?

குரலால் கூடிய கோதையர் நேரிடையாக கண்டு கதைத்து உரையாடுவதில் எத்தனை இன்பம்.


அலைகடலின் உவர்காற்று ஆரணங்குகளின் அளவளாவல் இவள் அவள்தானா....அவள் இவள்தானா....பட்டாடைகளில் பளிச்சிட்ட சிட்டுக்களாக சிறகடித்து வேலைகளில் திளைத்த நிமிடங்கள்.. நிறைந்து போயுள்ளன. அவையை அலங்கரித்த அதிதிகள் பல்கலைப் பேராசான்கள். கல்விசார் தலைமைகள்.. கலாசார பெருந்தலைகள்.. ஊடக அனுசரணையாளர்கள் என்று உயர்வானவர்களோடு தரிசிப்புகள்.... அறிவை, சீர்திருத்தத்தை, பெண்குல ஆற்றலை, ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பின் வளர்ச்சி உயர்ச்சி பற்றிய அருமையான அறிவுசால் உரைகளை கேட்க முடிந்தது.

கூடி மகிழ்ந்த கோதையர்கள். உபசாரங்கள் பரிசுகளின் பரிமாற்றங்கள்....
இனிய கீதங்கள்... இது மட்டுமா இல்லை இல்லை. இன்னுமுண்டு.

### வளர்ச்சிப்பாதையில் சிறிலங்கா பென்கிளப்.

ஆற்றலுள்ள பெண்கள் அமைப்பான எமது சிறிலங்கா பென்கிளப் தனது அகவை மூன்றினை முழுமையாக்கி மூன்றாவது மாநாட்டில் தடம் பதித்துள்ளது என்றால் அதன் சீரான நடையும் சிறப்பான செயற்பாடுகளுமே காரணம் என்பது வெள்ளிடைமலையே.

2020 கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கித்தவித்த காலமது. அடைந்து கிடக்கும் எழுதுகோலேந்திய அரிவயரின் ஊக்கத்தை உசுப்பி எழுப்ப ஆரம்பிக்கப்பட்டதே சிறிலங்கா பென்கிளப்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஜிட்டல் பரவலடையாத காலத்தில் முளைவிட்டு அரும்பி இந்த ஆண்டு செழித்து மலரத்தொடங்கியுள்ளது. அல்ஹம்துலில்லாஹ். இனிமேல் இன்ஷா அல்லாஹ் காய்த்து பழுத்து பயனளிக்க இறைவன் அருள் புரிவானாக.



அத்திவாரம் பலமாக இருந்தாலே கட்டிடம் காத்திரமாக அமையும். அந்த வகையில் அத்திவாரமாகவும் பலமிக்க வேராகவும் தொழிற்படும் எமது சிறிலங்கா பெண்கிளப் ஸ்தாபகத்தலைவி மஷுறா சுஹுர்தீன் அச்சாணி என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

ஆக்க இலக்கியம் படைக்கும் பெண்களை தேடிப்பிடித்து பொருத்தமான துறைகளை பொருத்தமானவர்களுக்கு ஒப்படைத்து செயற்படுத்தும் திறமைசாலி தலைவி மஷுறா அம்மையார்.



எமது குழுமத்தில் வயது வேறுபாடின்றி ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் இணைந்து செயற்படுவதையம் இலங்கைத்திருநாட்டின் நாலாதிசையிலிருந்தும் கடல்கடந்த நாடுகளிலிருந்தும் ஆற்றலுள்ள பெண்கள் வட்சப் ஊடாக இணைந்து செயற்படுவதும் மகிழ்வானதே.

அமைப்பின் வளர்ச்சியிலே பங்களிப்பு செய்த அனைத்து - உறுப்பினர்களுக்கும் நினைவுச்சின்னங்கள் வழங்கி மகிழ்வித்தார் தலைவி.

உறுப்பினர்களது குழுநிலைப்படங்கள் பிடிக்கப்பட்ட போது மனங்கள் மகிழ்ந்துபோன தருணங்கள் மறக்கமுடியாத தருணங்கள் காத்தான்குடியை சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம். வழிகாட்டிகளாய் அமைந்த காத்தநகர் தோழிகள். விடை பகர்ந்து வழியனுப்பிய உறவுகள்

படிப்பினைகள் பகர்ந்த ..
நிறைவான மகிழ்ச்சி தந்த மாநாட்டு நினைவுகள் இன்னும் நிழலாக.....

தொடர்ந்து பயணிக்க இணைந்து செயற்பட
இனிய உறவுகள் தொடர அச்சாணியாம் தலைவி உட்பட அனைத்து அங்கத்தினருக்கும் பிரார்த்தனை கலந்த வாழ்த்துக்கள்!!!

## வீட்டிலிருக்கும் பெண்களுக்கு விற்றமின் D குறைபாடா???

வீட்டிலிருக்கும் பெண்களுக்கு அதிகமாக சூரிய ஒளி படுகின்ற விகிதம் தற்காலத்தில் மிகமிகக் குறைவாக இருக்கின்றது. பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டு வீட்டு வேலைகளை பார்த்துக் கொண்டு வீட்டைவிட்டே வெளியேறாமல் அதிகமான பெண்கள் இன்று வீடு மட்டுமே உலகம் என்று இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக விற்மின் D ஐ தரும் காலைச் சூரியனின் ஒளி இப்போது பெண்கள் மீது படுவதே இல்லை. அந்த நேரங்களிலெல்லாம் பெண்கள் அடுப்பங்கரையிலும் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பும் பணியிலும் கணவனை தொழிலுக்கு அனுப்பும் பணியிலும் அதனைத் தொடர்ந்து வீட்டை சுத்தம் செய்தல் பகல் சமையல் என பொழுது போய்விட பெண்கள் சூரிய ஒளியை எப்போதும் காண்பதே இல்லை.

இந்த விற்றமின் D குறைபாட்டால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தெரியுமா??

- என்ன காரணமென்றே புரியாமல் கோபப்படுவார்கள்
- சரியான தூக்கம் வராது
- உடம்பில் எங்காவது ஒரு இடத்தில் வலி இருக்கும்

மேற்சொன்ன மூன்று காரணங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டதாகவே இருக்கும் ஒன்று இருந்தால் மற்ற இரண்டும் கட்டாயம் இருக்கும்.

மேலை நாடுகளில் குளிர் காலங்களில் சூரிய ஒளி படாமல் பெண்கள் இப்படி பாதிக்கபட்டுவதை அறிந்து அதற்காக தனியான Treatments இப்போதுகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனவே பெண்கள் கட்டாயம் இனியாவது கொஞ்ச நேரமேனும் காலைச் சூரிய ஒளியில் நனைந்து எங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்வோமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rise up...!

**Translated by: Mareena Ilyas Shafee**

You think of nothing
When a tragedy hits you
Except two things
You and the incident...

You may feel
The rope of life
Has been torn
And the world
Is on halt

You may feel
The sky has collapsed
And the life has paused
It's natural to be disheartened...

Because...
Sadness is an addiction
It can intoxicate you
And dispirit your life

Pause and ponder
Just a moment...
You may realize
The celebrated tragedies
Have crippled your tasks

Rise up...
Drink the warmth of the sun
Feel the breeze
Set foot on the road
Walk long and breathe deeply...

The chirping of birds
Rustling leaves
A child's cry
The butterflies on flowers
Sucking nectar...

Something will comfort you
And cleanse your wound
This world is full of stuff...!
Rise up...!!

* Tamil poem by: Riyaza M. Zawahir

# துணிந்தெழு....

- றியாஸா ஸவாஹிர் -

ஒரு சோகம் உன்னை உடைத்துப் போடுகையில்
அந்தச் சம்பவமும் நீயும்தான் உலகம்
என்றெண்ணுகிறாய்...

உயிரின் கயிறு அறுந்து
உலகம் ஓய்ந்திட்டது போலவும்,



வானம் இடிந்து
வாழ்வே முடிந்திட்டது போலவும்
துவண்டு போவது இயல்புதான்..

சோகம் ஒரு போதை
மயக்கம் தந்து மயக்கம் தந்து
உயிரை உறுச்சி மாய்க்கும் ...

ஒரு கணத்திடை உணர்வாய்,
கொண்டாடிய சோகங்களால்
உன் பணிகள் துண்டாகியதை..

உதறியெழு
சூரியனின் சூடு குடி
தென்றலின் ஸ்பரிசம் சுகி
சாலையில் பாதம் பதி
நீளமாய் நடந்து ஆழமாய் சுவாசி..

கீச்சொலிகள்
சலசலக்கும் இலைகள்
ஒரு குழந்தையின் அழுகை
தேன் குடிக்க வந்த வண்ணாத்தி...

ஏதாவது ஒன்று
உனக்கு ஆறுதல் தரும்
காயம் துடைக்கும்...

இந்த உலகம்
வஸ்துகளால் நிரம்பியது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அங்கீகாரம்...

ஹுமதா ஏ கப்பார்
உயன்வத்தை

ஒரு முதல் கவிதை
ஒரு முதல் சமையல்
ஒரு முதல் ஓவியம்
ஒரு முதல் அறுவடை
ஒரு முதல் தேநீர்
ஒரு முதல் பாட்டு

ஒரு முதல்
ஒரு முதலாய்...

முயன்ற ஒருத்தனது
வெற்றி தானே அது...
வீழ்ந்து எழுந்த ஒரு
விதையின் கதை தானே அது...

மனசின் மொழி பெயர்ப்பொன்று
தானே
எண்ணச் சுவர்களில் கருக் கட்டி
உணர்வுக் கண்களுக்கு
பிரசவித்திருக்கிறது..

ஒரு முதல்...

நட்சத்திரம் உதிர்ந்த அதிர்வு..
மொட்டலர்ந்த ஹார்ட்டஸ் சத்தம்...
வான் பெயர்ந்து கடலான மயக்கம்...
வித்து தேடி முத்து கிடைத்த
சந்தோஷம்...

இது தானே
எல்லா முதல் களினதும்
முக்கால் மகிழ்ச்சி..
முயன்ற திருப்தி....

ஆனாலும்..
இருந்தாலும்...

அப்படியா..
அதுக்கென்ன...
என்றெல்லாம்
அசட்டு சிரிப்பு
அலுங்குப் பார்வை

இலை ஒன்று ஈர நிலத்தில்
உதிர்ந்ததான எதிர்வினை...

அட..

ஒரு சின்ன கைதட்டல்..
ஒரு குட்டி இமோஜி...
ஒரு அழகான தலை வருடல்..
ஒரு இதமான அணைப்பு..
ஒரு நெற்றி முத்தம்..
ஒரு தோள் நெருக்கம்..

இது கூட தேவையில்லை
இரு முக உறவுகளுக்குள் ...

ஒரு ஆத்மார்த்த பார்வையும்
ஒரு கலங்காத புன்னகையும்..


இதை விட வேறென்ன
பெரிசாய் எதிர் பார்க்கும்
இந்த எழுத்தில் தொலைந்த மனிதன்•

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023.10.21 அன்று காத்தான்குடி சி.ஐ.ஜி மண்டபத்தில் இடம்பெற்ற சிறிலங்கா பென்கிளப்பின் 03வது தேசிய மாநாட்டில் விருதுகளைப் பெற்றுக்கொண்டோர் விபரம்.


SLPC **முதற்தர விருது பெற்றுக் கொண்டோர்**

1. ஷாமென் நிஷாம்டீன் - கட்டுகஸ்தோட்டை
2. N.M. ஆரிபா - ஏறாவூர்
3. பர்ஸானா எம்.பி - நிந்தவூர்




SLPC **விஷேட விருது வழங்கப்பட்டோர்**

1. தம்பாளை ஜுவைரியா சாதிக்
2. அறபா மன்சூர் - கண்டி
3. மர்ழியா சக்காப் - திருகோணமலை
4. B.M. லைலாஅக்ஷியா - மொரட்டுவை
5. S.U. கமர்ஜான் பீபீ - ஹுனுப்பிட்டிய
6. M.I.றமீஷ் நிஷா - சம்மாந்துறை
7. M.I.மின்னத் சாறா பறுஸ் - ஏறாவூர்
8. Dr.ஜெலிலா முஸம்மில் - ஏறாவூர்
9. ஜெஸ்மின் ரமீஷ் - காத்தான்குடி
10. முப்லிஹா பிர்தௌஸ் - காத்தான்குடி
11. ஹக்கீமா அமினுத்தீன் - ஓட்டமாவடி
12. S. றுஸ்தா பர்வின் - நற்பிட்டிமுனை



SLPC **விருது வழங்கப்பட்டோர்**

1. ஹாஜரா கலிலுர்ரஹ்மான் - காத்தான்குடி
2. M.U.F.ஹஸ்ஸானியா - தர்காநகர்
3. லரீபா பதுர்தீன் - கலேவெல
4. S. வபீரா வ.்.பி - கொழும்பு
5. ரம்ஸானா ஸமீல் - அக்கரைப்பற்று
6. அஸ்மாடீன் - கம்பொல
7. ரமீனா ஐயூப் - எருக்கலம்பிட்டி
8. சுஹைதா ஏ கரீம் - மூதூர்
9. நளீபா அஸீஸ் அஸீம் - வெலம்பொட
10. றிப்கா அன்சார் - சாய்ந்தமருது
11. றியாஸா எம்.ஸவாஹிர் - நிந்தவூர்
12. சித்தி மிஸ்ரியா அமீன் - கிண்ணியா
13. ஜெஸீமா முஜிப் - மருதமுனை
14. பஸ்லா பர்ஸான் - காத்தான்குடி
15. M.S.ரஸ்மியா - வரிப்பத்தான்சேனை



**2023 SLPC மாநாடு நினைவாக பதக்கங்கள் வழங்கப்பட்ட SLPC உறுப்பினர்கள்**

1. கவிதாயினி பாரா தாஹிர்
2. கவிதாயின முப்லிஹா பிர்தௌஸ்
3. கவிதாயினி மும்தாஜ் பேகம் ஹமீட்
4. கவிதாயினி நிஸ்மியா நிஸாம்
5. கவிதாயினி சுஸானா முனாஸ்
6. கவிதாயினி அறபா மன்சூர்
7. கவிதாயினி மஷுறா சுஹுறுத்தீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



8. கவிதாயினி ஜுவைரியா சதீக்
9. கவிதாயினி MI றமீஸ் நிஷா
10. கவிதாயினி ஷாமென் நிஸாம்டீன்
11. கவிதாயினி சபீனா எம் இப்றாஹிம்
12. கவிதாயினி சுஹைதா ஏ கரீம்
13. கவிதாயினி பர்ஸானா எம்.பி
14. கவிதாயினி ஜெஸ்மின் றமீஸ்
15. கவிதாயினி சித்தி மிஸ்ரியா அமீன்
16. கவிதாயினி மஹிசாஸா பானு
17. கவிதாயினி பாத்திமா ஹக்கீமா அமீனுத்தீன்
18. கவிதாயினி AS குறைஷியா
19. கவிதாயினி SU கமர்ஜான் பீபீ
20. கவிதாயினி பஸ்லா பர்ஸான்
21. கவிதாயினி பௌஸியா கபூர்
22. கவிதாயினி றிப்கா அன்சார்
23. கவிதாயினி லறீபா பதூர்தீன்
24. கவிதாயினி அஸ்மா தீன்
25. கவிதாயினி ஐனுன் கதீஜா அன்சார்
26. கவிதாயினி பாத்திமா நுஸைபா நஸிர்
27. கவிதாயினி ஜலீலா முஸம்மில்
28. கவிதாயினி S றுஸ்தா பர்வின்
29. கவிதாயினி MT தஸ்லீமா
30. கவிதாயினி S வபீறா வ.்.பி
31. கவிதாயினி N.M ஆரிபா
32. கவிதாயினி ஹாஜறா கலீலுர்ரஹ்மான்
33. கவிதாயினி KF றிப்கா
34. கவிதாயினி AFF சுக்றா
35. கவிதாயினி BM லைலா அக்ஷியா
36. கவிதாயினி M S றஸ்மியா
37. கவிதாயினி S இஸ்மாலிகா ராஜா
38. கவிதாயினி ஜனிறா ஜலீல்
39. கவிதாயினி ரம்ஸானா ஸமீல்
40. கவிதாயினி ரமீனா ஐயூப்
41. கவிதாயினி ஸப்றா இல்முதீன்
42. கவிதாயினி நபீஸா எம் மபாஸ்
43. கவிதாயினி ஜெஸீமா முஜீப்
44. கவிதாயினி பஹ்மியா ஷரீப்
45. AR பாத்திமா ஸுபா
46. கவிதாயினி அஜீறா கலீல்டீன்
47. கவிதாயினி ரஹீமா இன்ஸார்.
48. கவிதாயினிMN மின்னத் ஸரா பரூஸ்
49. நளீபா அஸீஸ் அஸீம்
50. கவிதாயினி மர்ளியா சக்காப்
51. கவிதாயினி MACS ஜெஸீனா நிஸ்றீன்
52. கவிதாயினி றியாஸா எம் ஸவாஹிர்
53. கவிதாயினி MYMH பஸ்மியா
54. S.S ஆயிஷா
55. விவசாய வித்தகி MH முர்ஷிதா ஷிரீன்
56. சமையற்கலை நிபுணர் MC நௌஷா
57. பாத்திமா ஹுஸைமா அஹமட் - ஆரையம்பதி

**அவரி ஆசிரியர் விருதுகளை பெற்றுக் கொண்டோர்.**

01. அவரி 05 இன் ஆசிரியர்
**Dr. ஜலீலா முஸம்மில் -ஏறாவூர்**
02. அவரி 06 இன் ஆசிரியர்
**வபீறா வபி - கொழும்பு**
03. அவரி 07 இன் ஆசிரியர்
**அறபா மன்சூர் - கண்டி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீயின்றியேது நான் !?




உன் நேசத்தை
நீ சொன்ன போது
ஆச்சரியப்படவில்லை...
உன் கண்ணசைவின்
கருத்தை அறிந்தவள் நான்...

உன் வலிகளை
என் வலிகளாக்கினேன்...
உன் அன்பை
என் காதல் வளர
உரமாக்கினேன்...

உன்னை இதயத்தில்
மகுடமாக்கினேன்...
உன்னைக் காணாத போதெல்லாம்
வேதனையால் கீதம் பாடினேன்..

உன் பேரன்பினால்
என்னை மறந்தேன்...
நீயில்லாத வாழ்க்கை
பாலைவனமென உணர்ந்தேன்..


காரணமின்றி கனாக் கண்டேன்
கைதியாகி உன் இதயத்தில்
கிடக்கின்றேன்..

கல்லாய் இருந்த உள்ளம்
பூவாய் மலர்ந்தது...
சொல்லால் நீ கொடுக்கும் உயிரில்
என் தேகம் உயிர் வாழுது . . .

நீ காட்டும் வெறுப்பில்
கண்ணீர் வருகிறது..
நீ சிவக்கும் கோபத்தில்
தேகம் நடுங்குகிறது..

வானமின்றி நிலவேது
மேகமின்றி மழையேது..
கடலின்றி அலையேது
உயிரே ! நீயின்றி இங்கு நானேது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஸ்லா பர்ஸான்
காத்தான்குடி

# கிராமத்து நெஞ்சம்...

பாசமும் பசுமையும் பாசாங்காய் இல்லையே
வேசமும் துவேசமும் வேரிலும் அல்லவே
உள்ளத்து அன்பும் உவகையாய் இயற்கையும்
ஊற்றெடுக்கும் கேணியாய் உருவான இயல்பதாம்

ஐயறிவு ஜீவனும் குடும்பத்தில் ஓருறவாம்
ஐக்கியமாய் ஆன கிராமத்து வரமாம்
சிக்கல்கள் இல்லாத எளிமையே மணமாம்
சிரிப்பிலே கலப்பற்ற எழிலான மனமாம்


ஒற்றுமை ஒன்றிணைவு உயிர்ப்பிக்கும் இடமாம்
ஒன்றாகக் கலந்திடும் உறவுகள் களமாம்
இயந்திர இரைச்சல் இல்லாத தளமாம்
இதயமும் இன்புறும் இதமான வளமாம்


நோய்கள் உருவாக்காத உணவே மருந்தாம்
காய்கள் கனிகள் தருவெங்கும் விருந்தாம்
பாயில் உறங்கினும் நிம்மதி தருமாம்
வாயிற் கதவெங்கும் வரவேற்பே நிதமாம்


மதிப்போம் கிராமிய வாழ்க்கை முறையை
பதிப்போம் தரமிகு வாஞ்சை நிறைவை
சுகந்தமாய்ச் சூழல் பெறுவோம் தூய்மையாய்
அகந்தனில் ஊழலும் அறுப்போம் வாய்மையாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02வது ஆண்டு மலராய் இன்று 08 வது இதழில் தடம் பதிக்கிறது அவரி






















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKA PEN CLUB போசகர் சபை - 2023



கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாபி
விரிவுரையாளர்
MIT பல்கலைக்கழகம், நியூசிலாந்து



கலாநிதி மஸ்ரூபா முகம்மட் மஜீட்
சிரேஷ்ட நூலகர்
தென்கிழக்குப் பல்கலைக் கழகம் – ஒலுவில்



ஜனாப். ஏ.எல். தௌபீக்
கலாசார ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்
மாவட்டக் காரியாலயம், அம்பாறை



திருமதி. மர்ளியா சக்காப்
பிரதி அதிபர்
ஸாஹிறாக் கல்லூரி, திருகோணமலை



திருமதி. எஸ்.யு. கமர்ஜான் பீவி (JP)
சிரேஷ்ட எழுத்தாளர்



கவிஞர் அஸீஸ் எம் பாயிஸ்
பணிப்பாளர்
மின்னல் வெளியீட்டகம், ஒலுவில்



ஜனாப். ஏ.எம்.தௌபீக்
பிரதேச கலாசார உத்தியோகத்தர்
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SRI LANKA PEN CLUB இன் 2023 தேசிய மாநாட்டுப் புகைப்படங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை ரூபாய்: 350/- ISSN : 2961-5194